# சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்



முனைவர் வ. ஜெயா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சங்கப் பெண்பாற் புலவர்களின்
# மொழியும் கருத்தும்

முனைவர் வ. ஜெயா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

கலாநிலயம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் - திரு. பரணீதரன்)
வரிசை எண்: 6 நாள் 29-12-2003

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Caṅka-p-peṇpāṟ Pulavarkaḷiṉ Moḻiyum Karuttum |
| Author | : | Dr. V. Jeya<br>Reader in Tamil<br>Bharathiar University,<br>Coimbatore - 641 046 |
| General Editor | : | Dr. S. Sivakami<br>Associate Professor<br>International Institute of Tamil Studies<br>Chennai - 600 113 |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>IInd Main Road, C.I.T. Campus,<br>Chennai - 600 113. Ph: 22542992 |
| Publication No. | : | 473 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2003 |
| No. of Copies | : | 1200 |
| Paper Used | : | 18.6 TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | X + 102 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road, Ch - 4. |
| Subject | : | Criticism on Women poets of Sangam age |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

சங்க இலக்கியம் ஒரு பண்பாட்டுப் பெட்டகம். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரைப் பெற்ற அறிவுக் கருவூலம். சங்க இலக்கியக் காலம் ஒரு பொற்காலம் என்று போற்றப்படும் நிலையில், அவ்விலக்கியங்கள் ஒரு முழுமைத் தன்மையைப் பெற்று விளங்குகின்றதென்றால், அவற்றிற்கு முன் பன்னெடுங்காலந்தொட்டு ஒரு நெடிய இலக்கியப் பாரம்பரியம் இருந்திருக்க வேண்டும். சங்க இலக்கியங்களுள் பெண்பாற் புலவர்கள் பலர் தங்கள் பங்களிப்பைத் தந்துள்ளனர். காக்கைபாடினியார் நச்செள்ளையார், ஔவையார் போன்ற பெரும்புலவர்கள் சங்க இலக்கியங்களுக்கு அணி சேர்த்திருக்கின்றனர். இத்தகைய பெண்பாற் புலவர்கள் ஆண்பாற் புலவர்களுக்கு நிகராக ஆழ்ந்த புலமையும், அறிவார்ந்த சிந்தனையும், அரசியல் அறிவும் கொண்டு விளங்கினர் என்பதை அவர்கள் பாடல்கள் வழி அறியலாம். இவர்கள் வெறும் புலவர்களாக மட்டும் தங்கள் வாழ்க்கையை நடத்தவில்லை. அரசனுக்கு அறிவு புகட்டும் ஆசானாகவும், இருந்திருக்கிறார்கள். அரசனைப் போற்றிப் பாடுவது இவர்கள் பண்பாக இருந்தாலும் அரசன் தவறிழைக்கும்போது அவர்கள் வாளா இருந்ததில்லை. அரசனைக் கடிந்து அவனது தவற்றைச் சுட்டிக்காட்டி அவனைத் திருத்தவும் செய்திருக்கிறார்கள்.

பெண்பாற் புலவர்களில் ஔவையாரின் பங்கு சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கிறது என்பதை அவரது பாடல்களைக் கொண்டு ஆராய்ந்தால் நன்கு புலனாகும். அறிவுறுத்துதல், தூது செல்லுதல், சந்து செய்வித்தல் போன்ற அரசு சார்ந்த பணிகளிலும் பெண்பாற் புலவர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பெண்பாற் புலவர்களின் பாடல்கள் காலம், இடம், சூழல், பொருண்மை போன்றவற்றிற் கேற்ப மொழி நடையிலும் கருத்துப் புலப்பாட்டிலும் வேறுபட்டு அமைந்துள்ளன. இவற்றை ஆய்வுசெய்து இப்புலவர்களின் தனித் தன்மையை வெளிப்படுத்திக்காட்டுவது தமிழ் உலகத்தின் இன்றியமையாத பணியாகும். இப்பொருண்மையை அடியொற்றிக் கலாநிலையம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளை சார்பில் இச்சொற்பொழிவைக் கோயமுத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்

தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் வ. ஜெயா அவர்கள் "சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்" என்ற தலைப்பில் நிகழ்த்தியுள்ளார். இவர் இப்பொருண்மையில் பெரிதும் முயன்று சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை, கருத்து ஆகியவற்றை ஆய்வுசெய்துள்ளார். உரிய தரவுகளோடு தெளிந்த நிலையில் இவ்வாய்வை முனைவர் வ. ஜெயா அவர்கள் மேற்கொண்டுள்ளார். குறித்த காலத்தில் எழுத்துருவைத் தந்து இச்சொற்பொழிவு நூலாக வெளிவருதற்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளார். இச்சொற்பொழிவைச் **சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்** என்ற தலைப்பில் நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை அடைகிறது.

இந்நூல் தமிழ் ஆர்வலர்களுக்கும், சங்க இலக்கிய அறிஞர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பெரும் பயனுடையதாக அமையும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கலாநிலையம் டி.என். சேஷாசலம் அவர்கள் பெயரில் இவ் அறக்கட்டளையை நிறுவிய திரு. பரணீதரன் அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ் அறக்கட்டளை வரிசையில் 6ஆம் சொற்பொழிவாக இச்சொற்பொழிவு நிகழ்கிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.** அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் **திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இச்சொற்பொழிவு நூலாக உருவாகக் காரணமாக இருந்த இவ் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திரு. ஸ். கோபிநாத்துக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை

இயக்குநர்

*நாள்: 22-12-2003*

# நன்றியுரை

கலாநிலையம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளைச் சொற்பொழிவிற்காக, 'சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்' எனும் தலைப்பில் ஒரு நூலை எழுத வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கும் நிறுவனத்திற்கும் முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழாய்வு தொன்றுதொட்டே நடந்து வருவது. இதில் பல்வேறு வகையான ஆய்வுகள் அடங்கும். இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறவியல், தகவல் தொடர்பியல், அறிவியல் எனப் பல பிரிவுகளில் அடங்கும் ஆய்வுகள் ஒரு வகை. இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் சேர்ந்த முத்தமிழ் என்ற பிரிவில் அடங்கும் ஆய்வுகள் மற்றொரு வகை. சங்கத் தமிழ், இடைக் காலத் தமிழ், இக்காலத் தமிழ் எனப் பல்வேறு காலக் கட்டங்களில் வழக்கிலிருந்த/வழக்கிலிருந்து வரும் தமிழ் பற்றிய ஆய்வுகள் இன்னொரு வகை. தெய்வத் தமிழ், ஆட்சித் தமிழ், சட்டத் தமிழ், அறிவியல் தமிழ், தகவல் தொடர்பியல் தமிழ் என்று மொழிப் பயன்பாட்டின் அடிப்படையில் பாகுபாடு செய்யப்பட்டு இன்று மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் மற்றொரு வகை. மு.வ., திரு.வி.க., பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், அறிஞர் அண்ணா போன்ற நூலாசிரியர்கள் பயன்படுத்திய தமிழ் பற்றிய ஆய்வுகள் இன்னொரு வகை. இவ்வாறு பல்வேறு ஆய்வுகள் நடந்து கொண்டு வருகின்றன.

சங்க இலக்கியம் செவ்வியல் இலக்கியம்; சங்ககாலம் பொற்காலம் என அறிஞர்களால் போற்றப்பட்டது. அக்கால மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வாணிபம், தொழில்கள், உணவு முறைகள், வாழ்க்கை நெறிமுறைகள், அக்காலத்தில் வாழ்ந்திருந்த சேர, சோழ, பாண்டிய பெரு வேந்தர்கள், குறுநில மன்னர்கள், இனக்குழுத் தலைவர்கள், கடையேழு வள்ளல்கள் அவர்களின் ஆட்சித் திறன், அரசியல், கொடைத்திறன், போர்த்திறன் போன்ற பல்வேறு கருத்துகள் இவ்விலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றன. இவ்விலக்கியங்கள்

ஒரே புலவரால் ஒரே காலக்கட்டத்தில் பாடப்பட்டதன்று. பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு புலவர்களால் பாடப் பட்ட பாடல்களைத் தொகுத்து ஒரு வரையறைக்குட்படுத்தித் தந்துள்ளனர் அறிஞர்கள். சங்ககாலப் புலவர்களில் நாற்பத்தி ரெண்டு பெண்பாற் புலவர்கள் தங்கள் காலச் சமுதாய நிலையினைப் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளனர். இன்றைய காலக்கட்டத்தில் பெண்ணியச் சிந்தனைகள் வெகு வேகமாகப் பரவி வருகின்றன. பெண்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், சமுதாயச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு எதையும் எதிர்நோக்கும் மன உறுதியையும், தன்னம்பிக்கையையும், துணிவையும் தரும் கருத்துகளைத் தங்கள் படைப்புகள் வாயிலாகப் புலப்படுத்தி வருகின்றனர். இன்று பெண்ணிய மொழிநடை எனத் தனியான மொழிநடையும் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்தகைய கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் படைப்புகளில் எத்தகைய சிந்தனைகள் பொதிந்துள்ளன. அவர்களின் நோக்கம் யாது? பெண்களுக்கெனத் தனி உரிமைகள் சிறப்பிடம் உள்ளனவா என்பதை அறியவேண்டும் என்பதற்காக இத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தினை எனது மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது அவர்கள் வினவிய ஐய வினாக்கள் பெண்பாற் புலவர்களின் படைப்புகளை ஆழ்ந்து படிக்க வேண்டும் எனும் ஆசையினைத் தூண்டின. ஆகவே என் மாணவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் எழுதுவதற்கு எனக்கு உற்சாகமும் ஊக்கமும் தந்து அவ்வப்போது பல்வேறு கருத்துகள் வழங்கிய எனது துணைவர் முனைவர் வே. தயாளன் அவர்களுக்கும், என்னுடன் பணியாற்றும் என்துறை ஆசிரியர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் கட்டுரைகளை அவ்வப்போது படி எடுத்துத் தந்த எனது ஆய்வு மாணவிகளான செல்வி மு. அய்யம்மாள் மற்றும் செல்வி இரா. சித்ரா ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலிற்குரிய தலைப்பினைக் கேட்டுப் பல்வேறு கருத்துகள் வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைப் படிக்கும் வாசகர்கள் இதற்கு மேலும் பல விளக்கங்கள் தந்தால் அதனை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் - 46
16-12-2003

**வ. ஜெயா**

# தன் விவரக் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | முனைவர் வ. ஜெயா |
| வயது, பிறந்த தேதி | : | 47, 31-07-1957 |
| கல்வித் தகுதி | : | எம்.ஏ., எம்.ஏ., (மொழியியல்) எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி., பட்டயப் படிப்பு - தகவல் தொடர்பியல் |
| படித்த நிறுவனங்கள் | : | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பட்டயப் படிப்பு - தகவல் தொடர்பியல் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை - 21.<br>எம்.ஏ., (மொழியியல்), பிஎச்.டி., பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் - 46. |
| பணியாற்றிய இடங்கள் | : | 1. காந்தி கிராமிய பல்கலைக் கழகம், ஜூலை 1989.<br>2. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், நவம்பர் 1989. |
| முனைவர்பட்ட ஆய்வேடு | : | பாரதி மொழிநடை |
| Field of specialisation | : | 1. தமிழ் நடையியல்<br>2. பக்தி இலக்கியம்<br>3. நாட்டுப்புறவியல்<br>4. தகவல் தொடர்பியல் |

| முனைவர்பட்ட ஆய்வாளர்கள்: | Awarded | Guided |
|---|---|---|
| | 10 | 8 |

ஆய்வு நிறைஞர்பட்ட ஆய்வாளர்கள்: Awarded Guided

| | | |
|---|---|---|
| ஆய்வு நிறைஞர்பட்ட ஆய்வாளர்கள்: | Awarded | Guided |
| | 30 | 4 |

வெளிவந்த கட்டுரைகள் : 100 (உலகளவு - 5; தேசிய அளவு - 5; மாநில அளவு - 90)

வெளிவந்த நூல்கள் :
1. பாரதி மொழிநடை - 1989
2. தகவல் தொடர்பியல் - 1989
3. பாரதித் தமிழ் - 1987
4. குறள் மொழியும் நெறியும் - 1993
5. பக்தி இலக்கிய உருவாக்கம் - 1994
6. மொழியியல் - 1997

பதிப்பித்த நூல்கள் :
1. தமிழாய்வில் புதிய அணுகு முறைகள் (கட்டுரைத் தொகுப்பு) 1992
2. கள ஆய்வு அணுகுமுறைகள் (கட்டுரைத் தொகுப்பு) 2003

**வெளிவந்த கட்டுரைகள், இடம்பெற்ற நூல்கள், இதழ்கள்**

1. தமிழியல் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
2. தமிழ்க் கலை - தமிழ்ப் பல்கலைக்கழகம்
3. புலமை, தமிழ்ப்பொழில் - தஞ்சாவூர்
4. பண்பாடு - இந்து அறநிலையம், யாழ்ப்பாணம் (இலங்கை)
5. அறிவியல் தமிழ்க் கழகம்
6. அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்.
7. நாட்டுப்புறவியல்
8. மொழியியல்
9. வளரும் தமிழ் உலகம்
10. களஞ்சியம்

**பரிசுகள்**

1. எம்.ஏ. மொழியியல் பட்டத்திற்காகப் பல்கலைக்கழக முதல் மாணவர் எனத் தேர்வு பெற்றமை.
2. 1993 - குறள் மொழியும் நெறியும் என்ற நூலிற்குத் தமிழக அரசு முதல் பரிசு அளித்தமை.
3. 1994 - அறிவியல் உரைக்கோவையின் அமைப்பும் நிலை பேறாக்கமும் என்ற கட்டுரைக்கு அண்ணா பல்கலைக் கழகம் இரண்டாவது பரிசு வழங்கியமை.

# உள்ளே


| | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | 1 |
| மொழி | 8 |
| கருத்து | 50 |
| சமுதாயம் | 79 |
| முடிவுரை | 96 |
| துணைநூற் பட்டியல் | 101 |

# முன்னுரை

## இலக்கியம்

இலக்கியம் என்பது சிறந்த கருத்துகளை உள்ளடக்கிய ஒரு நூல் என்கிறார் எமர்சன் (1950:36). ஸ்டாபோர்டு புருக் என்பவர் (1950:36) படிப்போருக்கு இன்பம் தரும் வகையில் நுண்ணறிவு வாய்ந்த அறிஞர்கள் தம் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் முறைப்படுத்தி எழுதுவதே இலக்கியம் என்று விளக்குகிறார். ஹட்சன் (1991:264) என்பவர் தன்கண் அமைந்த நுவல் பொருளும் அதனை விளக்கும் முறையும் பொதுவாக மக்களைக் கவரும் முறையில் அமைந்து வடிவம் இன்றியமையாததாகி அதன் வாயிலாக இன்பம் நல்குவது இலக்கியமாகும் என்று கூறுகிறார். இவ்வாறு பலவாறு இலக்கியத்தின் இலக்கணத்தை (Grammar of literature or definition of literature) வரையறுத்துக் கூறியுள்ளனர். அத்தகைய இலக்கியத்தின் தனித்தன்மைகள் என்னென்ன, பொதுப் பணிகள் யாவை, சமுதாயத்தில் அது பெறுமிடம் யாது என்று அணுகி ஆராய்ந்து பார்த்தால்தான் அதன் உண்மை நிலை நன்கு தெரியவரும்.

இலக்கியம் பயில்தொறும் சுவை தருவது. ஏனைய நூல்களுக்கு அத்தன்மை அவ்வளவிற்கு இல்லை. இலக்கியத்திற்கேயுரிய தனித்தன்மை இதுவாகும். வேதியியல், இயற்பியல், தாவரவியல், நிலவியல், புள்ளியியல் முதலான நூற்களை ஒரு முறையோ, இருமுறையோ படித்து அவற்றின்கண் உள்ள செய்திகளையும் கருத்துகளையும் உண்மைகளையும் அறிந்து கொண்டபின்னர் அவற்றை மேலும் படிப்பதற்கு யாரும் பெரிதும் விரும்புவதில்லை. ஆனால் இலக்கியங்களைப் படிக்குந்தோறும் இன்பத்தில் திளைக்கிறோம். மீண்டும், மீண்டும் அவற்றைப் படிக்க முனைகிறோம். ஏனெனில் பயிலப் பயில அதில் சொல்லப்பட்டுள்ள கருத்தின் ஆழமும் நுட்பமும் நமக்கு நன்கு புலனாகின்றன என்பதே. இலக்கியத்தை முதன்முறையாகப்

படிக்கும்போது ஏற்படும் இன்பமானது மீண்டும் மீண்டும் படிக்கும்போது பெருகிக் கொண்டே செல்கிறது என்பர். நல்லிலக்கியத்தைப் படிக்கப்படிக்க அவ்விலக்கியத்தின் மீது விருப்பம் ஏற்படுமேயன்றி அதன்பால் வெறுப்பு ஏற்படுவதில்லை. மற்ற நூல்களுக்கு இதுபோல இன்பத்தையும் விழைவையும் ஆர்வத்தினையும் ஏற்படுத்தும் நுண்ணிய ஆற்றல் இல்லை என்றே குறிப்பிட வேண்டும். இலக்கியத்தைப் படிக்கும் போது நம்முள்ளம் உணர்ச்சி வெள்ளத்துள் மூழ்குகிறது. அதாவது, அது நம் உள்ளுணர்வைப் பெருக்குகிறது என்கிறார் தா.ஏ. ஞானமூர்த்தி (1986:49).

உலகின் பல்வேறு பகுதிகளிலும் தொன்றுதொட்டே இலக்கியங்கள் படைக்கப்பட்டு வந்துள்ளன. ஆங்காங்கே வாழ்ந்த-வாழ்ந்து வருகின்ற சமுதாயங்களைப் பற்றியும் அவற்றின் அமைப்பு, இயக்கம், வாழ்வு, வரலாறு ஆகியவற்றோடு ஒருங்கிணைந்து இலக்கியங்களை எளிமையாகவும் இனிமை யாகவும் ஏற்புடைய வகையிலும் சமுதாயம் படித்தும் பயன் பெறும் முறையிலும் பல்வேறு இலக்கியப் படைப்பாளிகளும், ஆசிரியர்களும் உருவாக்கித்தந்துள்ளனர்/தந்தும் வருகின்றனர். இத்தகைய இலக்கியங்களுள் சில காலங்கடந்து நிற்பவை. வேறுசில பொதுமைக் கருத்துகளைப் பலருக்கும் ஒவ்வும் வகையில் எடுத்துச் சொல்பவை. இன்னும் சில குறிப்பிட்ட சமுதாய நோக்கினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. சில படைப்புகள் தனித்தன்மை பெற்று, குறிப்பிட்ட சமுதாயத்திற்கெனவும் சமுதாயப் பணிக்கெனவும் உருவாக்கப் பட்டவை. குறிப்பாக, காலச்சூழல், சமுதாயச் சூழல், மக்கள் வாழ்வியல், அவர்தம் கல்வி, தொழில், பொருளாதாரம், ஈடுபாடு போன்ற பல்துறைகளின் வாழ்வு, வளர்ச்சி, சமுதாய வரலாறு போன்றவற்றை உள்ளடக்கியவை. சில இலக்கியங்கள் ஆங்காங்கே சமுதாயங்களின் இயங்கும் தன்மை (Dynamic nature) கொண்டவையாக விளங்கிய நிலையில் அவர்களது மதம், சமயம், அறம், அரசியல் போன்றவற்றைச் சார்ந்து எழுந்தவை. இத்தகைய இலக்கியப் போக்கு (Literary trend) ஒரு மொழியில் ஒரு சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள நிலையினைக் கொண்டு அச்சமுதாயம் பெற்றிருந்த வாழ்வினையும் வரலாற்றினையும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். காட்டாக, தமிழ் மொழியில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்பப் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இதற்குக் காரணம் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றமே எனலாம்.

தொழில், கல்வி, சமயம் ஆகியவற்றால் மாற்றங்கள் உண்டாவது இயற்கையே. அந்நிலையில் சமுதாயமும் அதற்கேற்ப மாற்றம் பெறுகிறது. சமுதாய மாற்றம் நிகழும்போது சமுதாயம் சார்ந்த இலக்கியத்திலும் மாற்றங்கள் பிரதிபலிக்கின்றன. காட்டாக,

சங்க இலக்கியம்
- காதல் (அகம்)
- வீரம் (புறம்)

சங்கம் மருவிய இலக்கியம்
- காதல் (அகம்)
- வீரம் (புறம்)
- அறம் (நீதி, வாழ்வியல் நெறிமுறைகள்)

எனும் அமைப்பினைப் பெற்று விளங்குவதைக் குறிப்பிடலாம்.

**இலக்கியக்கல்வி – இலக்கிய ஆய்வு**

இலக்கியக் கல்வி என்பது இன்றைய நிலையில் இலக்கிய உருவாக்கம் (Literary creation), இலக்கியச் சுவைப்பு (Literary taste), இலக்கிய ஆய்வு (Literary research), இலக்கியம் கற்பித்தல் (Literary teaching) எனப் பகுக்கலாம். இவை ஒன்றிற்கொன்று நெருங்கியத் தொடர்பு கொண்டவை. இலக்கியம் சமுதாயத்தைப் பிரதிபலித்தும், சமுதாயப் பிரிவினர் படித்து இன்புறுவதற்காகவும், சமுதாயத்தின்பால் ஈடுபாட்டினை ஏற்படுத்துவதற்காகவும் படைக்கப்படுகிறது; பயன்பாட்டிற்குக் கொண்டு வரப் படுகிறது. இவ்வாறு பயன்பாட்டிற்குக் கொண்டு வரும்போது இலக்கியம் முறையாகக் கற்பிக்கப்படுகிறது. தானே படித்து அறிந்து கொள்ளும் வாய்ப்பும் பல்வேறு மூலங்கள் வாயிலாக வழங்கப்படுகிறது. தொடக்கப்பள்ளி முதல் உயர்கல்வி வரை இத்தகைய இலக்கியம் கற்பித்தலை, கற்றலை நம் கல்விச் சூழலில் இன்று கண்கூடாகக் காண்கிறோம். இத்தகைய இலக்கிய அமைப்பு, பயன்பாடு போன்றவற்றின் கூறுகளை முறையான ஆய்விற்கு உட்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு மொழிகளிலும் சமுதாயங்களிலும் நிலைபேறுபெற்று விளங்கி வரும் இலக்கியப் படைப்புகள்

இன்று ஒன்றோடொன்று ஒப்பீட்டு நோக்கப்படுகின்றன. இவை ஒருங்கிணைந்து செயல்படும் நிலையில் அவர்தம் இலக்கியங்களில் கொண்டு கொடுப்புப் பணி வளர இடமுள்ளது. மேலும் ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் ஏற்படுகிறது. இதனால் இலக்கியம் மாற்றத்திற்குள்ளாகிறது; வளர்ச்சிக்கும் பொதுமைக்கும் இடம் தருகிறது. அனைத்திற்கும் மேலாக இலக்கியம் இயங்கு தன்மை (Dynamion) பெற்று விளங்குகிறது. இவற்றையெல்லாம் முறைப்படுத்தி, தெளிவான அணுகு முறைகளைக் கொண்டு இலக்கியத்தை ஆய்வு செய்யும் பணி இன்று முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒருகாலக் கட்டத்தில் இலக்கிய ஆய்வு என்பது அதனை விரிவுரையாக அமைத்துத் தெளிவுபடுத்தவும் பொருண்மைத் தெளிவினை ஏற்படுத்தவும் அப்பொருண்மை வெளிப்பாட்டில் காணப்படும் சிறப்புகளையும் பல்வேறு நயங்களையும் பாராட்டும் நிலையிலும் அமைந்திருந்தது. அது இலக்கிய நயம் பாராட்டல் (Literary appreciation) என அழைக்கப்பட்டது. பின்னர் இலக்கியத் திறனாய்வு (Literary criticism) என்ற அடிப்படையில் இலக்கியங்களை மதிப்பீடு செய்து இலக்கிய வளர்ச்சிப் போக்கினைத் தெளிவுபடுத்தும் பாங்கு முறைப் படுத்தப்பட்டது என்றாலும் இத்தகைய இலக்கியப் பணிகள் முறையான இலக்கிய ஆய்வாகக் கருதப்படவில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

### சங்க இலக்கியம்

சங்ககால இலக்கியம் என்பது எட்டுத்தொகை, பத்துப் பாட்டு எனும் நூல்களின் தொகுப்பேயாகும். இவற்றில் அக்கால மக்களின் அகவாழ்க்கையின் நெறிமுறைகளும் புறவாழ்க்கையின் நெறிமுறைகளும் விரிவாக விளக்கப் பட்டுள்ளன. அகவாழ்க்கையில் கூறப்பட்டுள்ள சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாஅர் என்ற நிலையில் களவு, கற்பு வாழ்க்கை நிலைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன சங்க இலக்கியங்கள். அக்காலத்தில் ஆட்சி செய்த வேந்தர்கள், குறுநில மன்னர்கள், இனக்குழுத் தலைவர்களின் வீரம், ஆற்றல், கொடை ஆகியவற்றை விளக்குகிறது. வேந்தர்களும், குறுநில மன்னர்களும், இனக் குழுத்தலைவர்களும் தங்கள் மக்களைப் பகைவரிடமிருந்து காக்கவும், நாட்டை விரிவுபடுத்தவும் அடிக்கடிப் போரில் ஈடுபட்டனர். போரில் விழுப்புண்பட்டு

வீரமரணம் அடைவது பெருமையாகக் கருதப்பட்டது. புறமுதுகிட்டு ஓடுவதும் முதுகில் அம்பு பாய்தலும் இழிவாகக் கருதப்பட்டன. இவற்றைப் புற இலக்கியங்கள் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றன.

"நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய
அருஞ்சமம் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண்பட்ட மாறே" (புறம். 93)

என்ற பாடல் விழுப்புண்பட்டு இறத்தலையும் வாளால் பிளந்து அடக்கம் செய்யும் இழிதகைவையும் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே வீரன் என்றால் போரில் மாய்வதுதான் சிறப்பு என்ற எண்ணம் அக்கால மக்களிடத்திலிருந்தது என்பதை இது சுட்டுகிறது.

"கலிகொள் யாணர்வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே" (புறம். 66)

போரில் முதுகில் அம்பு பட்டதால் அதற்காக நாணிச் சேர மன்னன் வடக்கிருந்து உயிர்துறந்தான் என வெண்ணிக் குயத்தியார் பாடுகின்றார். புறமுதுகில் புண் ஏற்படுவது இழுக்கு; வீரர்களுக்கு வீரமல்ல என்ற எண்ணம் அக்கால மக்களிடம் இருந்ததை இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது.

ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் போர் ஆர்வம் அதிகமிருந்தது என்பதைப் புறப்பாடல்கள் உணர்த்துகின்றன. நேரடியாகப் போரில் ஈடுபடாவிட்டாலும் தனது உறவினர்களை ஊக்குவித்துப் போருக்கு அனுப்பும் வீரவுணர்வு அக்கால மகளிருக்கு இருந்தது என்பதை,

"களிறு பொரக்கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவல் அங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே என்ஐயும்
ஓ . . . வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே" (புறம். 306)

என்ற பாடல் சிற்றூரில் வாழும் பெண் ஒருத்தி நடுகல்லை வழிபட்டு நாள்தோறும் வீட்டினுக்கு விருந்தினர் வரவேண்டும் என்றும் தன் தலைவனும் அரசனும் போரில் ஈடுபடவேண்டும் என்றும் வேண்டுவதைச் சுட்டிக்காட்டுகிறது.

"மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன் ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே" (புறம். 279)

என்ற பாடல் முதல் நாள் போரில் தன் தமையனையும் மறுநாள் போரில் தன் கணவனையும் பறிகொடுத்த மங்கையொருத்தி இன்று போர்முரசு கேட்டவுடன் தன் ஒரே மகனைப் போருக்குச் செல்க என்று கையில் வேல் கொடுத்து அனுப்புகிறாள்; இத்தகைய வீர உணர்வுடையவர்கள் அக்காலத்தில் இருந்தனர் என்பதைப் புலப்படுத்துகிறது. தன்நாட்டிற்குப் பகைவர்களால் ஆபத்து என்பதை அறிந்த ஆணும், பெண்ணும் வீரவுணர்வோடு போருக்குச் செல்ல விரும்புகின்றனர் என்பதையே இப்பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு போர் ஆற்றலில் மட்டுமல்ல கொடைத் திறனிலும் சிறந்தவர்களாக விளங்கினர்.

"வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிறர்
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே" (புறம். 140)

என்ற பாடல் வரும் இரவலர்களின் தகுதியறிந்து வழங்கும் பண்பை விளக்குகிறது.

ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை

நுண்ணூற் கலிங்கம் உடீஇ உண்ம்எனத்
தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்
கோண்மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ
ஊண்முறை ஈத்தல் அன்றியும் கோண்முறை
விருந்திறை நல்கியோனே" (புறம். 392)

என்ற பாடல் இரவலருக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் தந்து உபசரித்து வரவேற்று மகிழ்ந்தனர்; அவர்கள் விடை பெறும்போது தேவையான பரிசுப் பொருட்கள் தந்து மகிழ்வுடன் அனுப்பி வைத்தனர் என்பதை விளக்குகிறது.

இவ்வாறு வாழ்க்கையின் நெறிமுறைகளை விளக்கும் சங்க இலக்கியங்களில் பெண்பாற்புலவர்களும் பாடியுள்ளனர். நாற்பத்திரெண்டு பெண்பாற்புலவர்கள் அகம், புறம் என்ற இரு நிலைகளில் பாடியுள்ளனர். அப்புலவர்கள் பாடியுள்ள பாடல்களின் வழி அக்காலச் சமுதாயம், பழக்க வழக்கம், பண்பாடு, பெண்களின் நிலை, பெண்களின் எண்ணம் வெளிப் படுவதை அறிய முடிகிறது. பெண்களில் சிலர் அரசவைப் புலவராகவும் இருந்துள்ளனர். தூது செல்லும் பணியில் பெண்கள் ஈடுபட்டனர் என்பதையும் அறிய முடிகிறது. இப்பாடல்களின் வாயிலாக இலக்கியத்தின் குறிக்கோள், அதை வெளிப்படுத்தும் பாங்கு, அவர்கள் கையாண்ட மொழிநடை ஆகியவற்றை உணர்ந்து கொள்ள முடிகிறது.

# மொழி

நமது எண்ணங்களையும் கருத்துக்களையும் மொழியின் வாயிலாக வெளிப்படுத்துகிறோம். ஒவ்வொரு தனி மனிதனும் தன் திறனுக்கு ஏற்ற வகையில் மொழியைப் பயன்படுத்துகிறான். இதனால் மொழிப் பயன்பாட்டில் பல வேறுபாடுகள் தோன்றுகின்றன. இவ்வேறுபாடு மொழி சார்ந்த - மொழிசாராத என்ற இரு வகைகளில் அமையலாம். அவரவர் ஆளுமைத் திறனுக்கேற்பவும் மொழிப் பயன்பாடு சமூக மற்றும் மொழித் திறனுக்கேற்பவும் வேறுபடுகின்றது. எல்லோரும் ஒரே மொழியைப் பேசுவோராக இருந்தாலும் தமது எண்ணத்தை வெளியிடும்போது பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவதுண்டு. சிலர் பேசும்போது என்ன பேசுகின்றனர் என்பதே புரிவதில்லை. சிலரின் பேச்சில் மிகைக் கூறுகள், திரும்பக் கூறுதல் போன்றவை தென்படும். இன்னும் சிலருடைய பேச்சில் சொல்ல வந்த கருத்துத் தெளிவாகவும், செறிவாகவும், சுருக்கமாகவும் காணப்படும். வேறு சிலர் தூய தமிழில் பேசுகின்றேன் என்று எண்ணிக் கொண்டு தேவையில்லாத கருத்துகளையெல்லாம் பேசிக்கொண்டு சொல்ல வந்த கருத்தைச் சொல்ல முடியாமல் தடுமாறுவர். இவ்வாறு தனிமனிதனின் பேச்சில்/எழுத்தில் காணப்படும் வேறுபட்ட கூறுகள் அவனுடைய மொழியறிவு, தேர்ந்தெடுக்கும் சொல்லாட்சி, உரிய முறையில் வெளிப் படுத்தும் பாங்கு இவற்றை வெளிப்படுத்துவதே நடையியலாய்வு எனப்படுகிறது. ஒரு மனிதன் தன் நண்பனோடும் குடும்பத்தோடும், உயர் அதிகாரியோடும் மாணவர்களோடும் உரையாடும் போது அவனது பேச்சில் வேறுபாடு காணப் படுகிறது. இத்தகைய வேறுபாடு தோன்றக் காரணம் என்ன? எந்தெந்தச் சூழலில் எத்தகைய மொழியமைப்பினையும், மொழிப்பயன்பாட்டையும் பயன்படுத்துகிறான்? என்ற வினாக்கள் எழுகின்றன. இத்தகைய வினாக்களுக்குச் சரியான

தீர்வு தருவது நடையியலாய்வே. இவ்வாய்வு ஒரு மனிதன் பயன்படுத்தும் மொழியமைப்பினையும் மொழிப் பயன் பாட்டையும் ஒருங்கிணைத்து நோக்கி அதன் தன்மையினைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இதன் வழியாக அம்மனிதனின் மொழியறிவு, ஆளுமைத் திறன், தனித்திறன், மையப் பொருண்மை, அதை வெளிப்படுத்தும் பாங்கு, எளிமை, தெளிவு, செறிவு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை ஆகியவற்றையும் அறியமுடிகிறது. ஆகவே நடையியலாய்வானது தனிமனிதனின் பேச்சினையோ/எழுத்தினையோ மட்டுமல்லாது ஒரு காலக்கட்ட இலக்கியத்தினையும், ஒருவரின் படைப்பினையும் தெளிவாக ஆய்வதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் உதவுகிறது என்பதில் ஐயமில்லை.

## நடையியல் விளக்கம்

பொதுவாக நடை என்பது மனிதனின் நடக்கும் செயலைக் குறிப்பதற்கும், அவனது ஒழுக்கத்தினைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சொல்லாகும். இச்சொல் கலைச்சொல்லாக இன்றைய மொழி இலக்கிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒருவர் தனது எண்ணத்தை வெளியிடும் முறையையே நாம் நடை என்கிறோம். மொழியமைப்பின் அடிப்படையில் எழுத்து, சொல், தொடர், வாக்கியம், உரைக்கோவை ஆகியவை இணைந்து நடை யமைப்பாக அமைகின்றன.

இந்த நிலையினைப் பேச்சு முறையில் ஒலி, ஒலியன், உருபன், சொல், தொடர், வாக்கியம், உரைக்கோவை என நாம் கூறுகிறோம். நடை என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் தரப்பட்டுள்ளன. இதுதான் நடையின் விளக்கம் என்று கூறுவது சற்று கடினம். "சொற்களைத் தொகுக்கும் முறையே நடை" என்கிறார் பொன்னுதுரை (1966:7). "நடை என்பது எழுத்தாளர்களின் பல்வேறு வகையான படைப்புகளைப் படிக்கும் நிலையில் படிப்போரைக் கவரும், தன்வயப்படுத்தும் கருவியாகும்" என்பார் கிப்பன் எட்வர்ட் (1971:416). அழகிய செஞ்சொற்களால் இனிமையாகவும், எளிமையாகவும், நுட்பமாகவும் கருத்தினை உணர்த்த வல்லதே சிறந்த நடையாகும் என்கிறார் ஹ்யூம் (1972:16). நடை என்பது கவிஞனின் தனித்தன்மை, கவிஞர் உணர்த்தும் உத்தி, இலக்கிய உச்சநயம் என்பதேயாகும் என்று கருத்துரைப்பார் மர்ரே

(1972:7). புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய நடை திட்பமும் நுட்பமும் அமைந்ததாக இருக்கும். அவருடைய உள்ளத்தில் ஆர்வம் மிகுதியானால் நடையில் ஆற்றல் மிகுதியாகும் என்பார் வரதராசனார் (1959:238). பொது மொழியினை இலக்கிய மொழியாக மாற்றும் போது ஏற்படும் மரபுப் பிறழ்ச்சிகளே நடையியல் சிறப்புக் கூறுகள் என்பார் ஹாலிடே (1964:303). நடை என்பது மனிதனின் ஆளுமையை உணர்வதும் உணர்த்துவதுமாகிய சொற்சிற்பங்களின் ஊடகமே. அதாவது குறிப்பிட்ட முறைகளில் தேர்ந்தெடுத்து ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட சொற்களின் கோவையே மொழி என்று கூறப் படுகிறது. ஒரு பொருளை உணர்த்த எத்தனையோ சொற்கள் தொடரமைப்புக்கள் இலக்கண அமைதிகள் இருக்கவே செய்கின்றன. இத்தேர்வு முறை ஆளுக்கு ஆள் வேறுபடவே செய்யும். ஆகவே ஒருவரை மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவரது நடையாகும் என்பார் இராமலிங்கம் (1977:163). ஒன்றுக்கு மேற்பட்ட மொழி அக அமைப்புகளைப் பல்வேறு வகையான மாற்றல் விதிகளிலிருந்து ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் புற அமைப்பிற்குக் கொண்டு வரும் முறையே நடை என்பதாகும் என்கிறார் நுஃமான் (1984). ஒரு மொழியின் பயன்பாட்டிலுள்ள ஒரே பொருளைத் தரக்கூடிய ஆனால் அமைப்பில் வேறுபட்டு நிற்கும் மொழிக்கூறுகள் வேறுபட்ட நடையியல்பைக் கொண்டவையாகும் என்று கருத்துரைப்பார் ஹாக்கெட் (1958).

சில அகராதிகளும் நடையினைப் பற்றி விளக்கங்கள் தந்துள்ளன. தனக்கேயுரிய ஒரு தனித்தன்மை வாய்ந்த முறையினால் தனது கருத்துகளை ஓர் ஆசிரியன் வெளிப் படுத்தும் முறையே நடையாகும் என்று சேம்பர்ஸ் அகராதி விளக்கம் தருகிறது (1970:461). நடை என்பது பேசுகின்ற எழுதுகின்ற முறை என்றும் ஏதாவதொரு செயலை ஒருவர் செய்கின்ற வகையைக் குறிக்க சொல் என்றும் குறிப்பாக இச்சொல் ஒரு கலைஞனுடைய சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டுமாறு அமையும்போது அச்செயல் வகையைக் குறிக்கப் பயன்படும் என்றும் விளக்குகிறது ஆங்கில வாசகர் அகராதி (1973:53). இவ்வாறு நடை என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் பலவிதமாக விளக்கங்களைக் கூறியுள்ளனர்.

**நடைவகைகள்**

மொழியில் அமைந்துள்ள நடையினை முக்கியமாக நான்கு வகையாகப் பிரிப்பர்.

1. வருணனை நடை (Narrative style)
2. விளக்க நடை (Descriptive style)
3. கவிதை நடை (Poetry style)
4. உரை நடை (Prose style)

மேலும் இதனைப்

புலவர் நடை;
தனித்தமிழ் நடை (Puritan style)
தாளிகை நடை (Journalistic style)
படைப்பிலக்கிய நடை (Creative style)
அரசியல்வாதிகள் நடை (Political style)

என்று பிரிப்பார் இரபிசிங் (1980:10). சுந்தரமூர்த்தி (1985:35-36) உரைநடையின் வகைகளைத் தர்க்க முறை (argumentative), திறனாய்வு முறை (Critical), வருணனை முறை (descriptive), நாடக முறை (dramatic), சொற்பொழிவு முறை (oratorical), தத்துவமுறை (philosophical) எள்ளல் முறை (satirical) என்று விளக்குகிறார். இக்கால மொழிப்பயன்பாட்டினை அடிப் படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பு நடை (translation style)/வசன கவிதை நடை (new poetry style) என்றும் பிரிக்கலாம்.

**கட்டுரை நடை**

அடைகளைப் பெரிதும் தவிர்த்தல், துல்லியமாகக் கூறுதல், மயக்கந்தராத சொற்களைப் பயன்படுத்துதல், எடுத்துக் கொண்ட பொருளுக்கு வெளியே செல்லாதிருத்தல் முதலானவை கட்டுரை நடையின் பண்புகளாகும்.

**விளக்க நடை**

விரித்தல் உத்திகளைப் பெரிதும் கையாண்டு எடுத்துக் கொண்ட பொருளை விளக்கமாகச் சொல்லப் பயன்படுவது இந்நடை.

**விவரிப்பு நடை**

நிகழ்ச்சிகள் சங்கிலித் தொடர் போன்று கூறப்படுதல், படைப்பிலக்கியங்களில் கதையோட்டம் அமைதல் முதலானவை இந்நடையின் பண்புகளாகும்.

**கவிதை நடை**

நீக்கல் உத்திகள், பொது மொழியிலிருந்து பிறழ்ச்சிகள், மடக்குக் கூறுகள், அருகிய வழக்குச் சொற்கள் போன்றவை கவிதை நடையின் சிறப்பான பண்புகளாகும். இவை உரைநடையில் கையாளப்படும் போது அது கவிதை நடையில் அமைந்துள்ளதெனப்படுகிறது.

**புலவர் நடை**

இயன்ற அளவுக்குப் பிறமொழிச் சொற்களைக் களைந்துத் தனித்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தும் இயல்புடையது. இதில் பழைய இலக்கியச் சொற்களுக்குப் பெரிதும் சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது.

**தனித்தமிழ் நடை**

முற்றிலும் பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுவதே தனித் தமிழ் நடையாகும். தவிர்க்க இயலாத நிலையில் மட்டும் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம்.

**தருக்க நடை**

ஒருவர் தம் கருத்தைச் சொல்லும்போது பிறர் அதனை ஏற்குமாறு காரண காரியங்களை வகைப்படுத்திக் காட்டி அறிவியல் பூர்வமாக விளக்குதல் தருக்க நடை எனப்படுகிறது.

**வருணனை நடை**

ஒரு பொருளையோ காட்சியையோ கொள்கையையோ வருணித்துக் காட்டும் போது இந்நடையின் தனி நிலை புலனாகிறது. புலன்களால் உணர்வனவற்றை அல்லது புலன்களின் வாயிலாக உணரும் புறக்காட்சிகளைச் சொற்களில் மொழி பெயர்த்துக் காட்டுவதே வருணனை நடை எனலாம்.

### நாடக நடை

இருவரோ பலரோ உரையாடுவது போல அமைவது நாடக உரைநடையாகும். இதையே உரையாடல் நடை என்றும் குறிப்பிடலாம்.

### எள்ளல் நடை

நகைச்சுவை மிளிர, ஆனால் அதே சமயத்தில் குற்றம் நெஞ்சைச் சுடுமாறு கூறுவதை இவ்வகையினுள் அடக்கலாம். குறைகாணும் போக்கினைச் சுவையுணர்வோடு தருவது எள்ளல் நடை என்பர். வஞ்சப் புகழ்ச்சி, அங்கதம் முதலியன இதற்கு இணையானவை.

இவ்வகை நடைகள் அனைத்தும் கவிதையிலும், உரைநடையிலும் வருவனவாகும்.

### இலக்கியத்தின் 'நடை'

இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி என்று குறிப்பிடுவர். ஒவ்வொரு கால இலக்கியமும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் பண்பாடு, அரசியல், பொருளியல் சிந்தனைகளையும் வெளிப் படுத்துவதைக் காண முடிகிறது. ஓர் இலக்கியத்தின் கருத்தமைவு பெரும்பாலும் அது சார்ந்துள்ள சமுதாயத்தையும் அதன் இயக்கத்தையும் பிரதிபலிக்கிறது. சமுதாயத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளை மையப் பொருண்மையாக்கி அதன்வழிச் சமுதாயச் சிக்கல்களையும் அவை தோன்றுவதற்கான காரணங் களையும், அவற்றைத் தீர்ப்பதற்கான அணுகு முறைகளையும் கதையாக, புதினமாக, கவிதையாக, கட்டுரையாக வடிவமைத்து இலக்கியமாகத் தரப்படுகிறது. இவ்வாறு வெளிப்படும் இலக்கியங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு அமைகின்றன. சிலவற்றிடையே பொதுமையும் ஓரளவிற்குக் காணப்படுகிறது.

பொருண்மை ஒன்றாக அமையும் நிலையிலும் கூட வெளிப்பாடானது சில இலக்கியங்களிடையே மாறுபட்டு அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. எனவேதான் பொருண்மையை எடுத்துச் சொல்லும் பாங்கிலும், அமைப்பிலும் சில இலக்கியங்கள் வேறுபட்டுக் காணப்

படுகின்றன. பொருண்மை யாருக்காக எதற்காக எந்தக் காலக் கட்டத்தில் வெளியிடப்படுகின்றதோ, அதற்கேற்ப எடுத்துச் சொல்லப்படும் முறைகளும் அதற்காகப் பயன்படுத்தப்படும் நெறிமுறைகளும் உத்திகளும் கூட வேறுபடுகின்றன. மேலும் எடுத்துச் சொல்லப்படும் பொருண்மையின் சமுதாய இன்றியமையாமையை (social relavance) அடிப்படையாகக் கொண்டு, இலக்கியத்தின் அமைப்பும் போக்கும் மாறுபட்டு அமைந்து வருகிறது.

சமுதாய இயக்கம் என்பது இன்றைய நிலையில் மிகவேகமாகவும், பெருமளவிலும் மரபு வழியிலிருந்து மாறி வருவதைக் காண்கிறோம். அதேபோன்று சமுதாயப் பணிகளும் மாறியே வருகின்றன. இத்தகைய மாற்றம் காலத்தின் கட்டாயமாகவும் சமுதாய மேம்பாட்டிற்குத் தேவையான தாகவும் அமைந்து வருவதையும் காண்கிறோம். இதனால் இலக்கியப் பொருண்மை மேற்குறிப்பிட்ட சமுதாயக் காரணிகளுக்கும், சூழல்களுக்கும் மாற்றங்களுக்கும் ஏற்பப் பின்பற்றும் அணுகுமுறைகளாலும், கையாளும் உத்திகளாலும் மாற்றமும், தெளிவும் பெற்று வருகிறது. இவ்வாறு மாற்றமும் தெளிவும் பெறும் இலக்கியப் பொருண்மை கருத்துப் புலப்பாட்டில் திறன்மிக்கதாக அமைந்து அச்சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல் அதனைப் படிக்கும் அனைவருக்கும் ஏதோ ஒருவகையில் பயனுள்ளதாகவும் அமைந்து விடுகிறது.

சில இலக்கியங்களில் இத்தகைய மொழி, இலக்கியப் பண்பு மிகவும் சிறப்பாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். இது போன்று பண்பு நலன் அமைவது இலக்கியப் பொருண்மை வெளிப்பாட்டிற்கு மட்டுமல்லாமல் அது சென்று சேரும் சமுதாயத்திற்கும் பயன்விளைவிக்கும். ஆகவே இத்தகைய பண்பு நலன்கள் இலக்கியங்களில் அமைய தேவையான முயற்சிகளை இலக்கியப் படைப்பாளிகளுள் சிலர் மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ளதையும் பார்க்கிறோம். இலக்கியப் பொருண்மை தெளிவாகவும் ஆற்றல்மிக்கதாகவும் அமைந்தால் மட்டும் போதாது. அப்பொருண்மை சமுதாயத்திற்குப் பயன்தரும் வகையிலும் எளிதில் சென்று சேரும் வகையிலும் அமைய வேண்டியது அவசியமாகிறது. இது சரியாக அமைவதற்கு மொழி திறன்மிக்க கருவியாக அமைய வேண்டும்.

### பல்துறைகளில் நடையியல் ஆய்வு

மொழியானது இலக்கியங்களில் மட்டுமல்லாது சமுதாயவியல், அறிவியல், ஆட்சித்துறை, பண்பாடு, தகவல் தொடர்பு, நாட்டுப்புறவியல் போன்ற துறைகளிலும் ஈடுபடுத்தப் பட்டு வருகிறது. காலத்தின் தேவையையும் சமுதாய முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு ஒரு மொழியின் வாயிலாகப் பல்துறை அறிவும் வெளிப்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, அறிவியல் போன்ற துறைகளில் பயன் படுத்தப்படும் மொழியமைப்பு இலக்கிய மொழி அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டு நிற்கிறது. இதற்குக் காரணம் இத்துறையின் பயன்பாட்டில் இடம்பெறும் மொழி பொருட் குழப்பத்தை அறவே தவிர்ப்பதாகவும் தேவையற்ற மொழிக்கூறுகளை நீக்கியதாகவும் அமைய வேண்டும். இது போன்றே இன்றைய அறிவியல் வளர்ச்சியால் பல்வேறு புதுத்துறைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இத்துறைகளி லெல்லாம் மொழிவழக்குகள் பயன்படுத்தப்பட்டே வருகின்றன. அவற்றின் தேவைக்கேற்ப வளப்படுத்தப்பட்டும் வருகின்றன.

### தகவல் தொடர்பியல்

தகவல் தொடர்பியலில் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, அறிவிப்புகள், விளம்பரங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள் போன்றவை அடங்கும். உலகின் பல பகுதிகளிலும், நாட்டின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் கருத்துகள் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வாயிலாக மக்களைச் சென்றடைகின்றன. அரசு நலத்திட்டங்கள், முக்கிய நிகழ்ச்சிகள் அறிவிப்புகளாகவும், அறிக்கைகளாகவும் அறிவிக்கப் படுகின்றன. இன்று உற்பத்தியாகியுள்ள பல்வேறு பொருட்கள் நுகர்வோருக்கு எளிதாகக் கிடைக்க வேண்டி விளம்பரங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன. சமுதாயத்தில் நிகழும் சிக்கல்களையும், சீர்கெட்டுச் சென்று கொண்டிருக்கும் சமுதாயத்தின் அவலத் தன்மையையும் திரைப்படம் வெளிப் படுத்துகிறது. இவை ஒவ்வொன்றும் மொழியின் வாயிலாகவே புலப்படுத்துகின்றன. இத்தகையத் தகவல் தொடர்புச் சாதனங்களில் கையாளப்பட்டுள்ள மொழி நடையினையும் அதில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ள உத்திகளையும், மையப்

பொருண்மையையும் விளக்க நடையியலாய்வு பெருந்துணை புரிகின்றது. எடுத்துக்காட்டாக, இன்றையத் தமிழ்ப் பத்திரிகைகளை மூன்றாகப் பிரிக்கலாம். மக்கள் தமிழிலேயே வெளிவரும் பத்திரிகைகள் எதுவும் இன்று தமிழ்நாட்டில் இல்லை. மக்கள் தமிழைச் சிற்சில இடங்களில் பயன்படுத்தும் பத்திரிகைகள் முதல் வகையைச் சார்ந்தவை. இரண்டாவது பிரிவைச் சார்ந்தவை எப்போதும் இலக்கியத் தமிழினையே பயன்படுத்துபவை. எந்தப் பொருளைப் பற்றி எழுதினாலும் இலக்கியத் தமிழினை இவை பயன்படுத்துகின்றன. மூன்றாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் பண்டிதர் நடையிலே வெளிவருபவை. இவ்விதழ்களில் காணப்படும் மொழிநடையை ஆராய்வதற்கு நடையியல் கோட்பாடு உதவுகிறது. பத்திரிகையில் காணப்படும் எளிமையாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம், கடன்சொற் பயன்பாடு, தன்னினமாக்கம், இலக்கிய வழக்குச் சொற்களின் பயன்பாடு ஆகியவற்றை இனங்காண நடையியல் ஆய்வு பயன்படுகிறது.

### மொழியியல்

இன்று வெகுவாக வளர்ந்து வரும் துறை மொழியியலாகும். சமுதாய மொழியியல், (Socio-Linguistics) விளக்க மொழியியல், (descriptive linguistics) வரலாற்று மொழியியல், (historical linguistics) பயன்பாட்டு மொழியியல், (applied linguistics) என்ற நான்கு பிரிவுகளில் மொழியியல் பிரிந்து காணப்படுகிறது. பயன்பாட்டு மொழியியல் பிரிவைச் சார்ந்ததே நடையியலாகும். இது மொழியியலின் ஒரு பிரிவாகும். நடையியல் உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு கவிஞனை அல்லது ஆசிரியனை எளிதில் இனங்கண்டு கொள்ள முடியும். அவரது மொழியமைப்பு, மொழிப்பயன்பாடு இரண்டினையும் இதன் மூலம் அறிய முடிகின்றது. அதற்குத் துணை செய்வதே நடையியலாகும்.

இன்றைய நடையியலாய்வு பெருமளவு மொழியமைப்பு அடிப்படையில் அமைந்து வருவதை உல்மான் (1973:133) டேவிட் கிரிஸ்ட்டல் (1966:8&22 528) போன்றோர் விளக்குகின்றனர். பல்வேறு மொழியியற் கூறுகளின் பொதுமை மற்றும் தனித்தன்மை அல்லது விலகல் இவற்றின் அடிப்படையில் மொழிநடை சிறப்பாக விளக்கப்படுகிறது. இதனை நாம் பல்வேறு ஒப்பு விதிகளின் அடிப்படையில் வரையறை செய்து விளக்க முடிகிறது. ஆகவே இன்றைய

நடையியலாய்வு பெருமளவில் மொழியியல் அமைப்பை ஒட்டியே விளக்கப்படுவதால் இத்தகைய நடை வகைப்பாடுகள் உத்திகளாகவே அமைந்து விடுகின்றன. மொழியமைப்பின் பல்வேறு நிலைகளில் மொழிக் கூறுகளானவை வழக்கில் இடம்பெறுவதைக் கொண்டு நடையமைப்புத் தெளிவாக விளக்கப்படுகிறது. மேலும் மொழிப் பயன்பாட்டின் அடிப்படையில் பார்க்கும் பொழுது சமுதாயச் சூழல்களுக்கு ஏற்ப மொழியமைப்பானது சில இடங்களில் எளிமையாக்கம் (Simplification) செய்யப்படுகிறது. இன்னும் சில இடங்களில் விரிவாக்கம் (elaboration) செய்யப்படுகிறது. ஆகவே இன்றைய நடையியலாய்விற்கு மொழியியல் பெருந்துணையாக இருப்பது இவற்றின் வாயிலாக நன்குத் தெளிவாகிறது.

### நாட்டுப்புறவியல்

இன்று வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்று நாட்டுப்புறவியல் துறையாகும். நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்களது உணர்ச்சிகளை வாய்மொழி இலக்கியங்களாகத் தருகின்றனர். அவர்களின் உணர்ச்சிகள் இன்ப-துன்பங்கள், வாழ்க்கைப் பிரச்சினைகள், பொருளாதார நெறிமுறைகள், பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கைகள், சடங்கு முறைகள், புதுமை எண்ணங்கள், புரட்சிக் கருத்துகள் ஆகியவை அவற்றில் காணப்படுகின்றன. மிக எளிய வழக்குச் சொற்களின் மூலம் தெளிவாகவும், செறிவாகவும், நயத்தோடும் தங்களது கருத்துகளை வெளிப்படுத்துகின்றனர். இதனை அவர்களது பாடல்கள், கதைப் பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள் போன்றவற்றின் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். இத்தகைய இலக்கியத்தை ஆராய நடையியல் கோட்பாடு பயன்படுகிறது. நாட்டுப்புற இலக்கியங்களில் காணப்படும் புதிய உத்திகள் சிறந்த கற்பனை வளம், செறிவான கருத்துக்கோவை ஆகியவற்றை இனம் பிரித்துக் காட்டவும் நடையியல் கோட்பாடு பயன்படுகிறது.

### மொழிபெயர்ப்பியல்

இன்று புதிதாக வளர்ந்து வரும் துறைகளில் மொழிபெயர்ப்பியலும் ஒன்று.

> "பிற நாட்டுச் சாத்திரங்கள்
> தமிழ்மொழியில் பெயர்த்திடல் வேண்டும்"

என்ற பாரதியின் கூற்றிற்கேற்ப இன்று பல்துறைகளிலும் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. புதிய கண்டு பிடிப்புகளையும், அறிவியல் முன்னேற்றங்களையும், அறிவியல் கருத்துகளையும் உடனுக்குடன் மொழிபெயர்த்து, செய்திகளாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டு வருவதைக் காண்கிறோம். அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டு வரும் படைப்புகளின் மொழிநடையை ஆராயவும் நடையியல் கோட்பாடு பயன் படுகிறது. பிறமொழியிலிருந்து தாய்மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு வரும்போது அதன் கருத்தும், கூறியுள்ள பாங்கும், கையாளப் பட்டுள்ள மொழிநடையும் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளனவா? அமைக்கப்பட்டுள்ளனவா? என்பதையும், பொருட்குழப்பம், கருத்துக் குழப்பம், மிகைக் கூறுகள் திரும்பி வரல் போன்றவை காணப்படுகின்றனவா என்பனவற்றை அறிவதற்கும் நடையியல் கோட்பாடு உதவுகிறது.

### ஒப்பியல்

மொழிபெயர்ப்பியல் போன்றே ஒப்பியல் துறையும் இன்று வேகமாக வளர்ந்து வரும் துறையாகும். ஆனால் எல்லோராலும் இதில் ஈடுபட முடிவதில்லை. ஏனெனில் மொழிபெயர்ப்பியல் போன்றே இதற்கும் இரு மொழியறிவு தேவை. அப்பொழுது தான் இலக்கியத்தையோ, மொழியையோ செம்மையாக ஒப்பிட்டு ஆராய முடியும். அந்த வகையில் ஒரே குடும்பத்தைச் சார்ந்த இலக்கியங்களையோ அல்லது வேறுபட்ட குடும்பத்தைச் சார்ந்த இலக்கியங்களையோ ஒப்பியல் நோக்குடன் ஆராய நடையியல் ஆய்வு துணை புரிகின்றது. இரு மொழிகளில் அமைந்துள்ள இலக்கிய ஒப்புமை, கருத்து ஒப்புமை, கையாளப்பட்டுள்ள உத்திகள், ஆசிரியரின் மனப்பாங்கு, ஆகியவற்றை இனம்பிரித்துக் காட்டவும் நடையியல் கோட்பாடு உதவுகிறது. ஆகவே, இன்று நடையியல் ஆய்வு செய்யப்படாத துறைகளே இல்லை என்று சொல்லுமளவிற்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கோட்பாடாகும் இது.

### நடையியல் கோட்பாடுகள்

சமுதாய இயக்கத்திற்கான அடிப்படைகளுள் ஒன்று மொழி. பேச்சு மூலமும் எழுத்து மூலமும் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இத்தகையப் பரிமாற்றம் கவிதைமொழி வாயிலாகவும் உரைநடை மொழி வாயிலாகவும் நடை

பெறுகிறது. ஒவ்வொரு வகை மொழிநடையும் ஒவ்வொரு வகை அமைப்பையும் பயன்பாட்டையும் கொண்டுள்ளது. அவ்வகை மொழி அமைப்பிலும் மொழிப் பயன்பாட்டிலும் சில மாற்றங்களும் உறழ்ச்சியும் காணப்படுவது இயல்பு. மொழியமைப்பு எனும் போது அதில் இடம்பெறும் பல்வேறு மொழிக்கூறுகள் முன்னிறுத்தப்படுகின்றன. சொல், தொடர் அமைப்புகள் வரையறை செய்யப்படுகின்றன.

ஒலியில் தொடங்கி உரைக்கோவை வரை மொழியமைப்பில் எத்தனையோ கூறுகள் அமைந்துள்ளன. ஒலிக்கூறு, ஒலியன்/எழுத்து, உருபன், சொல், தொடர், வாக்கியம் போன்றவை. உருபனில் தொடங்கி வாக்கியம் வரை ஒவ்வொரு கூறும்/அமைப்பும் பொருளோடு தொடர்புபடுத்தப் படுகின்றது. இவற்றில் சில கூறுகள் அவை வழங்குமிடங்களி லெல்லாம் ஒரே வடிவத்தைக் கொண்டு அமைந்திருக்கும். வேறு சில கூறுகள் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களைக் கொண்டு அமைந்திருக்கும். மொழியில் எடுத்துரைக்கப்படும் ஒரு குறிப்பிட்டப் பொருளைக் குறிக்க சில மொழிகளில் ஒன்றிற்கு மேற்பட்ட வடிவங்கள் இருக்கும். அதே போன்று ஒரு மொழிக்குள்ளும் இத்தகைய சொல்-பொருள் அமைப்பு காணப்படுகிறது. இதற்கு எதிர்மாறாக ஒரு சொல் பல பொருள்களைக் குறிக்கவும், பல சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கவும் பயன்படுத்தப் படுகின்றன. இத்தகைய அமைப்பு மொழியின் கிளை மொழிகளிலும் கூட காணப்படுகிறது. மொழியைப் பயன்படுத்துவோரிடமும், எழுதுவோரிடமும் காணப்படுகிறது. குறிப்பாக, இத்தகைய மொழி வேறுபாட்டினைப் படைப்பாளிகள் கையாளுகின்றனர். இத்தகைய வேறுபாடுகளின் முறைபடுத்தப்பட்ட தொகுப்பே மொழிநடை எனப்படுகிறது. நடைவேறுபாடு, எடுத்துச் சொல்லும் கருத்து வேறுபாட்டிற்குத் துணை செய்கிறது. படைப்பாளிகளை இனங்காண உதவுகிறது. கருத்துப் புலப்பாட்டுத் திறன் பெருகத் துணை செய்கிறது. சுருங்கச் சொல்லுதல், எளிமை, விரிவாக்கம், பரவலாக்கம் சமுதாய ஏற்பு இவற்றைப் பெறுவதற்கும் வழிகோலுகிறது.

ஒருவர் தான் மையப்படுத்தும், பொருண்மைக்கு ஏற்ப மொழிக்கூறுகளைத் தேர்வு செய்கிறார். கருத்து, சொல்லப்படும் காலம், இடம், முறை போன்றவற்றிற்கு ஏற்பவும் மொழிக் கூறுகள் தேர்வு செய்யப்படுகின்றன. இவற்றோடு கருத்துகளைப்

பெறும் சமுதாயத்தின் பின்னணியை ஒட்டியும் கருத்துகளை எடுத்துச் சொல்வோரின் மொழிப்பயன்பாட்டுத் திறனை அடிப்படையாகக் கொண்டும் மொழிக்கூறுகள் மொழியமைப்பில் இடம் பெறுகின்றன. சில நேரங்களில் இலக்கிய வகை, இலக்கியப் போக்கு போன்றவற்றைச் சார்ந்தும் மொழிக் கூறுகளின் தேர்வு அமைகிறது. இவ்வாறெல்லாம் தேர்வு செய்யப்பட்ட மொழிக் கூறுகள் எழுதுவோர் அல்லது பேசுவோரின் மொழியமைப்பில் இடம்பெற்றுப் பொருண்மை விளக்கத்திற்கு உதவி வருகின்றன. எடுத்துக்காட்டாக, எழுத்தறிவு பெற்றுச் சிறந்தோங்கும் ஒரு சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் சில படைப்புகள், உரைகள் அமைகின்றன. குறைந்த விழுக்காடு எழுத்தறிவே பெற்ற சமுதாயத்திற்கு ஏற்ப ஒரு வகையில் எளிமைப்படுத்தப்பட்ட மொழியமைப்பு அமைகிறது தேவைப்படுகிறது. ஆகவே, மொழிப் பயன்பாடானது குறிக் கோள்களின் அடிப்படையில் இன்று மேற்குறிப்பிட்டவாறு அமைந்து வருகிறது. இவ்வாறு அமைவதால் ஒரு மொழி, அதன் பயன்பாட்டில் பல்வேறு நடைகள் கொண்டு விளங்கக் காண்கிறோம். இதனைக் கருத்திற் கொண்டே எளியநடை, செறிவுநடை, சுருக்க நடை, ஆற்றொழுக்கு நடை, அழகு நடை, அலங்கார நடை என்றெல்லாம் மொழிநடை இனங்காணப் படுகிறது, விளக்கப்படுகிறது.

உல்மான் (1971:133) மற்றும் டேவிட் கிரிஸ்ட்டல் (1966:8, 22:52&66) போன்றோர் மூன்று பெரும் நிலைகளாகப் பிரித்துக் கொண்டு, அவற்றில் இடம்பெறும் மொழிக்கூறுகளை நடையியற் கூறுகளாக எடுத்தாளுகின்றனர். அவை:

**முதல்வகை**

1. தற்போக்கு, 2. கிளைமொழி, 3. காலம்.

**இரண்டாம் வகை**

2.1. மொழிச்சாதனம்
2.2. ஊடகம் (பேச்சு, எழுத்து)
2.3 பங்கேற்பு (தனிமொழி, உரையாடல்)

**மூன்றாவது வகை**

3.1. துறை
3.2. சமூகப் படிநிலை

3.3. வடிவம்

3.4. தனித்துவம்

நடையியற் கூறுகளை விளக்கும் நிலையில் நீதிவாணன் (1982:37) ஒலிக்கோலம், சொல் தேர்வு, தொடர்கட்டு என்று கூறுகளை விரித்து, ஒவ்வொன்றிலும் சில உத்திகளைக் கையாண்டு மொழிநடையை விளக்கலாம் எனப் பரிந்துரை செய்கிறார்.

நடையியற் கூறுகள் : விளக்கம்

- ஒலிக்கோலம்
- சொல்தேர்வு
- தொடர்க்கட்டு

1. ஒலிக்கோலம்

- எதுகை மோனை
- வண்ணம்
- இயைபு
- ஒலிக்குறிப்புச் சொற்கள்
- ஒலிக்கோலமும் நகைச்சுவையும்
- வட்டார வழக்குகள்

2. சொல்தேர்வு

- மங்கலச் சொற்கள்
- பழஞ்சொல்லுக்குப் புதுப்பொருள்
- மூவிடப் பெயர்கள்
- அடைச் சொற்கள்
- அனுபவங்களின் பாதிப்பு

3. தொடர்க்கட்டு

- சங்கிலித் தொடர்
- கருத்திற்கேற்ற தொடர்
- குறிப்புவினைத் தொடர்
- விளித் தொடர்கள்
- பயின்றுவரும் தொடர்
- அடைத் தொடர்
- விருப்பத் தொடர்
- உவமைத் தொடர்
- விரித்தல் உத்திகள்
- பிறமொழிச் செல்வாக்கு
- விளம்பரத் தொடர்

இவையனைத்தும் மொழியமைப்பினை மட்டுமே விளக்கிக் காட்டுகின்றன. வெறும் மொழியமைப்பினை மட்டுமே ஆராய்ந்து பார்த்தால் ஆசிரியரின் மொழியமைப்பு பற்றிய மனப்பாங்கு மட்டுமே வெளிப்படும். எந்த வகையான கருத்தினை அவர் தேர்ந்தெடுத்து வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறிய இவ்வமைப்பு உதவுவதில்லை. உருவ அமைப்பு மட்டுமே கிடைக்கும். இதனால் உயிரோட்டமாயுள்ள பொருண்மை என்ன என்பது தெரிவதில்லை. எனவே, மொழியமைப்பையும் மொழிப் பயன்பாட்டினையும் இணைத்துச் கொள்ளுதல் வேண்டும்.

நடையமைப்பு விளக்கம்




நடையியலமைப்பு: விளக்கம்



மொழியியல் அணுகுமுறையைக் கொண்டு நடையியலாய் வினை மேற்கொள்ளும் நிலையில் சில பிரச்சினைகளைக் குழப்பம் ஏதுமில்லாமல் தீர்த்து வைக்க முடியும். மேலும் பிரச்சினைக்குரிய மொழி வகையின் உள்ளார்ந்த இயல்பு பற்றிய அறிவும் மொழியியல் பகுப்பாய்வும் நடையியல் ஆய்வில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அவசியமாகிறது. மரபு ரீதியான விமர்சனத்தின் மனப்பாங்கான பொதுக்கூறுகளை விட மிகவும் திட்பமான எல்லாவற்றையும் உள்ளடக்கிய புறநிலை பற்றிய விவரண முறை ஒன்றை உருவாக்குவது நடையியலின் நோக்கங்களுள் ஒன்றாக இருப்பதால் இத்தகைய மொழியியல் பகுப்பாய்வு இன்று பெரிதும் தேவைப்படுகிறது. இத்தகையப் பகுப்பாய்வின் மூலமே வெளிப்படையாகக் காணமுடிகின்ற கூறுகளை மட்டுமின்றி நுட்பமான நடையியல் கூறுகளையும் நம்மால் கண்டறிய முடியும்.

இன்றைய இலக்கியங்களின் நடையமைப்பினை ஆராய்வதற்கு அமைபவை மொழியினது அமைப்பும் அதன் பயன்பாடுமே. இதற்குக்காரணம் ஓர் ஆசிரியன் அல்லது படைப்பாளி பல்வேறு மொழிக் கூறுகளையும் மொழிப் பயன்பாட்டு நிலைகளையும் ஒருங்கிணைத்துப் பார்த்து கருத்துகளை வெளிப்படுத்தும் நிலையில் ஒருவர் எடுத்தாளும் மொழியமைப்பானது அவர் எடுத்துச் சொல்லும் மொழிப் பயன் பாட்டின் நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ப மாறுகிறது. இதனால் கருத்துகளை வெளிப்படுத்தும் மொழியின் புற அமைப்பானது ஒருவரது மொழியமைப்பிலிருந்து மற்றொருவரின் மொழி யமைப்புடன் வேறுபட்டுக் காணப்படுகிறது. இந்த வேறுபாடுகள் அனைத்தும் நடையமைப்பில் பிரதிபலிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே நடையமைப்பு விளக்கம் மேற் சொன்னவாறு மொழியமைப்பு, மொழிப்பயன்பாடு என்ற இரண்டையும் ஒருங்கிணைத்துப் பார்க்க மேற்கொள்ளப்படும் ஆய்வின் வழியாகக் கிடைப்பதே என்பது தெளிவாகிறது.

இவ்விளக்கம் தெளிவாக நமக்குக் கிடைத்திட சில உத்திகளும் கூறுகளும் தேவைப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி மொழியமைப்பு மற்றும் மொழிப்பயன்பாடு என்ற ஒருங்கிணைந்த அமைப்பினை விளக்குவதே தெளிவான

நடையியல் ஆய்வாகிறது. அதாவது நடையியலாய்வு என்பது இலக்கியம் மற்றும் மொழிசார்ந்த தெளிவான ஆய்வாக அமைகிறது. இக்கால மொழியியல் அணுகுமுறைகளான அமைப்பு மொழியியல் அணுகுமுறை, சமுதாய மொழியியல் அணுகுமுறை மற்றும் இலக்கிய அமைப்புகளை விளக்கிடும் நடையியலாய்வு அணுகுமுறை என்ற மூன்றும் ஒரு சேரப் பயன்படுத்தப்பட்டு நடையியலாய்வில் தெளிவும் நிறைவும் ஏற்படுகிறது.




மொழி வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் நடை தீர்மானிக்கப்படுகிறது என்றோம். இது ஒருவகை நடைவிளக்கமே. மற்றொன்று பொருண்மையை அடிப்படையாகக் கொண்டது. அதாவது ஆங்கிலத்தில் குறிப்பிடுவது போலப் பொருள் (content) ஒரு புறமும் (expression) வெளிப்பாடு மறுபுறமும் அமைந்து ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்படுவதாகும். சமுதாய மொழியியல், இலக்கியம், உளவியல், மானிட மொழியியல், சமுதாயவியல், தகவல் தொடர்பியல் போன்ற துறைகளில் பயின்றுவரும் கோட்பாடுகள் மற்றும் விளக்கங்கள் நடைவிளக்கம் நிறைவாகவும் செம்மையாகவும் அமைய உதவுகின்றன. மேலும் இவ்வகை விளக்கங்கள் மொழி வழக்குகளில் அமைந்துள்ள சொற்கள், சொல்லமைப்புகள், தொடர்கள், இலக்கணக்

கூறுகள், ஒலி எழுத்து போன்றவற்றின் துணை கொண்டும் சொல் பொருள் தொடர்பு சொற்பொருளை விரிக்க வல்லது. வழக்குகளில் இடம் பெற்றுள்ள இத்தகையக் கூறுகளையும் பொருண்மை வெளிப்பாடுகளையும் பிரித்தறிந்து நடை விளக்கம் இறுதி வடிவம் பெறுகிறது. கூறுகளும் பொருண்மையும் மட்டுமே நடைவிளக்கத்தை முழுமைப்படுத்தா; தெளிவாக்கா; இங்கு ஏன் என்ற வினா எழுகின்றது? சில சூழல்களில் மொழி வழக்குகளில் இடம்பெறும் கூறுகளையும் பொருண்மைத் தொடர்புகளையும் விளக்கச் சில நடையியல் உத்திகள் தேவைப்படுகின்றன. அதாவது ஒலிநீட்டம், அசையமைப்பு, திரும்பக்கூறல், அடுக்கிவரல், நாடக உத்தி, மேற்கோள்காட்டல், பழமொழி ஆட்சி, கதை கூறல், அமைப்பு இணைப்பு, எளிமையாக்கம், விரிவாக்கம், போலச் செய்தல், ஒப்புமையாக்கம் போன்றவை மொழியமைப்பில் கையாளப் படும் முக்கியமான உத்திகளாகும்.

பொருண்மை வெளிப்பாட்டில் சொல் - சுவை, புதுமை தத்துவ வெளிப்பாடு, உளவியல், அரசியல், கலைகள் போன்ற களப்பயன்பாடு, அணிகள், உவமை, உருவகம், யாப்பு போன்றவையெல்லாம் உத்திகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு இருபிரிவுகளும் இனங்காணப்பட்ட நடையியல் கூறுகளின் தொகுப்பே மொழிநடையின் முழுமையாகிறது. இம்முழுமையே நடைவிளக்கமாகவும் இன்று கருதப்படுகிறது.




கருத்து - ந.கூ - ந.உ. > மொழி

| | | |
|---|---|---|
| க.வ. | = | கருத்து வகை |
| க.மொ | = | கவிதை மொழி |
| உ.ந.மொ | = | உரைநடை மொழி |
| ந.கூ | = | நடையியற் கூறுகள் |
| ந.உ. | = | நடை உத்திகள் |

அதாவது பொருண்மை வெளிப்பாடு மொழி வழி நடைபெறுகிறது. வெளிப்பாட்டின் ஆற்றலுக்கு நடையியற் கூறுகளும் சில நடை உத்திகளும் மிகவும் இன்றியமையாதவை. இவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் விளக்கமே இறுதியில் நடை விளக்கமாகிறது. கீழே விளக்கப்பட்டுள்ள நடை விளக்கத்தில் இடம்பெறக் கூடிய விளக்க மாதிரிகளும் எடுத்துக் காட்டுகளும் இக்காலத் தமிழ் இலக்கியங்கள் சில வெளிப் படுத்தும் மொழி நடையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இதில் குறைந்தது ஆறு வகையான முறைசார் தொடர்புகள் காணப்படுகின்றன.




| | | |
|---|---|---|
| க. | = | களம் |
| ச.கோ. | = | சமுதாயக் கோட்பாடு |
| ச.பொ. | = | சமுதாயப் பொருள் |

க.வெ. = கருத்து வெளிப்பாடு
அக.அ. = அக அமைப்பு
ந.உ. = நடை உத்தி

## மொழிப் பயன்பாடு

தற்கால இலக்கியங்கள் - புதினம், சிறுகதை, நாடகம் போன்றவை.

இவற்றில் உரையாடல், விளக்கம், சமுதாயப் பொருள், வெளிப்பாடு, பழமொழி போன்றவை.

## கருத்தமைவு - மொழி

க.அ. 1 - கவிதை / உரைநடை இரண்டும்
க.அ 2 - உரைநடை மட்டும்
க.அ 3 - கவிதை மட்டும் (அ)
க.அ 1 - பேச்சு வழக்கு
க.அ 2 - எழுத்து வழக்கு
க.அ 3 - இரு வழக்குகளும்

எ.கா.

புதினம் / அறிவியல் = உரைநடை

நாடகம் = உரைநடை/கவிதை

பே.வ. / எ.வ. = தற்கால இலக்கியம் தகவல் தொடர்பு மூலங்கள்

எ.வ. = இலக்கியம்
பே.வ. = இலக்கியம்
மொழிப் பயன்பாட்டுக் களங்கள் = மொழிக்கூறுகள்
மொழி. ப.க. 1 = கலைச்சொற்கள்
மொ.ப.க. 2 = எளிமையான / பொதுமையான கூறுகள்
மொ.ப. க.3 = புதுச்சொற்கள்/புதிய உரைக் கோவை

எ.கா. தமிழ் அறிவியல்

மக்கட் கல்வி / தகவல் தொடர்பியல்
புது அறிவுத் துறைகள்

மொழிக் கூறுகள் = நடை உத்திகள்

கூ.வ 1 = ஒலி / எழுத்துக் கூறுகள்

கூ.வ 2 = சொற்கள்

கூ.வ 3 = இலக்கணக் கூறுகள், தொடர் வாக்கியம்

கூ.வ 4 = உரைக்கோவை அமைப்பு (அடுக்கிவரல், முரண்தொடர் அணி, உவமை, திரும்பிவரல்)

ச.கோ > ச.பொ. > க.வெ.

ச.கோ.
- ச.கோ 1 (பேச்சு வழக்கு உரையாடல் - மக்கட் கல்வி)
- ச.கோ 2 (கவிதை - உரைநடை, ஆத்தி சூடி, நாவல்)
- ச.கோ 3 (அறிவியல், எளிமை, புதுமை

ச.பொ.
- ச.பொ 1 (சொல் தேர்வு)
- ச.பொ 2 (பழமொழித் தொடர்கள் இடக்கரடக்கல்)
- ச.பொ 3 (உரைக்கோவை)

க.வெ - அக. அ - புற. அ

க.வெ
- க.வெ 1 - அறிவியல்
- க.வெ 2 - சமுதாயம்
- க.வெ 3 - இலக்கியம்
- க.வெ 4 - தத்துவம், சமயம்

இந்தப்புற அமைப்பானது எழுத்தியல் அல்லது பேச்சில் அமையும் இறுதி வடிவமாகும். இறுதி வடிவத்திற்கு முன்னர்

பேசுவோர் அல்லது எழுதுவோர் கருத்து வெளிப்பாட்டிற்கான மொழிக்கூறுகளையும் உத்திகளையும் சிந்தித்துத் தீர்மானிக்கின்றனர். அவர்களுடைய சிந்தனை எழுத்து/பேச்சு வடிவம் பெறுகிறது. அவ்வாறு வடிவம் பெறும் போது அவர்கள் பெற்றுள்ள மொழிப் பயன்பாட்டுத் திறனும் அவர்கள் கையாளும் நடை உத்திகளும் பெரும்பங்கினை ஆற்றுகின்றன. இதன் காரணமாகவே புற அமைப்பானது படைப்புகளில் வேறுபட்டு அமைகிறது. ஒரே சமுதாயப் பொருள் பற்றிய கருத்து வெளிப்பாடு கூட பல்வேறு படைப்பாளிகளிடம் அணுகப்படும் நிலையில் அவர்களது புறஅமைப்பு வேறுபடுவதற்கு இதுவே காரணமாகிறது.

மேற்குறிப்பிட்ட விளக்க மாதிரியில் அமைந்துள்ள முறைசார் தொடர்புகளில் இடம்பெற்றுள்ள இறுதி இரண்டு பிரிவுகளும் கருத்து வெளிப்பாடு குறித்தவை. இவற்றில் காணப்படும் கருத்து வெளிப்பாடு எனும் கூறு சமுதாயக் கோட்பாடுகளோடும், பொருண்மைகளோடும் சில நடையியல் உத்திகளைப் பயன்படுத்தித் தொடர்புபடுத்தப்படுகிறது. சமுதாயப் பொருண்மை இலக்கியங்களின் வாயிலாகப் பரவலாக்கம் பெறுகிறது. இப்பொருண்மை எளிமையாகவும், முழுமையாகவும் தெளிவாகவும் வெளிப்பட மொழியமைப்பு அதற்கேற்ப அமைய வேண்டும். எனவே இதில் இடம்பெறும் மொழிக் கூறுகள் பொருண்மை விளக்கத்திற்கான கோட்பாடுகளின் தன்மைகேற்ப மொழிப்பயன்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்றன. ஈடுபடுத்தப்பட்ட மொழிக்கூறுகளைக் கருத்துப் புலப்பாட்டில் ஆற்றல் பெறும் வகையில் சில நடை உத்திகள் கையாளப் படுகின்றன. இதன் மூலம் சமுதாயச் சூழலுக்கு ஏற்ற புற அமைப்பு வடிவம் பெறுகிறது. எ.கா. மக்கட்கல்வி என்பது பரவலாக்கம் பெற வேண்டியது. வளர்ந்து வரும் நாட்டிற்குத் தேவையானது ஆற்றல் மிக்க மூலங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியது. சமுதாய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைவது. எனவே சமுதாய முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கல்வி தமிழ்ச் சூழலில் தரப்படும்போது பெரும்பான்மை மக்களுக்குக் கிடைத்திடும் வகையில் பொருண்மை விளக்கமும் மொழியமைப்பில் எளிமையும் நிறைவும் ஏற்படவேண்டும். இதனை முன்னிட்டே இத்தகைய கல்விக்கு ஏற்ற வகையில் தமிழ் வழக்கானது வட்டார வழக்காகவும் எளிமைப்படுத்தப்பட்ட வழக்காகவும் அமைந்து அன்றாடம் மொழிப் பயன்பாட்டில் இடம்பெறும் கூறுகளைக்

கொண்டும் பொருள் மயக்கம் தராத அமைப்புகளைக் கொண்டும் வெளிப்படுத்தப்படுகின்றன.

தற்கால இலக்கியங்களான நாவல், சிறுகதை, நாடகம் போன்றவற்றில் சமுதாயப் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு படைப்புகள் உருவாக்கப்படுகின்றன. வரதட்சணைக் கொடுமை, போதை மருந்தினால் ஏற்படும் தீய விளைவுகள், பாலியல் சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள் போன்றவை சமுதாய விழிப்புணர்விற்காக எழுதப்படுகின்றன. மேலும் நடைமுறை மற்றும் யதார்த்த உணர்வுடன் மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் முறையில் அன்றாட வழக்கு மொழியினைப் பயன்படுத்தியும் இவ்வகை இலக்கியங்களில் கருத்துகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

## சங்க இலக்கிய மொழிநடை

சங்ககால மக்களின் வாழ்க்கையானது அகவாழ்க்கை, புற வாழ்க்கை என்ற இருநிலைகளில் அமைந்துள்ளது. அக்கால மக்களது அகவாழ்வின் ஒழுக்கப் பண்புகளையும் நெறி முறைகளையும் அக இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. புற வாழ்க்கையில் நிகழும் போர், வெற்றி - தோல்வி, வீரம், கொடை, புகழ், கல்வி, பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் ஆகியவற்றைப் புற இலக்கியங்கள் விளக்குகின்றன.

சங்க இலக்கியங்கள் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடல் போன்றவற்றினால் இயற்றப்பட்டுள்ளன. எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ற வகையில் பாவகைகள் இவ்விலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்கள் பெரும்பாலும் தொல்காப்பியர் கூறியிருக்கும் விதிகளுக்கு ஏற்ப மொழியமைப்பினைப் பெற்றுத் திகழ்கின்றன. சமூக, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப சமுதாயத்தில் மாற்றம் நிகழ்கின்றது. அதற்கேற்ப பாவகைகளிலும், எடுத்தாளப்படும் மொழி நிலையிலும் வேறுபாடுகள் தோன்றுவதுண்டு. ஆகவே தொல்காப்பியர் கூறியுள்ள விதிகளில் சில சங்க இலக்கியத்தில் மீறப்பட்டுள்ளன.

சான்று: ச. மொழி முதல் வாரா. ஆனால் சங்க இலக்கியத்தில் சகரம் மொழி முதல் வருகின்றது. இது போன்ற மரபு மீறல்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களில் உயர் செம்மொழி / உயர் எழுத்து வழக்கு பெரும்பான்மையாகக்

கையாளப்பட்டுள்ளன. இயற்கை வருணனைகள் மிக எளிமையாகவும் அந்தந்த நிலங்களுக்குரிய முதல் மற்றும் கருப் பொருட்களைக் கொண்டும் கூறப்பட்டுள்ளன. உவமைகள் ஒப்புமைப் படுத்தியும், பழக்க வழக்கங்கள், இயற்கைப் பொருட்கள், பண்பாடு ஆகியவற்றோடு தொடர்புபடுத்தியும் கையாளப்பட்டுள்ளன. அந்தந்த நிலங்களுக்குரிய விலங்குகளின் பெயர்கள் சில நிலங்களில் மயங்கி வருதலையும் காண முடிகிறது. ஆங்காங்கே அக்காலச் சமூகத்தில் நிலவுகின்ற பழக்க வழக்கங்களும் சிறந்த முறையில் சுட்டிக்காட்டப்படுகின்றன. பெண்பாற் புலவர்களின் படைப்புகளில் காணப்படுகின்ற மொழி யமைப்பினையும், மொழிப்பயன்பாட்டையும் இப்பகுதி விரிவாக விளக்குகிறது.

## சங்க மொழிநடை விளக்கம்

மேற்பகுதியில் குறிப்பிடப்பட்ட விளக்க மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு சங்க மொழியானது அதன் அங்கங்களான கருத்தமைவு - மொழியமைப்பு என்ற இரண்டையும் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கம் சங்க இலக்கியம் காட்டும் உண்மைப் பொருளைப் புலப்படுத்துவதற்கு ஒருவகையான மொழிநடையைப் பின்பற்றுவதை எடுத்துக்காட்டுகிறது.

## நடை விளக்கத்தில் மொழிக்கூறுகள்

ஒரு படைப்பாளியின் மொழியில் ஒலிகள் முதல் உரைக்கோவை வரை இடம்பெறும் கூறுகள் மற்றும் அமைப்புகள் பயன்பாட்டிற்கு ஏற்ப பொருண்மையின் வெளிப்பாட்டிற்கு ஒப்ப, கருத்துப் புலப்பாட்டுத் தன்மைக்கு ஏற்ப அமைவதை முன்பே விளக்கினேன். ஈண்டுச் சங்க பெண்பாற் புலவர்களின் மொழியில் இவையெல்லாம் எவ்வாறு வழங்கிச் சங்க இலக்கியக் கருத்து வெளிப்பாட்டில் பங்கேற்கின்றன என்பது தக்க எடுத்துக்காட்டுத் தந்தும் விளக்கம் தந்தும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மொழியமைப்பின் ஆற்றலுக்கு மொழிக் கூறுகள் மட்டுமே ஆக்கம் தந்துவிடா. அவற்றோடு இணைந்து பங்கேற்கும் நடைஉத்திகளும் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்று விளங்குகின்றன. ஒரு மொழியில் ஒரே தொடரமைப்பினைக் கொண்ட ஒரு வாக்கியம் ஒன்றுக்கு

மேற்பட்ட பொருள்களைத் தருகின்றது. இதற்கு அடிப்படையாக அமைவது அவ்வாக்கியம் ஒலிக்கப்படும் முறை மற்றும் அதற்குச் சமுதாயம் கொடுக்கும் சமுதாயப் பொருள் (social meaning) போன்றவையாகும்.

மொழியமைப்பின் ஆற்றலுக்குச் சொல்தேர்வு அடிப்படையானது. சரியான சொல் அமையாத வரையில் எடுத்துச் சொல்லப்படும் கருத்தின் அல்லது பொருண்மையின் முக்கியத்துவம் தெளிவாக இருப்பதில்லை எந்தவொரு வாக்கியத்திலும் சில சொற்கள் மையப்படுத்தப்படும். இலக்கண மையங்களாகச் சிலவும் கருத்து மையங்களாகச் சிலவும் அமையும்.

## சொற் பயன்பாடு

ஒரு மொழியின் கூறுகளில் எளிதில் மாற்றத்திற் குள்ளாகுபவையும் எடுத்தாளக் கூடியவையும் சொற்களேயாகும். சொற்கள் பயன்பாட்டில் எளிமை கொண்டவையாக அமைந்து மொழியாற்றல் பெற்றுத் திகழ வேண்டும். சங்க இலக்கியங்களில் உயர் செம்மை வழக்கே அதிகம் கையாளப்பட்டுள்ளன.

## பெயர்ச் சொற்கள்

| | | |
|---|---|---|
| மள்ளர் | குரிசில் | பசலை |
| மகளிர் | விசும்பு | வெண்ணெல் |
| கோடியர் | மீன் | அத்தன் |
| நொதுமலர் | விழவு | உருமினம் |
| ஆடுகளம் | விறலி | மிதிதோல் |
| துணங்கை | எயிறு | மண்டை |
| கொழுநன் | அலர் | தேறல் |
| சகடம் | செம்மல் | ஞெலிகோல் |
| கலப்பை | ஏமம் | வரகு |
| பண்டம் | புனல் | கொள் |
| உமணர் | திங்கள் | கலிங்கம் |
| கவிகை | கவளம் | தச்சர் |
| | | சிறாஅர் |

போன்றவை

### விலங்குகள்

சங்க இலக்கியங்களில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி, தலைவன் செல்லும் பாதையின் கடுமை, கொடிய விலங்குகளின் தன்மை ஆகியவற்றைக் கூறி வருந்தும் நிலையினைக் காண முடிகிறது. அந்தந்த நில விலங்குகளின் பெயர்கள்ஆங்காங்கே சுட்டிக்காட்டப்படுகின்றன.

| | |
|---|---|
| வெருகு | மா எருத்து இரலை |
| வேங்கை | செங்கட்காரான் |
| ஆளி | அறுகோட்டு உழை மான் |
| வாள்வரி | இரலைமான் |
| கோட்புலி | உழையினம் |
| கருங்கால் வெண்குருகு | ஓதி முதுபோத்து |
| கல்லாக் கடுவன் | கோழி |
| நீர்நாய் | மயில் எருத்து |
| வாளை | நல்ஆன் |
| அரவு | நல்அரா |
| குரீஇ யினம் | உரற்கால் யானை |
| மா | கரி |
| புரவி | சினைப்பசும்பாம்பு |

### அடைச்சொற்கள்

இக்கால புதுக்கவிஞர்கள் பயன்படுத்துவது போலச் சொல்லலங்காரம் ஏதுமின்றிக் கருத்தை எளிதாகப் புலப் படுத்துவது போல் அமைக்கப்பட்டுள்ளன. சொற்கள் யாவும் மிகச் சாதாரணமாக விளங்குபவையாக உள்ளன.

| | |
|---|---|
| ஓய் நடை புரவி | பல்பூங்கானல் |
| நீலமணி மிடறு | பெரும்புன்மாலை |
| வெண்குடை | நளிஇருஞ் சிலம்பு |
| சிறியிலை நெல்லித்தீங்கனி | வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை |
| நள்ளிரும் பொய்கை | பால்புரை பிறைநுதல் |
| கருங்கோட்டு ஈமம் | ஒண் ஞாயிறு |

| | |
|---|---|
| ஒண்பூங்கலிங்கம் | வைகல் சிறாஅர் |
| தண்பொருநை | மாரி வண்கை |
| பொலங்கலம் | தண்வரல் வாடை |
| கோணிப்பகட்டிலைப் பாசி | |
| நேர்கரை நுண்ணூற் கலிங்கம் | மெழுகுமெல் அடையிற் கொழுநிணம் |
| நல் ஆன் | இடிக்கும் கேளிர் |
| தீம்பால் | நெறிகோட்டு இரலைமான் |
| பசுங்கலம் | வால்இழை மகளிர் |
| மென்தினை | மென்மயில் எருத்து |
| தடமென்தோள் | செங்கட்காரான் |
| வரைமுதிர்தேன் | தொழில் மழை |
| வல்வில் இளையர் | நறுந்தாது |
| பானாட் கங்குல் | தண்டுடைய கையர் |

போன்றவை

### அளபெடைச் சொற்கள்

தளைதட்டாமல் இருக்கவும் படிப்பதற்கு இனிமை தரக்கூடியதாக இருப்பதற்கும் அளபெடைச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன எனலாம். ஆங்காங்கே அளபெடைச் சொற்கள் பயின்று வருவதைக் காண முடிகிறது.

| | | | |
|---|---|---|---|
| மள்ளர் குழீஇய | அசைஇ | குக்கூ | |
| மகளிர் தழீஇய | குரீஇயினம் | என்தூஉ | நெஞ்சம் |
| மெய்உற மரீஇ | தரீஇயர் | | |

போன்றவை

### எதிர்மறைச் சொற்கள்

ஒரு கருத்தை மறுத்துச் சொல்வதற்கு எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்படுவதுண்டு. இருமுறை எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்தி உடன்பாட்டினை வெளிப் படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுவதுண்டு. சில நேரங்களில் எள்ளி நகையாடுவதற்கும் எதிர்மறை பயன்படுவதுண்டு.

நுமக்கரிதாகுகதில்ல
செல்லாது
உண்ணாது
படாது
உதவாது

கூடுநர்ப் பிரியலன்
கொடுநா மொழியிலன்

## ஒருபொருள் பல சொற்கள்

ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் உண்டு. **மது** என்ற சொல்லிற்குத் **தேறல், கள், மட்டு, நறவு, பிழி, மகிழ், வல்சி** போன்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

தேட்கடுப்பன்ன நாட்படு **தேறல்**
சிறிய **கள்** பெறினே
மகிழ்தரன் மரபின் **மட்டே**
பிழிமகிழ் **வல்சி**

போன்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

## பல பொருள் ஒரு சொல்

சில இடங்களில் ஒரே சொல் பல பொருளைக் குறிக்க கையாளப்பட்டுள்ளது.

ஐ என்ற சொல் **தலைவன்,** அரசன், **கொழுநன், நண்பன்** என்ற பொருள்களைத் தருகின்றது.

ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்ஐ (புறம். 103)
என்னைக்கு ஊரிஃதன்மை யானும்
என்னைக்கு நாடிஃதன்மை யானும் (புறம். 387)
என்ஐ மார்பில் புண்ணும் வெய்ய (புறம். 323)

இவ்வாறு ஒரே சொல் பல பொருளைத் தருகிறது எனலாம்.

## தொடர்கள்

சொற்கள் தனியாக விளங்கும் நிலையில் அவற்றிற்கு முழுப் பொருளையும் உணர்த்தும் ஆற்றல் இல்லை. தகுந்த இடத்தில் சொற்களைப் பயன்படுத்தும் போதுதான் ஆற்றல் மிகுந்தவையாக அவை விளங்குகின்றன.

கவிஞன் சொற்களை ஒரு குறிப்பிட்ட முறையில் அமைக்கும்போதுதான் அச்சொற்கள் கருத்துப்புலப்பாட்டில் ஆற்றல் மிகுந்து விளங்குகின்றன. இதனையே சொல்லாட்சி (appropriate lexical choice) என்கிறோம்.

சொற்கள் இணைந்து தொடராக அமைகின்றன. தொடர்கள் இணைந்து வாக்கியம் உருப்பெற்றுப் பயன் பாட்டில் இடம்பெறுகிறது.

"நரம்பெழுந்து உலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்" (புறம். 278)

"மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்" (புறம். 277)

என்பனவற்றில் நரம்பெழுந்து உலறிய, நிரம்பா மென்றோள் முளரி, மருங்கு, மீன்உண் கொக்கு தூவி, வால்நரைக் கூந்தல், முதியோள், சிறுவன் என்ற சொற்கள் தனித்தனியாக வழங்கும்போது ஒரு வகையான பொருளைத் தருகின்றன. ஆனால் இவையனைத்தும் ஒரு தொடரில் இடம்பெறும் நிலையில் முதிய தாயின் நிலையினைத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன. ஆகவே இதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஆற்றல் மிகுந்த வகையில் கருத்தினை வெளிப்படுத்தும் முறையில் அமைக்கப்பட்டுள்ளதையும் கவிதைக் கோவையில் (poetical discourse) இடம்பெற்று விளங்குவதையும் காண்கிறோம்.

### வாக்கிய அமைப்பு

வாக்கியத்தைக் கருத்து வகை மற்றும் அமைப்பு வகை என இருவகையாகப் பிரிப்பர். கருத்தைக் கொண்டுச் செய்தி வாக்கியம் என்றும் வினா வாக்கியம் என்றும் விழைவு வாக்கியம் என்றும் உணர்ச்சி வாக்கியம் என்றும் பிரிப்பது ஒருவகை. அமைப்பை ஒட்டி வாக்கியத்தைத் தனி வாக்கியம் என்றும், கூட்டு வாக்கியம் என்றும் கலவை வாக்கியம் என்றும் பிரிப்பது மற்றொரு வகை என்கிறார் பரந்தாமனார் (1984:294).

"நரந்தம் நாறும் தன்கை"

"புலவு நாறும் என்தலை"

"மெல்லிழை மகளிர் ஐதகல் அல்குல்"

"மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே"

"இவற்கீத்து உண்மதி கள்ளே"

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே"

"என்ஐ மார்பில் புண்ணும் வெய்ய"

"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக தில்ல"

போன்ற தொடர்கள் சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

**உத்திகள்**

ஒருவர் ஒன்றைச் செய்யும்போது பயன்படுத்தும் தொழிற் கலை நுட்பக் கூறுகளே உத்தி எனப்படுகிறது என்கிறார் சிலம்பொலி செல்லப்பன் (1987 :19-20).

> "பொதுவாகப் படைப்பாளன் தான்கூறவந்த செய்தியான உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் முறையே உத்தி எனலாம்" என்கிறார் ந.பிச்சமுத்து (1982:4).

> "ஒரு கலைஞன் தன்துறையில் செவ்விய வெளியீட்டிற்குப் பயன் கொள்ளும் ஆற்றலும் ஆக்கமுறையும் உத்தியாகிறது என விளக்குகிறார் ச.வே. சுப்பிரமணியம் (1984:6).

சங்க இலக்கியங்களில் பாடியுள்ள பெண்பாற் புலவர்கள் உவமை, உருவகம், வருணனை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

**உவமை**

அறிந்த பொருளைக் கொண்டு அறியாத பொருளை ஒப்புமைப்படுத்தி விளக்குவது உவமை எனப்படும். இதனைத் தொல்காப்பியர்,

"வினை பயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்"
(தொ.பொ. 200)

என்ற நூற்பாவில் உவமையானது வினை, பயன், மெய், உரு என்ற நான்குடன் வரும் என எடுத்துக்காட்டுகிறார். உவமையானது,

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" (தொ.பொ. 274)

உயர்ந்த பொருளுடன்தான் உவமிக்க வேண்டும் என்கிறார். அவை,

"சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப" (தொ.பொ. 275)

என்ற நான்கின் நிலைக்களன்களையும் பெற்று வரும் என்று சுட்டிக் காட்டுகிறார் தொல்காப்பியர்.

"உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்"
(தொ.பொ. 279)

என்ற நூற்பாவில் உவமையும் உவமிக்கப்படும் பொருளும் ஒத்தவையாக இருத்தல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் உவமையினை இயற்கைப் பொருட்களோடும், பண்பாட் டோடும், பழமொழியோடும், நடைமுறைப் பழக்கவழக்கங்களோடும் ஒப்புமைப்படுத்திக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். உவமையணியே எல்லா அணிகளுக்கும் தாய் போன்றது. இதிலிருந்துதான் பிற அணிகள் உருவாக்கப்பட்டன எனலாம். சங்க இலக்கியங்களில் உவமைகள் வெறும் சொல்லலங்காரமாக இல்லாமல் கருத்திற்கேற்ப எடுத்தாளப்பட்டுள்ளன.

### இயற்கைப் பொருட்கள்

"யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போல" (புறம். 101)

என்ற பாடலில் ஔவையார் அதியமானைச் சந்திக்க எப்பொழுது சென்றாலும் வேண்டிய பரிசுப் பொருள் கொடுத்து அனுப்புவான் என்பதை விளக்க இவ்வுவமை அவரால் எடுத்தாளப்பட்டுள்ளது.

"வெடிவேய் கொள்வது போல ஓடி
தாவுவு உகளும் மா" (புறம். 302)

என்றும்

"மான் உளை அன்ன குடுமி" (புறம். 310)

எனவும் உவமை காட்டப்படுகிறது. புரவி தாவிச்செல்லும் வேகம் **வெடிவேய்** என்ற சொற்றொடருக்கும் குடுமி **மானின்** உளைக்கும் உவமிக்கப்படுகிறது.

"பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா" (குறுந். 29)

தலைவனைப் பிரிந்த தலைவியின் உள்ளம் **பசுங்கலம்** போல் உள்ளது என்று உவமிக்கப்படுகிறது.

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காங்கு
எனக்கும் உதவாது என்னைக்கும் உதவாது" (குறுந். 27)

"நல்அராக் கதுவியாங்கு என்
அல்லல் நெஞ்சம் அலமறுக் குறுமே" (குறுந். 43)

என்ற உவமைகள் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயர நிலையினைப் படம்பிடித்துக் காட்டுவதற்கு எடுத்தாளப் பட்டுள்ளன.

"சினைப் பசும்பாம்பின் சூல்முதிர்ப் பன்ன
கனத்த கரும்பின் கூம்புபொதி அவிழ" (குறுந். 35)

என்றும்,

"உயர்கோட்டு மகவுடை மந்தி போல" (குறுந். 29)

எனவும் இயற்கைப் பொருட்கள், விலங்குகளின் செயல்கள் ஆகியவற்றோடு உவமித்துக் கருத்து விளக்கப்படுகிறது.

**பண்பாட்டினைப் புலப்படுத்தும் உவமை**

சங்க காலத்தில் பூப்பெய்திய நாட்களில்/குழந்தைப் பேறு நாட்களில் கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவ தில்லை. அவர்களைக் கலந்தொடா மகளிர் என்று கூறுவர். மேலும் கணவனை இழந்த மகளிர் நல்ல உணவு உட்கொள்வ தில்லை. புல்லரிசியையே தங்கள் உணவாகக் கொள்வர்.

இக்கருத்தினையே உவமையாகக் கையாள்கின்றனர் பெண்பாற் புலவர்கள்.

"சிறுவெள் ஆம்பல் அல்லி உண்ணும்
கழிகல மகளிர் போல" (புறம். 280)

"அணங்குடை முருகன் கோட்டத்து
கலந்தொடா மகளிரின் இகழ்ந்துநின் றவ்வே"
(புறம். 299)

என்ற பாடலில் இனக்குழுத் தலைவனின் புரவிப்படையானது தாருடை வேந்தனின் புரவிப்படையுடன் பொருதும் போது தாருடை வேந்தனின் புரவிப்படை **கலந்தொடா மகளிர்** போல ஒதுங்கி நின்றது என்று உவமிக்கிறார் பொன்முடியார்.

**போர்த்திறம்**

போர் வீரனின் போர்த்திறத்தையும் அவனின் ஆற்றலையும் புலப்படுத்தும்போது உவமை கையாளப்படுகிறது.

"இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல
தோன்றாதிருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனைஎரி போல
தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே"
(புறம். 315)

ஞெலிகோல் எவ்வாறு தீயைத் தன்னுள் மறைத்து அடக்கி இருக்கின்றதோ அதுபோல அதியமானும் கோபத்தை/சீற்றத்தைத் தன் மனத்திற்குள் மறைத்து வைத்துள்ளான். ஞெலிகோலைக் கடையும் போது தீப்பிடித்துக் கொள்வது போல அதியமானும் கனைஎரிபோலத் தன் கோபத்தை/வீரத்தைப் பகைவரிடம் காட்டுவான் என ஔவையார் அதியமானை ஞெலிகோலுக்கு உவமிக்கிறார்.

"மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே" (புறம். 290)

என்ற உவமையானது மழையிலிருந்து நம்மைக் காக்கும் பனையோலைக் குடையைப் போல இப்போர்வீரன் பகைவர்கள் வீசுகின்ற வேற்படையைத் தடுத்துக் காப்பவன்

என்று போர்வீரனின் ஆற்றலை உறைப்புழி ஓலை என்று உவமிக்கிறார் ஔவையார்.

"புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே" (புறம். 86)

என்ற பாடல் ஒரு வீரனைப் பெற்றெடுத்த தாயின் வயிறு **புலிசேர்ந்து போகிய கல் அளை** என்ற உவமையின் வாயிலாக வீரனின் ஆற்றலை, போர்த்திறமையைப் பாராட்டுகிறது எனலாம்.

## பழமொழியினை உவமையாகக் கையாளுதல்

தலைவியைக் காணாது தவிக்கும் தலைவனைப் பார்த்துப் பாங்கன் அறிவுரை கூறுகிறான். அதற்குத் தலைவன் பதிலுரைப்பது போல் இவ்வுவமை கையாளப்படுகிறது.

"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே"
(குறுந். 58)

என்று காதலின் பிரிவுத் துயரை உவமைப்படுத்தியுள்ளார் வெள்ளி வீதியார்.

## ஒப்புமை

இனக்குழுத் தலைவனின் குதிரைப் படையினையும் பெருவேந்தனின் குதிரைப் படையையும் ஒப்புமைப்படுத்தி வேந்தனின் புரவிப் படையினைவிட இனக்குழுத் தலைவனின் குதிரைப்படை மிகச் சிறந்தது என்று பாராட்டுகின்றார் பொன்முடியார்.

இனக்குழுத்தலைவன் X பெருவேந்தன்/தாருடை வேந்தன்

சீறூர் மன்னன் X தாருடை மன்னன்

உழுத்ததர் உண்ட > ஓய்நடைப் புரவி

நெய்ம்மிதி அருந்திய > தாருடைப் புரவி

என ஒப்புமைப்படுத்துகிறார் புலவர்.

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்ததர் உண்ட ஓய்நடைப்புரவி
கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி அருந்திய கொய்ச்சுவல் எருத்தின்
தண்ணடை மன்னர் தாருடைப் புரவி" (புறம். 299)

என இருபெரும் வீரர்களின் தலைமையிலுள்ள புரவிப் படையின் ஆற்றலையும் தீரத்தையும் விளக்குகிறார் பொன் முடியார்.

அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அதியமானின் வீரத்தையும் போர் ஆற்றலையும் உவமை வாயிலாகவும் ஒப்புமைப்படுத்தி விளக்குகிறார்.

"இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்அணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ" (புறம். 95)

| | | |
|---|---|---|
| இவ்வே | x | அவ்வே |
| பீலி அணிந்து | x | பகைவர்க்குத்தி |
| மாலை சூட்டி | x | கோடுநுதி சிதைந்து |
| கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து | x | கொல்துறைக்குற்றில மாதோ |

தொண்டைமானின் படைக்கலன்கள் புத்தம் புதியனவாக யுத்தக்களம் காணப்படாமல் இருக்கின்றன. ஆனால் அதியமானின் படைக்கலன்கள் பகைவர்களைக் குத்தி நுனி முறிந்து அவற்றைச் செப்பம் செய்வதற்காகக் கொல்லன் பட்டறையில் உள்ளன என்று அவன் போர் ஆற்றலை வெளிப்படுத்திப் போரினால் தொண்டைமான் வீழ்ச்சியடைவது திண்ணம் என்பதை மறைமுகமாகக் கூறுகிறார் ஔவையார்.

### உருவகம்

உவமிக்கப்படும் பொருள் உவமையாகவும் உவமையாக வருவது பொருளாகவும் வருவதே உருவகம் எனலாம்.

மதி முகம் - உவமை

முகம்மதி - உருவகம்

"முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே"

(அகம். 273)

என்ற பாடல் காதல் நோய் எவ்வாறு வளர்ச்சியடைந்து துன்பப்படுத்துகிறது என விளக்குகிறது.

| | | |
|---|---|---|
| மார்பில் தோன்றிய | > | நோய் > காதல் |
| அசைவுடை நெஞ்சம் | > | நிலம் |
| உயவுத்திரள் | > | செடி |
| அம்பல் அம்சினை | > | கிளைகள் பரப்பி |
| காதல் | > | தளிர் |
| நார்இல் | > | பெருமரம் |
| அலர் அரும்பு | > | மலர் |

காதல் என்ற நோய் நெஞ்சாகிய நிலத்தில் செடியாக முளைத்துக் கிளையாகப் பரவித் தளிராகவும் பெருமரமாகவும் வளர்ந்து அலர் எனும் மலராக எல்லோர் பார்வையிலும்/ சொற்களிலும் விளங்குகிறது என்று உருவகப்படுத்துகிறார் ஔவையார்.

வருணனை

மனிதன் இயற்கையை வெல்ல முடியாது அதற்கு ஆட்பட்டே வாழ்கிறான். இயற்கை மனிதனின் அறிவியல் வாழ்விற்கு மட்டுமின்றிக் கலைவாழ்விற்கும் காரணமானது. எல்லா உயிரையும் உடன்பிறந்தனவாகக் கொள்ளுதல், இயற்கையில் இறைமையைக் காணுதல் என மனிதனின் ஆன்மீக வாழ்விற்கும் அஃது அடிப்படையாகின்றது.

இலக்கியத்தில் இயற்கையைத் தரும் நிலைகள் பல உள்ளன. அவை இயற்கையை அவ்வாறே காட்டுதல் இயற்கையைச் செயற்கையுடன் கலந்து தருதல், இயற்கையை

அழகுறப் புனைதல், இயற்கையில் பல கூறுகளை இணைத்து விளக்குதல் என்பனவாகும். இயற்கையினைக் கூறும் முறையிலும் வேறுபாடுகளுண்டு. சிறு தொடராகத் தருதல் அல்லது நீண்ட பகுதியாக அமைத்தல், எளிய குறிப்பாக அமைத்தல் அல்லது விரிவாக வருணித்தல், நுட்பமாகக் காட்சிப்படுத்துதல் அல்லது மேற்கோளாகத் தருதல்,செயற்பாடு இல்லாது ஓவியம் போலத் தருதல் அல்லது இயக்கங்கள் புலப்பட அமைத்தல் என இயற்கையை எடுத்துச் சொல்லும் முறையில் வேறுபாடுண்டு. இயற்கையை எடுத்து மொழிதல் அல்லது முன்னிலைப்படுத்தி அதனுடன் நேரடியாக அழைத்துப் பேசுதல், அல்லது இயற்கைப் பொருளே தன்னைப் பற்றிக் கூறுவதாக அமைத்தல் எனவும் வகைப்படுத்தலாம். இன்னும் கவிஞன் இயற்கையைப் படைக்கும் பாங்கில் ஐம்புலன் உணர்வுக்கும் முதன்மை கொடுத்துப் படைத்தல், புலனுக்கு முக்கியத்துவம் அளித்தல், புலனுணர்வுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்காமை எனப் பல நிலைகளில் அமையலாம்.

இலக்கியத்தின் இயல்பு, தகுதி, தேவை போன்றவற்றிற்கு ஏற்ப இயற்கையைப் பயன்படுத்துவதில் வேறுபாடு ஏற்படலாம். பின்புல வருணனை, அறிவுறுத்துதல், உள்ளுறை, இறைச்சி, குறியீடு ஆகிய பல்வேறு உத்திகளில் இயற்கை கையாளப் படுகிறது.

> "பல்பூங் கானல்முள் இலைத் தாழை
> சோறு சொரிகுடையின் கூம்புமுகை அவிழ" (நற். 335)

எனவும்,

> "கானே பூமலர்களுலிய பொழில் அகந்தோறும்
> தாம்அமர் துணையொடு வண்டு இமிழ்க்கும்மே"
> (நற். 348)

எனவும் நெய்தல் நிலத்தைக் குறிப்பிடும்போது தாழை மடலின் தன்மை, பூ, மொட்டு, கானல், பொழில், வண்டுகள் ஆகியவற்றை விவரித்தும் விளக்கப்படுகிறது.

> ". . . . முல்லை
> அரும்பு வாய் அவிழும் பெரும்புன் மாலை" (நற். 369)

என்றும்,

"கொல்லை புனத்த முல்லை மென்கொடி
எயிறு எனமுகையும் நாடற்கு" (குறுந். 186)

எனவும்,

"இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை
வெருகு சிரித்தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்" (குறுந். 220)

என்றும் வரும் பாடல்கள் முல்லை நிலத்தில் மலரும் முல்லைப் பூ, அதன் நிறம், அது மலரும் நேரம், முல்லை நிலத் தலைவனே தன் காதலன் என்பதை விளக்கிக் காட்டுகின்றன.

"வேதின வெரிநின ஓதிமுது போத்து
ஆறுசெல் மாக்கள் புள்கொளப் பொருந்தும்
சுரனே சென்றார்" (குறுந். 140)

"வெந்திறல் கடுவளி பொங்கர் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம்" (குறுந். 39)

என்ற பாடல்கள் பாலை நிலத்தில் காணப்படும் விலங்குகள், பாலை நில எயினர்கள், மரங்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன.

"நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்தகமஞ் சூல்மா மழை" (குறுந். 158)

எனவும்,

"இடம்படுபு அறியா வலம்படு வேட்டத்து
வாள்வரி நடுங்க புகல்வந்து ஆளி
உயர்நுதல் யானை புகர்முகத்து ஒற்றி
வெண்கோடு யுய்க்கும் தண்கமழ் சோலைப்
பெருவரை அடுக்கத்து ஒருவேல் ஏந்தி
தமியன் வருதல் அவனும் அஞ்சான்" (அகம். 252)

எனக் குறிஞ்சி நிலத்தை வருணிக்கும் பொழுது அந்நிலத்திலுள்ள விலங்குகள், பெய்யும் மழை, இடி, மின்னல் போன்ற இயற்கை செயற்பாடுகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.

"அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாள்இரை பெறூஉம் ஊரன்" (குறுந். 364)

"குக்கூ என்றது கோழி அதன்எதிர்
துட்கென்றன்று என்தூஉய நெஞ்சம்" (குறுந். 157)

என்ற பாடல்கள் உள்ளுறையாகத் தலைவன் பரத்தமை மேற்கொள்கிறான் என மருதநிலத்தை வருணிக்கும் போது அமைகின்றன.

## கருத்து வெளிப்பாடு

கருத்து வெளிப்பாட்டிற்கு மொழி முதன்மையான கருவி எனலாம். ஒருவர் எழுதியுள்ள கருத்துகளைப் படிப்போர் உணர்ந்து கொள்ள முடிகிறது. அதாவது கருத்தும் மொழியும் தொடர்புபடுத்தப்படுகிறது. இத்தொடர்பினால் பொருண்மை வெளிப்படுகிறது. பொருண்மை வெளிப்பாடு கேட்போருக்கும் படிப்போருக்கும் தெளிவாகப் புரியும் நிலையில் கருத்துப் புலப்பாடு செம்மையாக அமைகிறது. மையப் பொருண்மை தெளிவாக வெளிப்படும் நிலையில் கருத்துப் புலப்பாட்டுத் திறன் அதிகரிக்கும். இதன்வழி கருத்துக்கள் யாருக்காக வெளிப்படுத்தப்படுகின்றனவோ அவர்களுக்கு உரிய முறையில் சென்று சேரும். அதாவது மொழிப் பயன்பாடு என்பது நிறைவாகவும் ஆற்றல்மிக்க வகையிலும் அமையும். ஒரே புலவர் தம் கருத்தினை வெளிப்படுத்தும்போது எடுத்துக் கொள்ளும் மையப் பொருண்மைக்கு ஏற்ப மொழிப்பயன்பாடும், சொல் தேர்வும் வேறுபடுத்திக் காட்டுவார். இதனை,

முட்டுவேன் கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானும் ஓர்பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந். 28)

என்ற பாடலில் காதலனைப் பிரிந்த தலைவியின் துயரம் வெளிப்படுகிறது. பிரிவுத் துயரினால் தவிக்கும் தலைவி ஆவேசப்படுபவள் போல் காணப்படுகிறாள். அதனால் **முட்டுவேன்கொல் தாக்குவேன்கொல் ஓரேன், ஆஅ, ஒல்** என்ற சொற்களின் வாயிலாக அவளது உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார் ஔவையார்.

"செல்வார் அல்லர் எனயான் இகழ்ந்தனனே
ஒல்வாள் அல்லல் என்றுஅவர் இகழ்ந்தனரே
ஆயிடை இருபேர் ஆண்மை செய்த பூசல்
நல்அராக் கதுவியாங்கு என்
அல்லல் நெஞ்சம் அலமறுக் குறுமே" (குறுந். 43)

என்ற பாடலில் காதலனைப் பிரிந்த தலைவியின் துயரம் விளக்கப்படுகிறது. இப்பாடலில் உவமையின் வாயிலாகக் கருத்து விளக்கப்படுகிறது. புலவர் ஒரே கருத்தை விளக்கும் போது உணர்ச்சிக்கு ஏற்ப சொல்லாட்சித் திறனைக் கையாள்வதை அறிய முடிகிறது. முதல் பாடலில் தலைவியின் துயரைக் கவனியாது உறங்கும் ஊர் மக்களை ஏசும் பாங்கினைக் காண்கிறோம். இரண்டாம் பாடல் தலைவியிடம் சொல்லாமல் சென்ற தலைவனின் பிரிவு நல்அரவு தீண்டியது போல் உள்ளது என்று தன் உணர்வைத் தலைவி புலப்படுத்துவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

"குக்கூ என்றது கோழி அதன்எதிர்
துட்கென்றன்று என்தூஉய நெஞ்சம்
தோள்தோய் காதலர் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே" (குறுந். 157)

என்ற பாடலில் பூப்புக் காலத்தில் தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து போய்விடுவான் என்ற அச்சத்தின் காரணமாக வைகறை வருதல் கூடாது என்று தலைவி கூறுவதாக அள்ளூர் நன்முல்லையார் விளக்குகிறார்.

"நோம் என்நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முட்பயந் தாங்கு
இனிய செய்த நம்காதலர்
இன்னா செய்தல் நோம் என்நெஞ்சே" (குறுந். 202)

என்ற பாடலில் தலைவன் தலைவியை விட்டுப் பரத்தையர் மாட்டுப் பிரிந்து சென்றான். மீண்டும் தலைவியிடம் வந்து சேருவதற்காகத் தோழியைத் தூதாக/வாயிலாக அனுப்புகிறான். தோழி தலைவியிடம் வாயில் வேண்டத் தலைவி மறுத்துரைப்பதாகக் கூறப்பட்டுள்ளது. முதல் பாடலில்,

| | | |
|---|---|---|
| குக்கூ என்றது | > | கோழி |
| துட்கென்றன்று | > | என்நெஞ்சம் |
| வாள் போல் | > | வைகறை |
| காதலர் | > | பிரிதல் |

இப்பாடலில் தலைவியின் பூப்பு நிகழ்ச்சி மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இந்நிகழ்ச்சியால் தன்னைப் பிரிந்து விடுவான் எனத் துயரப்படும் தலைவியின் கூற்றாகப் பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நெருஞ்சி | > | புதுமலர் |
| நெருஞ்சி | > | முள் |

நெருஞ்சி முதலில் பூக்களாக மலர்ந்திருந்த போது கண்ணுக்கு இனிமையாக, இருந்தன. அதுபோலத் திருமணம் முடிந்த சில காலங்கள் தலைவனின் நடத்தையும் மலராக இருந்தது. நெருஞ்சி, முள்ளாக மாறி நடந்து வரும் பாதையில் துன்பத்தைத் தருவது போலத் தலைவனும் தன்னை விட்டுப் பிரிந்து பரத்தையர் மாட்டு ஒழுகி மீண்டு வருகிறான். இதனால் தலைவனின் நடத்தை முள்ளாக என் நெஞ்சைக் குத்துகிறது என்று ஊடல் கொள்கிறாள் தலைவி,

| | |
|---|---|
| பரத்தையர் மாட்டுப் பிரியப் போகிறான் என்ற அச்சம் | பரத்தையர் மாட்டுப் பிரிந்து சென்று மீண்டும் தலைவியிடம் வாயில் வேண்டுதல் |

இந்த இரு பாடல்களின் கருத்திற்கும், உணர்வுக்கும் ஏற்ப சொற்கள் கையாளப்பட்டுள்ளன என்பது இதன் வாயிலாகப் புலப்படுகின்றது. ஆகவே எந்தவொரு படைப்பாளியும் தான் எடுத்துக் கொண்ட கருத்திற்கும் உணர்விற்கும் ஏற்பவே சொல்லாட்சித்திறனை ஆற்றல் வாய்ந்தவையாகப் பயன் படுத்துவர் என்பது இதன்வழிப் புலனாகிறது.

### முடிவுரை

ஒவ்வொரு படைப்பாளியும் தான் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்பச் சொற்களைக் கையாளுகிறார். ஒரு புலவர் ஒரே திணையைப் பற்றிப் பாடினாலும் அதில் கூறப்படும்

கருத்து, உணர்வுக்கு ஏற்பச் சொற்பயன்பாடு மாறிவரும் என்பதை மேற்காட்டிய பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. ஆகவே மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும் கருத்து, உணர்வு, பொருண்மைக்கு ஏற்ப ஆற்றல் வாய்ந்தவையாக விளங்கும் என்பது இதன்வழிப் புலனாகிறது எனலாம்.

## கருத்து

உணவு சேகரிப்புக் காலத்தில் ஆண், பெண் இருவரும் இணைந்து உணவினைச் சேகரித்தனர். உணவு கிடைக்காத போது வேட்டையாடும் நிலை உருவாகியது. அந்நிலையில் தான் பெண்ணின் பங்களிப்புச் சிறிதுசிறிதாகக் குறையத் தொடங்கியது எனலாம். வேட்டையாடுவதற்கு வீரம், ஆற்றல் தேவைப்பட்டது. அதனால் ஆண்கள் மட்டும் வேட்டையில் பங்கு கொண்டனர். வேட்டைக்குச் சென்று வந்தபின் கிடைத்த உணவினை அனைவருக்கும் சமபங்கிட்டும், பதப்படுத்தியும் வைக்கும் தொழிலைப் பெண் ஏற்றுக்கொண்டாள். உணவு தேவையான அளவு கிடைக்காமல் போவதற்குக் காரணம் மழையின்மையே. சில காலக்கட்டங்களில் மழை பொய்த்து விடுவதால் நாட்டில் வறுமை உண்டாகிறது. இதனை இறையனார் களவியலுரையும், சிலப்பதிகாரமும் சுட்டிக்காட்டுகின்றன. முதலில் நானிலங்கள்தான் இருந்தன என்பதை,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால்" (தொல், பொ. அகத்திணை)

என்று நூற்பாவின் வாயிலாகத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார். தமிழக இயற்கைச் சூழலைப் பொருத்தவரை பாலை என்பது பெரும் மணவெளியன்று. நீண்ட நெடுங்காலம் மழை இன்மையால் முல்லையும் குறிஞ்சியும் வறட்சி எய்தி உருவாவதே பாலை.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"
(சிலம்பு, காடுகாண் காதை, 64-66)

மழையின்மை தமிழர்களின் வாழ்வைப் பெரிதும் வாட்டி இருக்கிறது என்பதை அவர்களிடையே தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் மழை வழிபாடாகிய மாரி வழிபாடும் அதனைச் சார்ந்த அம்மன் வழிபாடும் தெளிவுபடுத்துகின்றன. முல்லையும் குறிஞ்சியும் வளம் குன்றிக் காய், கனி, கிழங்கு தரத் தவறிய காலங்களில் வேட்டையாடும் நிர்பந்தம் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்போது கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடுவது அதனை அனைவரும் பகிர்ந்து உண்பது தமிழரிடையேயுள்ள பண்பு என்பதை ஆநிரைக்காகப் போரிடும் வெட்சிப் போர் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. இனக்குழுக்களில் உணவு அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படுதல் ஒரு பொதுப் பழக்கமாக இருந்தது. இதனைச் சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. கூட்டாக உணவைச் சேகரிப்பது. வேட்டையாடுவது ஆகிய நிலையிலிருந்து மாறிக் கால்நடைச் சமுதாய அமைப்புத் தோன்றியது. கால்நடைச் சமுதாயத்தில் தான் ஒன்றிலிருந்து பலவற்றைப் பெருக்க முடியும் என்பதை மாந்தர் கண்டு கொண்டனர். கால் நடைகளுக்காகப் பயிர்ப் பச்சைகளைப் பயிரிட்டு வந்த பண்டைய மக்கள் அப்பயிர்ப் பச்சைகளையும் தானியங்களையும் தாமும் உண்ண முடியும் என அறிந்து கொண்ட நிலையில் வேளாண்மை முயற்சியை மேற்கொண்டனர். "இரும்பு கண்டறியப்பட்ட நிலையில் வேளாண்மைத் தொழிலுக்கான ஏர், மண்வெட்டி முதலிய கருவிகளும் புழக்கத்திற்கு வரத் தொடங்கின. மாடு உற்பத்தி ஒருவனின் செல்வத்தின் அளவைக் காட்டியது" என்று கூறுகிறார் க.ப. அறவாணன் (1995:15). அந்தந்த நிலங்களில் கூடி வாழ்ந்த மக்கள் தங்களுக்குள் தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

## இனக்குழுத் தலைவன்

காடு, குன்று, பள்ளத்தாக்குகள் கொண்ட பகுதிகளில் இனக்குழுத் தலைவர்கள் தங்கள் அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டனர். கூட்டாகச் சேர்ந்து வாழும் வாழ்க்கையின் போது தங்களைப் பாதுகாக்க வலிமையான வீரன் தேவைப்பட்டான். அத்தகைய வீரன் அக்குழுவின் தலைவனாகிறான். இவன் அம்மக்களில் ஒருவனாக எளிமையுடையவனாக இன்பத் துன்பங்களில் பங்கேற்பவனாக விளங்குகிறான். தன்னிடமுள்ள

அல்லது தான் பெற்ற பொருளைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும் கொடையாளியாகவும் விளங்குகிறான். இதனால் புலவர்கள், பாணர்கள், பாடினியர், விறலியர் ஆகியோரால் போற்றப்படுகிறான். சான்றாக, ஔவையார் பாடிய அதியமான், குறமகள் இளவெயினி பாடிய ஏறைகோன், வெள்ளெருக்கிலையார் பாடிய வேள் எவ்வி போன்றோரைக் குறிப்பிடலாம். இக்கருத்தினை,

''சிற்றூர்த் தலைவர்களைப் பாடிய புலவர்கள் அவர்களை **வம்பவேந்தர்** என்று குறிப்பிடுகின்றனர். **வம்பு** என்பதற்குப் **புதுமை** எனப் பொருள் கூறும் தொல்காப்பியம். வேந்தர்கள் வழிவழியாக மண்ணாளும் மரபில் தோன்றியவரல்லர் என்பதை இச்சொல் குறிக்கிறது என உணர முடிகிறது. வழிமுறை வழிமுறையாக இம்மண்ணோடும் மக்களோடும் பழகி அவர்களோடு உணவருந்தி, கள் குடித்து, இன்ப, துன்பங்களில் பங்கேற்ற சீறூர்த்தலைவர்களை வேந்தர் என்று புலவர் பெருமக்கள் குறித்திலர். அவரை மன்னரென்றும், இறைவர் என்றும், குரிசிலர் என்றும் அழைத்துப் போற்றினர். இப்பெயர்களுள் மன்னர் என்பது பெருவரவினதாக உள்ளது. 'மன்' என்பதற்கு **நிலைபெறுதல்** என்பது பொருளாகும். எனவே இவர்கள் தம்மை நிலைபேறுடையவர், மண்ணொடு நீண்ட காலப் பிறப்புரிமை உடையவர் என்ற கருத்தில் இவ்வாறு குறித்தனர் என அறியலாம். இவர்களுள் குறுநில மன்னர் எனப்படுவோர் தம்மை **வேள்** என்ற குடிப்பெயரால் குறித்துக்கொண்டனர். 'வேள்' என்பதற்குத் **தலைவன்** என்பது பொருள். இப்பொருண்மை மண்ணுக்கு உரிமையுடையவன் என்பதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும்" என்று தமது நூலில் குறிப்பிடுகிறார் கு.வெ. பாலசுப்பிரமணியம் (1994 : 82).

இத்தகைய புகழ்பெற்ற குறுநில மன்னர்கள் மற்றும் இனக்குழுத் தலைவர்களைப் பெண்பாற் புவலவர்கள் மிகப் பெருமையாகப் பாடியுள்ளனர். அப்புலவர்களின் கருத்துப் பொருண்மையினை இப்பகுதி விரிவாக விளக்குகிறது.

## பெண்பாற் புலவர்கள்

சங்க இலக்கியங்களில் 42 பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களை மூவகையாகப் பிரிக்கலாம். அகப்பாடலைப் பாடியோர், புறப்பாடலைப் பாடியோர், அகம்-புறம் இரண்டினையும் பாடியோர் என்று வகைப்படுத்தலாம்.

## அகப்பாடல்

அகப்பாடல்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகள்; அவற்றின் முதல், கரு, உரிப் பொருட்கள்; வருணனை ஆகியவை இடம்பெறுகின்றன. மேலும் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, இற்பரத்தை, பரத்தையர் கூற்றுகளும் இடம் பெறுகின்றன.

### அகப்பாடலில் வரும் பொதுவான கருத்துகள்

ஐவகை நிலங்களில் நடைபெறும்/நிகழும் செயல் முறைகளும் அல்லது வருணனைகளும் பொதுவாகக் காணப் படுகின்றன. அவை நிரல்படுத்திக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. நில வருணனை (இயற்கை, கருப்பொருட்கள்)
2. பகற்குறி, இரவுக்குறி
3. பொருள் வயின் பிரிவு
4. பிரிவுத் துன்பத்தால் தலைவியின் வருத்தம்
5. விரைவில் திருமணம் முடிக்க கோருதல்
6. திருமணம் முடிக்கப் பெரியோரை அனுப்புதல்

போன்ற கருத்துகள் அனைத்துத் துறைகளிலும், திணைகளிலும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

எ.கா.

............................................................ முல்லை
அரும்பு வாய்அவிழும் பெரும்புன் மாலை
இன்றும் வருவது ஆயின் நன்றும்
அறியேன் வாழிதோழி அறியேன் (நற். 369)

என்ற பாடல் முல்லை நிலத்தையும்,

"சேண்உறத் தோன்றும் குன்றத்துக் கவாஅன்
பெயல் உழந்து உலறியமணிப் பொறிக்குடுமிப்
பீலி மஞ்ஞை ஆலும் சோலை" (நற். 357)

என்ற பாடல் குறிஞ்சி நிலத்தையும்,

"இணர்வீழ் புன்னை எக்கர் நீழல்
புணர்குறி வாய்த்த ஞான்றை" (குறுந். 299)

என்ற பாடல் நெய்தல் நிலத்தையும்,

"ஊன்பொதி அவிழாக் கோட்டுஉகிர்க் குருளை
மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
..............................................................................
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்"
(அகம். 147)

என்ற பாடல் பாலை நிலத்தையும்,

"சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ" (குறுந். 35)

என்ற பாடல் மருத நிலத்தையும் அவற்றில் வளரக்கூடிய இயற்கை வளங்களையும் சுட்டிக் காட்டுகின்றன. ஒவ்வொரு நிலத்திலும் அந்நிலத்திற்குரிய மலர், மரம், பறவை, பயிர் வகைகள் வெளிப்படுவதால் எளிதாக இனங்காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| முல்லைப்பூ | - | முல்லை நிலம் |
| குன்றம், பீலிமஞ்ஞை | - | குறிஞ்சி நிலம் |
| புன்னை | - | நெய்தல் நிலம் |
| உழைமான், வரிப்புலி, களிறு | - | பாலை நிலம் |
| கரும்பு | - | மருத நிலம் |

எனக் கருப்பொருட்களைக் கொண்டு எளிதாக உணர்ந்து கொள்ளுமாறு இப்பாடல்கள் அமைந்துள்ளன.

"நசைஆகு பண்பின் ஒரு சொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே" (குறுந். 48)

என்ற வரிகள் பகற்குறியில் தலைவனைக் காணாது வருந்தும் தலைவி தன்னிடம் அவன் வரைந்து கொள்கிறேன் என்ற உறுதிமொழி கூறினால் தன் பசலை நோய் மாறிவிடும் என்று கூறுவதாக அமைந்துள்ளன.

"நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்தகமஞ் சூல்மா மழை" (குறுந். 158)

என்ற பாடல் இரவுக்குறிக்காகத் தலைவன் வரும்போது இயற்கையில் மழைபொழிய வரவு தடைப்படுமோ என அஞ்சித் தலைவி கூறுகிறாள் என்று விளக்குகிறது.

### சிறப்பு கருத்துகள்

ஒவ்வொரு திணை, துறைகளுக்கு எனத் தனிச்சிறப்புக் கூறுகள் உண்டு. அச்சிறப்புக்கூறுகள் அந்தந்த நிலத்தின் உரிப்பொருளுக்கு ஏற்ப அமையும். அவற்றை,

1. கார் காலப் பருவ நிலை - முல்லை
2. கட்டுவிச்சி - குறிஞ்சி
3. வாயில் மறுத்தல் - மருதம்
4. இற்பரத்தை, சேரிப்பரத்தை - மருதம்
5. உடன்போக்கு - பாலை
6. இளவேனிற்காலம் - பாலை
7. கூதிர்காலம் - நெய்தல்

என வகைப்படுத்தலாம்.

கால மாரி மாலை மாமழை
இன்இசை உருமினம் முரலும்
முன்வரல் ஏமம் செய்து அகன்றோரே" (குறு. 200)

என்ற பாடல் கார் காலத்தில் திரும்பி வருகிறேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் கார்காலம் வந்த பின்பும் வர வில்லையே என ஏங்கித் தவிக்கும் தலைவியின் நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

"நோம் என்நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முட்பயந் தாங்கு
இனிய செய்த நம்காதலர்
இன்னா செய்தல் நோம் என் நெஞ்சே" (குறு. 202)

பரத்தை மாட்டுப் பிரிந்த தலைவன் வாயில் வேண்டித் தோழியிடம் கூறுகிறான். தோழியும் தலைவனின் செயலை மன்னித்து ஏற்றுக்கொள் என்று கூறியதைக் கேளாது தலைவி மறுக்கின்றாள். **சிறியிலை நெருஞ்சிகட்கு இன்புதுமலர் –** சிறிய இலைகளையுடைய நெருஞ்சியானது அழகான மஞ்சள் நிறத்தில் பூக்கள் பூத்தபோது கண்ணுக்கு இனிமையைத் தந்தன. அதுபோலத் திருமணம் முடிந்தபின் சில காலங்கள் தலைவனின் செயல்கள் பூப்போன்று இனிமையாக இருந்தன. தற்பொழுது நெருஞ்சியில் முள் தோன்றியது போல் தலைவனும் என்னைப் பிரிந்துப் பரத்தையர் மாட்டு ஒழுகும் செயலைப்

புரிந்து முள்ளாகக் காட்சியளிக்கிறான் என்று கூறி வாயில் மறுப்பதாக இப்பாடல் விளங்குகிறது.

"............................................................ வெம்போர்
நுகம்படக் காக்கும் பல்வேல் எழினி
முனை ஆன் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே" (குறு. 60)

என்ற பாடல் தலைவி, தன்னைக் குறை கூறியதைக் கேள்வி பட்ட பரத்தை உவமையுடன் கூறுவதாக அமைக்கப் பட்டுள்ளது. எழினி எனும் குறுநில மன்னன் தன் ஆநிரைகளைக் கவருவதற்காக வந்த பகைவர் கூட்டத்தினை எதிர்த்துத் தன் வேற்படையினால் அவர்களுடன் போரிட்டு ஆநிரைகளைக் காத்ததுபோல் தலைவியும் தன் தலைவனின் மார்பினைத் தன் சுற்றத்தினரோடு பாதுகாத்துக் கொள்ளட்டும் என்று கூறுகிறாள்.

| | | |
|---|---|---|
| பரத்தை | - | பகைவர் |
| தலைவி | - | எழினி |
| தலைவன் மார்பு | - | பசுக்கூட்டம் |
| தலைவியின் சுற்றம் | - | வேற்படை |

என்ற சொற்களின் வாயிலாகக் கருத்தினை ஆற்றல் மிக்க வகையில் புலப்படுத்தியுள்ளார் ஔவையார்.

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று
............................................................
காமம் தெரிதரக் கைந் நில்லாதே" (குறு. 146)

என்ற பாடலில் உடன்போக்கிற்கு ஒப்புக் கொண்ட தலைவி தன் நாணம் தலைவனோடு உடன்போக மறுக்கின்றது. ஆனால் அவனைப் பிரிய நேரிடுமோ என்ற காதல் எண்ணம் நாணத்தை மறைக்கிறது என்று கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

"............................................................ மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே" (குறு. 192)

என்ற பாடல் மாமரத்தில் கரிய குயிலானது நறிய பூந்தாது வினைக் கோதுகின்ற இளவேனிற் காலத்தில் தலைவன் வராமையால் என் கூந்தல் புனையப்படாமல் வெறுங்கையால் தடவுவேன் என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

நறுந்தாது கொழுதும் பொழுது - இளவேனில் பருவம்
வறுங்குரற் கூந்தல் - வறண்ட கூந்தல் / புனையப்படாத கூந்தல்

தலைவன் உடனிருக்கும் பொழுதே காதலியர் / மனைவியர் தம்மை அழகுபடுத்திக் கொள்வர் என்ற உண்மையினை இப்பாடல் விளக்குகிறது.

"நீர் எதிர் கருவிய கார்எதிர் கிளைமழை
ஊதைஅம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே" (குறு. 197)

என்ற பாடல் கார்காலத்தில் பெய்யும் மழையானது ஊதைக் காற்றின் குளிர்ச்சியோடு மயங்கிக் கலந்த கூதிர்காலம் எனும் கூற்றுவன் தலைவனைப் பிரிந்திருக்கும் என்னைக் கொல்லாமல் கொல்கிறது என்று தலைவி கூதிர்காலத்தில் வருகிறேன் என்று சொல்லிச் சென்ற தலைவனை எண்ணி வருந்துவதாக அமைக்கப்பட்டுள்ளது.

"அகவன் மகளே அகவன் மகளே
மனவு கோப்புஅன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டேஅவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறு. 23)

என்ற பாடல் கட்டுவிச்சியினை அழைத்துத் தலைவியின் நோய்க்குரிய காரணத்தை வினவும் செவிலியின் ஐயம் தீர்க்க தலைவி காதல் நோய் கொண்டுள்ளாள் என்பதை மறைமுகமாக உணர்த்துவாக அமைந்துள்ளது.

அவர் நல் நெடுங் குன்றம் என்ற வரியானது தலைவனின் குன்றினைப் புகழ்ந்து பாடும்போது தலைவியின் உள்ளம் உவகை கொள்கிறது என்பதைச் செவிலி அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தோழி கூறுவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனைத்துப் பெண்பாற் புலவர்களும் அகப்பொருளை மிக எளிமையாகவும் தேர்ந்த சொற்களாலும் கையாண்டுக் கருத்தை எளிமையாகப் புலப்படுத்தியுள்ளனர். அகப்பாடல்களை மட்டுமே 24 புலவர்கள் பாடியுள்ளனர். பிரிவுத்துயர் பற்றிய பாடல்களே அதிகம் காணப்படுகின்றன. தங்கள் சுற்றத்தினரை விட்டுவிட்டுப் பரிசுப்பொருள் தரும்

புரவலரை நாடி வரும் இப்பெண்பாற் புலவர்களின் பிரிவுத் துயரமே இத்தகைய பாடல்கள் பாட ஊக்கியிருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. இதனை மேலும் நுண்மையாக ஆராய வேண்டும்.

### புறப்பாடல்கள்

சங்க இலக்கியங்களில் இருவேறு மரபுகள் காணப் படுகின்றன.

1. இனக்குழுத் தலைவர்களைப் போற்றிப் பாடுதல்
2. பெருவேந்தர்களைப் போற்றிப் பாடுதல்

பெரும்பாலான பெண்பாற் புலவர்கள் போரின் / போர் வீரனின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுகின்றனர். தாய்த் தலைமைப் பண்பு அப்புலவர்களிடம் மாறாமல் இருக்கிறது. சங்க காலத்தில் இனக்குழுச் சமுதாயம், வளர்ந்த, நாகரிகமடைந்த நிலவுடைமைச் சமுதாயம் என்ற இரு நிலைகளையும் காண முடிகிறது. சங்க இலக்கியங்கள் அனைத்தும் ஒரே காலக் கட்டத்தில் பாடியவை அல்ல. வெவ்வேறு காலத்தில் பாடிய பாடல்கள் கருத்து மற்றும் திணை அடிப்படையில் தொகுக்கப் பட்டன என்று கூறலாம். அதனால் இருவேறு மரபுகளை நம்மால் இனங்கான முடிகிறது. இனக்குழுச் சமுதாயத்தில் ஆண், பெண் பாகுபாடு தீவிரமடையவில்லை. ஆண்களைப் போலவே பெண்களும் போரில் மிகுந்த விருப்பு கொண்டிருந்தனர். தங்கள் தமையன், கணவர், குழந்தைகளைக்கூடப் போருக்கு அனுப்பும் மனப்பக்குவம் அவர்களிடம் இருப்பதைக் காண முடிகிறது. புறப்பாடல்களில் வெளிப்படும் கருத்துகள் பின்வருமாறு:

1. இனக்குழுத் தலைவர்களின் பெருமை
2. கொடைச் சிறப்பு
3. தலைவர்களின் எளிமை
4. விருந்தோம்பல் பண்பு
5. விதவையரின் நிலை
6. போர்ச் சிறப்பு
7. பெண்மையின் சிறப்பு
8. காதல்
9. பெண்களின் மறச் சிறப்பு (மூதின் முல்லை)
10. நிலவுடைமைச் சமுதாயத்தில் பெண்களின் நிலை

11. மண்ணாசை

12. வேந்தர்களின் மண்ணாசை

13. இனக்குழுத் தலைவனின் இறப்பிற்கு வருத்தம்

என மையப் பொருண்மைகள் இவர்களது பாடல்களில் காணப்படுகின்றன.

## இனக்குழுத் தலைவனின் பெருமை

சங்க காலத்தில் பல்வேறு இனக்குழுத் தலைவர்களும், குறுநில மன்னர்களும் தங்களுக்கென சில பகுதிகளை உள்ளடக்கிய நாட்டினை ஆட்சிபுரிந்து வந்தனர். குறுநில மன்னர்கள் **வேள்** என்ற பெயரைச் சூடிக் கொண்டனர். வேள் பாரி, வேள் எவ்வி, ஆய் அண்டிரன் என்ற பெயர்களைச் சான்றாகக் கூறலாம். இனக்குழுத் தலைவர்களான அதியமான், வேள்எவ்வி, வேள்பாரி ஆகியோரை ஔவையார், வெள்ளெருக்கிலையார், பாரிமகளிர் பாடியுள்ளனர்.

## அதியமானின் போர்த்திறம்

தகடூர் எனும் நாட்டின் தலைவன் அதியமான். சேரர் வழியில் வந்த இனக்குழுத் தலைவன் என்றும் கூறுவர். **சத்திய புத்திரர்** என்று அசோகனின் கல்வெட்டில் குறிக்கப் பெரும் பெருமையினை உடையவன். இவனது முன்னோர்கள்தான் இப்பூவுலகிற்கு முதன்முதலில் கரும்பினைக் கொண்டு வந்தவர்கள் என்ற சிறப்புடைய குடிப் பெருமையுடையவன். சிறந்த போர் ஆற்றலும், ஈகைக் குணமும் உள்ளவன். அத்தகைய அதியமான் தன்னிடம் இரந்து வருகின்றவர்களுக்கு இல்லையெனாது வாரிக் கொடுக்கும் வள்ளலாக விளங்குகிறான். அவனிடம் பொருள் இல்லையேல் போரிட்டாவது பொருளைக் கொண்டுவந்து இரவலர்க்குத் தருபவன். போர்க்களத்தில் இருந்தபோதும் இரவலர்களுக்குக் கொடையளிப்பவன் என்று அதியமானின் வீரத்தையும் ஈகைப்பண்பினையும் பாராட்டுகிறார் ஔவையார்.

"முனைசுட எழுந்த மங்குல் மாப்புகை
மலைசூழ் மஞ்சின் மழகளிறு அணியும்
பகைப்புலத் தோனே பல்வேல் அஞ்சி
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் அடையிற் கொழுநிணம் பெருப்ப

அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்க அவன் தாளே" (புறம். 103)

நாற்புறமும் மலைகள் சூழ்ந்த மலைநாடு. அங்கு மாப்புகை போல் மஞ்சு சூழ்ந்து இருள்போலக் காட்சியளிக்கின்றது. அம்மலைத் தலைவனுடன் அதியமான் போரிடுகிறான். அப்போர்க்களத்தில் கொடுப்பதற்கு ஒன்றும் இருப்பதில்லை. ஆயினும் அதியமானிடம் சென்றால் மெழுகு மெல் அடையிற் கொழுநிணம் நிறைந்த இறைச்சி உணவினை வழங்கிடுவான் என்கிறார். அந்தக் காலத்தில் புலால் உணவே மிகச் சிறந்த உணவாக மதிக்கப்பட்டிருந்தது என்பதை இவ்வரி உணர்த்துகிறது. பகைவர் நாட்டில் போர் முனையில் இருந்தபோதும் தன்னை நாடி வரும் இரவலர்களுக்கு அவர்கள் விரும்பும் உணவினை வயிறார உண்ணக்கொடுப்பான் அதியமான் எனப் பாராட்டு கின்றார் ஔவையார்.

தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்யும் தொண்டை மானிடம் தூதாகச் சென்றுவர ஔவையாரை வேண்டுகிறான் அதியமான். ஓயாது போரில் ஈடுபட்டால் மக்கள் துன்புறுவர். இதனால் உள்நாட்டுக் குழப்பம், வறுமை ஏற்படும். அதனைத் தவிர்க்கவே உதவ வேண்டும் என்று ஔவையிடம் வினவியபோது, அதற்கு ஒப்புக்கெண்ட ஔவை தொண்டை மானின் இருப்பிடத்திற்குச் செல்கின்றார். தொண்டைமான் ஔவையை அன்புடன் வரவேற்று உபசரித்துத் தன்படைக் கலன்களைக் காண அழைத்துச் செல்கிறான். அவனது ஆணவத்தை, அகங்காரத்தை உணர்ந்து கொண்ட ஔவை,

"இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்அணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே அவ்வே
பகைவர்க் குத்தி கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணலெம் கோமான் வைந்நுதி வேலே" (புறம் 95)

தொண்டைமான் படைக்கலம் வேல் பீலியணிந்து, மாலைசூட்டி, கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து காணப்படுகிறது. அதாவது புத்தம் புதியதாக இவ்வேற் படைகள் காணப்படுகின்றன.

ஆனால் அதியமானின் வேலானது பகைவரைக்குத்தி, கோடுநுதி சிதைந்து, கொல்துறைக் குற்றில் இருக்கின்றது. ஆகவே அதியமான் உன்னைவிடப் போர் ஆற்றலில் சிறந்தவன். அவனோடு போரிட நேரிடின் தோற்க நேரிடும் என மறைமுகமாகத் தொண்டைமானிடம் அதியமானின் வீரத்தைப் புகழ்கிறார். மேலும் செல்வம் அதிகமிருந்தால் வருகின்றவர் களுக்கு வாரி வழங்கும் வள்ளல். பொருள் இல்லையாயின் உள்ளதைப் பலரோடு கூட இருந்துண்ணும் வறியவர்களின் தலைவன் என்று அவனைக் கொடைத் திறத்தினனாகவும் காட்சிக்கு எளியவனாகவும், சுற்றத்தினரைப் போற்றுபவ னாகவும், பகிர்ந்துண்ணும் பண்புள்ளவனாகவும் விளங்குகிறான் எனச் சுட்டிக் காட்டுகிறார் ஔவையார். இதனையே வள்ளுவரும்,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்"

என்ற குறள் ஔவையின் கருத்திற்கு வலுவூட்டுவதாக உள்ளது. இத்தகைய வீரம் செறிந்த அதியமானிடம் மாறுகொண்டு போர் செய்யும் மன்னர்களின் நிலையினைக் குறிப்பிடும் போது,

"இறுக்கல் வேண்டும் திறையே மறுப்பின்
ஒல்வான் அல்லன் வெல்போ ரான்எனச்
சொல்லவும் தேறீர் ஆயின் மெல்லியல்
கழற்கனி வகுத்த துணைச் சில்லோதிக்
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இரும்பூ தன்றஃத றிந்தா டுமினே" (புறம் 97)

என்ற பாடல் அதியமானுடன் எதிர் நின்று போரிட்டால் போரில் தோற்கடிக்கப்பட்டு உனது உரிமை மகளிரின் தோளினை நிரந்தரமாகப் பிரிய நேரிடும். ஆகவே அவனுக்குத் திறையினைச் செலுத்திப் பணிந்து நடந்தால் மிகவும் நன்று என்று அதியமானின் போர் ஆற்றலைப் பாராட்டுகிறார் ஔவையார்.

### அதியமானின் கொடைச் சிறப்பு

அதியமான் எப்போது சென்றாலும் முகம் சுளியாது முதல்நாளில் தந்த வரவேற்பு போல் இனிய முகமலர்ச்சியுடன் உதவக்கூடிய மனதினையுடையவன். அவனிடம் சென்றால் எப்படியும் பொருள் கிட்டும். என்ற உறுதி உண்டு என்று பாராட்டுகிறார் ஔவை.

"ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ",

ஒரு நாள், இருநாள் மட்டுமன்று; பல நாட்கள் தொடர்ந்து சென்றபோதும், பலபேரோடு கூட்டமாகச் சென்றபோதும் முதல்நாள் வரவேற்பு போலவே விருப்புடன் அளிப்பவன் அதியமான் என்றும்,

'.......................................................... யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போல
கையகத் ததுஅது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தாளே" (புறம் 101)

யானையின் கோட்டின் நடுவே வைத்த கவளம் யானைக்கு எவ்வாறு உரிமையுடையதாகின்றதோ அதுபோலவே அதியமானின் பரிசும் / கொடைத்திறனும் நம் கையில் உள்ளது என்று பாராட்டுகிறார் ஔவை.

அரியதாய், அருமருந்தாய், என்றும் இளமை நல்கும் குணமுடைய அருநெல்லிக் கனியைத் தான் உண்ணாது தமிழ் வாழ, தனக்குப் பல்வேறு வகைகளில் உதவி புரிந்த ஔவைக்கு ஈந்துக் கொடை வள்ளல்களில் ஒருவனாய்ப் போற்றப்பட்டான் அதியமான். இதனை,

"பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித்தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்குக் கீந்தனையே" (புறம் 91)

என்கிறார். நெல்லிக்கனியானது சாதாரண நெல்லிக்கனியன்று. விளையக் கூடிய இடம் பெருமலை விடரகம். எளிதில் சென்று பறிக்க முடியாத உயரத்தில் உள்ள நெல்லித் தீங்கனி. இதன் தன்மை சாதல் நீங்க வைக்கக்கூடியது. இத்தகைய அருமையான நெல்லிக்கனியைத் தான் உண்ணாது, தன் சுற்றத்தினருக்கும் கொடுக்காது ஔவைக்குத் தந்திருப்பதால் நட்பின் சிறப்பினை-நட்பின் பண்பினை-தன்னலமற்ற அன்புப் பெருக்கினைப் புலப்படுத்த முடியாது என்று ஔவை அதியமானின் கொடைத் திறத்தைப் புகழ்கிறார். மேலும்,

"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே

யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
நரந்தம் நாறும் தன்கையால்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே" (புறம் 235)

இரவலர் என்ற எண்ணம் எழாமல் தன் சுற்றத்தினர் போன்று மிக்க மகிழ்வுடன், நட்பு உறவுடன் என்னோடு இருந்து கள்ளும் உணவும் உண்டான். தன் கையால் என் தலையை வருடிக் கொடுத்தான். ஓர் அரசன் அல்லது தலைவன் யாரையும் எளிதில் அருகில் நெருங்கவிட மாட்டான். ஆனால் அதியமான் என்மீது ஆழ்ந்த அன்பும், நட்பும் கொண்டிருந்ததால் என் தலையை அன்புடன் வருடினான் என்று அதியமானின் கொடைத் திறனையும் அன்பு வெளிப்பாட்டையும் பாராட்டுகிறார் ஔவையார். அதியமானை மட்டும் புகழ்வதோடு நின்று விடாமல் அவனது மகன் பொகுட்டெழினியின் கொடைத்திறன், போர்ஆற்றலையும் பாராட்டுகிறார்.

"ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்கம் உடீஇ உண்மெனத்
தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்
கோண்மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ
ஊண்முறை ஈத்தல் அன்றியும் கோன்முறை
விருந்திறை நல்கி யோனே" (புறம் 392)

ஔவையார் அணிந்திருந்த உடையானது நைந்து கிழிந்து போன உடை. இதனை **ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி** என்ற வரியில் புலப்படுத்துகிறார். மிகச் சிறந்த நுண்ணிய வேலைப் பாடமைந்த ஆடை என்பதைக் குறிக்க **நேர்கரை நுண்ணூற் கலிங்கம்** என்று குறிக்கிறார். தன்னை நாடி வருபவர்களுக்கு அழகிய வேலைப்பாடமைந்த உடையினையும் நாட்படு தேறலையும், ஊன் உணவும் கொடுத்து உபசரித்தல் பொகுட்டெழினியின் பண்பாக விளங்குகிறது. தன் தந்தையைப் போன்றே எழினியும் ஔவையாரின் தகுதியறிந்து அவர் மனம் குளிரும் வண்ணம் கொடையளித்துள்ளான் என்பது இப்பாடல் வாயிலாகப் புலப்படுகிறது. அக்காலத்தில் பெண்களும் மது, தேறல், நறவு மாந்தி மகிழ்ந்திருந்தனர் என்பது இதன்வழி உணரமுடிகிறது. அதியமான், பொகுட்டெழினியினைத் தவிர நாஞ்சில் வள்ளுவனின் கொடைத்திறனையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

நாஞ்சில் நாட்டில் வள்ளுவன் என்னும் வள்ளல் தன்னை நாடி வரும் இரவலரின் தகுதியறிந்து வேண்டும் பொருளை வழங்கியுள்ளான் என்பதை,

"..............................................யாம்சில
அரிசி வேண்டின மாகத்தான் பிறர்
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கியோனே அன்னதோர்
தோற்றா ஈகையும் உளதுகொல்" (புறம் 140)

என்ற பாடல் பசிக்குத் தேவையான சிறிது உணவினைக் கேட்டபோது பெருங்களிறு ஒன்றையும் அது சுமந்து செல்லக் கூடிய வகையில் நெற்மூட்டைகளையும் வள்ளுவன் வழங்கினான் என வாழ்த்துகிறார் ஔவை.

ஔவையார் பாணர் குடியில் பிறந்தவர். தன் புலமையினை உணர்ந்துத் தனக்குப் பரிசில் தரக்கூடிய இனக் குழுத் தலைவர்களைத் தெரிந்து கொண்டு அவர்களிடம் சென்று உறவாடினார் என அறியமுடிகிறது. தன்மேல் அதிகம் மதிப்பு வைத்திருக்கும் அதியமான் சில நேரங்களில் ஔவையார் வருவதைக் கவனியாமல் இருந்தபோது இடித்துரைத்துத் திருத்தவும் செய்திருக்கிறார். இதனை,

"கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வருந்தலை உலகமும் அன்றே ....................
..............................................................
மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம் 206)

என்ற பாடல் தன்னை நாடி வரும் இரவலர்களின் தகுதி அறிந்து கொடுக்க வல்லவன் அதியமான். தற்பொழுது என் தகுதியறிந்து பரிசிலைத் தராது பாராமுகமாக இருக்கிறான். என்னைப் போன்ற புலவர்கள் எங்குச் சென்றாலும் அவர்களுக்குரிய மதிப்பும் பரிசும் கிடைக்கும் என இடித்துரைத்துக் கூறுகிறார். நல்ல தலைவனாய், அன்பு கொண்டவனாய் இருந்தாலும் தவறு செய்தவிடத்து அதனைச் சுட்டிக்காட்டித்திருத்துவது புலவரின் கடமை என எண்ணி அதன்படி நடந்திருக்கிறார்.

## அதியமானின் இறப்பு

கொடை வள்ளலாய்த் திகழ்ந்த அதியமான் இறந்தவுடன் ஔவையார் மனம் வருந்திப்பாடுகிறார்.

"....................................... ஈம ஒள்ளழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினும் நீள்க பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா மலையே" (புறம் 231)

என்ற பாடல் ஈமத்தீயானது வான்வரை கொழுந்துவிட்டு அதியமானின் உடலை மட்டுமே எரிக்கமுடியும். ஆனால் அவனது நேர்மையான ஆட்சி முறையானது ஞாயிறு போல் என்றும் மறையாது என்று வாழ்த்துகிறார்.

"இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலிசூட்டி நாரரி
சிறுகலத்து உகப்பவும் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவும் கொள்ளாதோனே" (புறம் 232)

என்ற பாடல் சேர மன்னனுடன் போரிட்டு வீரமரணமடைந்த அதியமான் இன்று நம்மிடையே இல்லை. அவன் இல்லாத நாளில் என் உயிரும் இல்லாமல் போயிருந்தால் நன்றாக இருக்கும். இன்று பீலி சூட்டப்பட்டுக் கள் படைக்கப்படும் நடுகல்லாய் நிற்கிறான். அவனது புகழ் இந்த மலை போல எப்போதும் ஓங்கி உயர்ந்து விளங்கும் என்று பாராட்டி அவனது இறப்பிற்கு வருந்துகிறார் ஔவையார்.

## குறிஞ்சி நிலத்தலைவன் ஏறைக்கோன்

இம்மன்னனும் ஓர் இனக்குழுத் தலைவன். இத்தலைவன் வில்லாற்றலில் மிகச்சிறந்தவன். இயற்கை வளம் மிகுந்து வளமையோடு காட்சிதரும் நாட்டையுடையவன். அவனது ஆட்சியில் விலங்குகள் தன் பிணையோடு மகிழ்ச்சியுடன் இருக்கும் என்று பாராட்டுகிறார் குறமகள் இளவெயினி.

"....................................................... எம்கோன்
சிலைசெல மலர்ந்த மார்பின் கொலைவேல்
கோடற்கண்ணி குறவர் பெருமகன்
ஆடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை

எற்படு பொழுதின் இளந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
மடமான் ஆகுபிணை பயிரின் விடர்முறை
இரும்புலிப் புகர்போத் தோர்க்கும்
பெருங்கல் நாடன்எம் ஏறைக்குத் தகுமே" (புறம் 151)

வில்லை எடுத்து அடிக்கடி வளைத்ததால் வலிமையான தோள்களைப் பெற்றுத் திகழ்கிறான். அவன் கையிலுள்ள வேல் பகைவர்களைத் தாக்கி அழிக்கும் தன்மையுடையது எனப் புகழ்ந்து பாடுகிறார்.

வேள் எவ்வி

குறுநில மன்னன். சிறந்த போர் வீரன். போரில் விழுப்புண் பட்டு வீழ்ந்த இத்தலைவனை வெள்ளெருக்கிலையார் புகழ்ந்து பாடியுள்ளார்.

"இருபாண் ஒக்கல் தலைவன் பெரும்பூண்
போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடியல் இயம்பிய குரலே" (புறம் 233)

என்ற அப்பாடல் வேள் எவ்வி பெரிய கூட்டத்தின் தலைவன்; இவனை எதிர்த்து வரும் பகைவரோடு போர் செய்து மார்பில் பல்வேறு விழுப்புண்களைப் பெற்றுள்ளான், அவ்விழுப் புண்களிலிருந்து அவனின் போர்த்திறத்தை அறிந்து கொள்ளலாம் என்று விளக்குகிறது.

"பிடியடி அன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயில்
பலரோ டுண்டான் மரீஇ யோனே" (புறம் 234)

என்ற பாடலில் தன்னை நாடி வருபவர்களுக்காக எப்போதும் அவனது வாயில் திறந்தே இருக்கும்; அவர்களோடு கூட இருந்து பகிர்ந்துண்ணும் தன்மையுடையவன்; ஆனால் இன்று தன் காதல் மனைக் கிழத்தி கையால் பிண்டச் சோறு உண்ணும் நிலைக்கு வந்துள்ளான் என்று அவனது மறைவினைக் குறித்து வருந்திப்பாடுகிறார்.

**மண்ணாசை**

குறுநில மன்னர்களின் ஈகைத்திறனும் போர் ஆற்றலும் பெருவேந்தர்களுக்கிடையில் பொறாமையினைத் தூண்டுகிறது. அம்மன்னர்களைத் தங்களுக்குத் திறை செலுத்தும் குறுநிலத் தலைவர்களாக மாற்ற எண்ணுகின்றனர். அவ்வளமிக்க நாட்டிலிருந்து செல்வங்களைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர். இதனை,

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்எம் குன்றும்பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே"
(புறம் 112)

என்று பாரிமகளிர் பாடியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| அற்றைத்திங்கள் | x | இற்றைத்திங்கள் |
| அவ்வெண்ணிலவு | x | இவ்வெண்ணிலவு |
| எந்தையும் உடையேம் | x | எந்தையும் இலம் |
| குன்றும் பிறர் கொளார் | x | குன்றும் கொண்டார் |

என்று எதிர் வினைச் சொற்களைக் கையாண்டு மூவேந்தர்களும் மண்ணாசையின் காரணமாக வஞ்சகமாக வேள்பாரியினைக் கொன்றனர் என்ற கருத்துப் பெறப்படுகிறது. பொறாமையும், மண்ணாசையும் வேந்தர்களைப் போரிடத் தூண்டுகின்றன. இதனால் குறுநில மன்னர்கள் விழுப்புண்பட்டு வீரமரணம் அடைகின்றனர். அவர்களின் குடும்பம் சீரழிகிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**போர் வீரர்களின் சிறப்பு**

ஓர் இனக்குழு பெருமையுடனும் செழுமையுடனும் இருந்தால் மண்ணாசை கொண்டு போரிடுவது இயல்பு. அவ்வகையில் இனக்குழுக்களுக்குள்ளும், பெரும் வேந்தர்களுக்கு மிடையில் அடிக்கடிப் போரிட்டுக் கொள்வது வழக்கம். ஆண்களைப் போலவே பெண்களும் அக்காலத்தில் போரினை வெறுத்தார்களில்லை. தன் குழுவினரையும், நாட்டையும் காக்க வேண்டும் என்று பெண்களும் எண்ணினர். இதே எண்ணம் அக்காலப் பெண்பாற் புலவர்களிடமும் காணப்பட்டன.

அவர்கள் போர் வீரர்களின் போர்த்திறத்தையும் பெண்மையின் வீரத்தையும் போற்றிப் புகழ்ந்து பல்வேறு பாடல்கள் பாடியுள்ளனர்.

### நொச்சி மாலை அணிதல்

போருக்குச் செல்லும் போது வீரர்கள் போரின் தன்மைக்கு ஏற்ப மாலை சூடிச் செல்வது மரபு. அவ்வகையில் எயில் காத்தலுக்காக ஒரு வீரன் நொச்சி மாலை அணிந்து போருக்குச் செல்கிறான். போரில் விழுப்புண்பட்டு வீரமரணமடைகிறான்.

> "வெருவரு குருதியொடு மயங்கி உருவுகரந்து
> ஒருவாய்ப்பட்ட தெரியல் ஊன்செத்துப்
> பருந்துகொண்டு உகப்பயாங் கண்டனம்
> மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே" (புறம் 271)

நொச்சி மாலையணிந்து போரில் ஈடுபட்ட வீரனின் மார்பில் அம்பு தைத்து இரத்தம் பெருகி வருகின்றது. அவனது கழுத்தில் அணிந்திருந்த நொச்சிமாலை குருதியில் தோய்ந்து ஊன்துண்டம் போல் காட்சியளிக்கிறது. இதனைக் கண்ட பருந்து அம்மாலையைத் தூக்கிக் கொண்டு உயரப் பறந்தது என இறந்துபட்ட போர்வீரனின் போர்த்திறமையினையும் அவனது நாட்டுப்பற்றினையும் புகழ்ந்து பாராட்டுகின்றார் வெறிபாடிய காமக்கண்ணியார்.

### களிறுகளைக் கொல்லுதல்

போர்க்களத்தில் போரிடும்போது ஒரு வீரன் தனி யொருவனாக நின்று களிறுகளை எதிர்த்து அவற்றை வெல்வது மிகச் சிறந்த வீரச் செயலாகப் போற்றப்பட்டது. இதனை,

> "வேலின் அட்டகளிறு பெயர்த்து எண்ணின்
> விண்இவர் விசும்பின் மீனும்
> தன்பெயல் உறையும் உறையாற் றாவே" (புறம். 302)

என்ற பாடலின் வாயிலாக அறியலாம். போர் வீரனின் கைவேலால் பல களிறுகள் கொல்லப்பட்டன. விண்மீன்களையும், அங்கிருந்து பொழியும் மழைத்துளிகளையும் எண்ண முடியாதது போல் அப்போர் வீரன் கொன்ற களிறுகளையும் எண்ண முடியாது எனப் பாராட்டுகிறார் வெறி பாடிய காமக் கண்ணியார். அக்காலத்தில் போர் வீரர்கள் போரில்

களிறுகளையும் புரவிகளையும் அதிகம் கொன்றால் பெருவீரராக மதிக்கப்பட்டனர் என இப்பாடல்களின் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

## கொடைச் சிறப்பு

சங்க காலத்தில் பெருவேந்தர்களும், குறுநில மன்னர்களும் தம்மிடத்து வருகின்ற பாணர், பாடினியர், விறலியர், இரவலர் ஆகியோருக்கு இல்லையெனாது பரிசுகள் வழங்கியுள்ளனர். அவரவர் தகுதியறிந்து பரிசுகள் நல்கப் பட்டன. முதலில் அவர்கள் பசியைப் போக்கச் சிறந்த உணவும், உடையும் கொடுத்து நன்கு விருந்தோம்பியுள்ளனர். தங்கள் இருப்பிடங்களில் சில மாதங்கள் தங்கியிருக்கச் செய்தபின் அவர்களின் வாழ்க்கையின் தேவைக்கேற்ப, பொன், அணிகலன், நெல்மூட்டைகள் போன்ற பரிசுகளைக் களிறு மற்றும் தேரில் ஏற்றி அனுப்பியுள்ளனர் மன்னர்கள்; இதனை,

"மறம் பாடிய பாடினியும்மே
ஏருடை விழுக் கழஞ்சில்
சீருடை இழை பெற்றிசினே
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்ச்சீர்க் கொளைவல் பாண்மகனும்மே
எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளிநாராற் பூப்பெற் றிசினே" (புறம் 11)

என்ற பாடலில் அரசனின் வீரத்தைப் புகழ்ந்து பாடிய பாடினிக்குப் பொன்னால் செய்யப்பட்ட அணிகலனும் பாணனுக்கு வெள்ளி நாரில் தொடுத்த பொற்றாமரைப் பூவும் பரிசாக வழங்கப்பட்டன எனப் பேய்மகள் இளவெயினி பாடியுள்ளார்.

"கூம்புவிடு மென்பிணி அவிழ்த்த ஆம்பல்
தேம்பாய் உள்ள தண்கமழ் மடர்உளங்
பாம்புரி அன்ன வடிவினை காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம் உடீஇ" (புறம் 383)

என்ற பாடல் தேனிலிருந்து தயாரித்த மதுவையும் பாம்புத்தோல் போன்ற மெல்லிய நன்கு வேலைப்பாடமைந்த உடையினையும் இரவலர்களுக்கு வழங்குவதை விளக்குகிறது. அக்காலத்தில்

புலால் உணவும், கள்ளும், மதுவும், நல்ல உடையும் கொடுத்து உபசரிக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

### பெண்களின் மறப்பண்பு

ஆண்களைப் போலவே பெண்களும் வீரத்தில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். தாய்வழிச் சமூகத்தில் பெண்ணே தலைவியாக இருந்து தன் குழுவைக் காப்பாற்றினாள். அதன்பின் சில காரணங்களுக்காகப் பெண்ணைப் பின் தள்ளி விட்டுத் தந்தை வழிச் சமுதாயம் உருவானது. அக்காலக் கட்டத்தில் தான் சங்க இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். ஆகவே ஆண்களின் போர் வீரம், கொடைத்திறன் ஆகியவை புகழப்படுவதைக் காணமுடிகிறது. எனினும் பெண்கள் போர்க் களத்திற்குச் சென்று போரிட முடியா விட்டாலும் தம் குழந்தைகளைப் போருக்கு அனுப்பிப் போரிடச் செய்யும் மறப்பண்பு அவர்களிடம் காணப்படுகிறது என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

"மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே
நெடுநாள் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்
பாறுமயிர் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லாள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே" (புறம். 279)

முதல் நாள் போரில் தமையனும், மறுநாள் போரில் கணவனும் விழுப்புண் பட்டு மாண்டனர். இன்றும் போர் முரசொலியைக் கேட்டுத் தன் நாட்டைக்காக்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு தானே ஒரு வேலையும் செய்யத் தெரியாத சிறுவனின் கையில் வேலினைக் கொடுத்துப் போர்முகம் நோக்கிச் செல்வாயாக என்று ஆணையிடும் மறப்பெண்கள் இருந்தனர் என்று ஒக்கூர் மாசாத்தியார் பாடியுள்ளார். ஒரு பெண்ணின் தமையன் தனியொருவனாகக் களிறெறிந்து வீரமரணமடைந்தான். அவளது கணவனோ ஆநிரைகள் காப்பதற்கான போரில் விழுப்புண்பட்டு வீழ்ந்தான். அத்தகைய

வீரம் செறிந்த மறக்குடியில் வந்தவள் என்று பெண்ணின் பெருமையினைப் புகழ்ந்து பாடுகின்றார் புலவர்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம் 312)

என்ற பொன்முடியாரின் பாடல் ஒவ்வொரு மக்களின் கடமைகள் இதுவெனச் சுட்டிக் காட்டுகிறது.

ஒவ்வொரு இனக்குழு மக்களும் தங்கள் குழுவைப் பிற குழுவினரிடமிருந்துக் காத்துக் கொள்ள போரிடத் தேவை உண்டானது. இதனால் ஆண்களைப் போலப் பெண்களும் போர்க்களத்திற்கு நேரில் சென்று போரிட முடியாவிட்டாலும் மறைமுகமாக ஆண்களுக்கு உதவினர். போரினால் ஆண்கள் பலர் கொல்லப்பட்டதால் அக்குழுவிற்கு அதிகம் ஆண்கள் தேவைப்பட்டனர். அதனால் **ஈன்று புறந்தருதல் என்தலைக் கடன்** என்ற வரி உருவானது என்று கூறலாம்.

"புலிசேர்ந்து போகிய கல்அளை போன்ற
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க் களத்தானே" (புறம். 86)

என்ற பாடல் தன் மகன் எங்கு இருக்கிறான் என்பது தாய்க்குத் தெரியாவிட்டாலும் நிச்சயமாகப் போர்க்களத்தில் இருப்பான் என்று விளக்குகிறது. புலி வசித்து அகன்ற கற்குகை போல் தன் வயிறு என்று உவமித்தல் வாயிலாக அம்மகனின் வீரத்தையும், போர்த்திறமையினையும் அத்தாய் கூறுவதாகக் காவற்பெண்டு என்ற புலவர் பாடியுள்ளார்.

"புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே
மான்உளை அன்ன குடுமித்
தோல்மிசை கிடந்த புல்அண லோனே" (புறம். 310)

என்ற பாடல் மகன் சிறுவனாயிருந்த போது இவனுடைய தந்தை களிறைத் தனியொருவனாக நின்று போரிட்டு வீரமரணமடைந்தான். அதனை அச்சிறுவன் நேரில் காணவில்லை. இன்று அவனே போர்க்களத்தில் எதிரிகளை எதிர்த்துப்

போரிட்டு வீழ்ந்து கிடக்கிறான் என்று பொன்முடியார் போர்வீரனின் போர்த்திறத்தைப் புகழ்ந்து பாடுகிறார். தந்தை எவ்வாறு வீரத்தில் சிறந்தவராகத் திகழ்ந்தாரோ அது போலவே மகனும் வீரத்தில் சிறந்தவனாக விளங்குகிறான் என்ற கருத்தைத் தெளிவாக விளக்குகிறார் பொன்முடியார்.

"படையழிந்து மாறினன் என்று பலர்கூற
மாண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலையறுத் திடுவென்யான் எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணுஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (புறம் 278)

என்ற பாடல் மூலம் பகைவரின் போருக்கு அஞ்சிப் புறமுது காட்டி மாண்டான் என்று பலர் சொல்லக் கேட்ட வயதான தாய் மிக்க வேதனையடைந்து, போர் கண்டு அஞ்சி இறந்தான் என்பது உண்மையானால் அவன் வாய் வைத்துப் பாலருந்திய என் மார்பினை அறுத்தெறிவேன் என்று சூளுரைத்துக் கையில் வாளை எடுத்துக்கொண்டுப் போர்க்களத்திற்கு நேரடியாகச் சென்று அங்கு வீழ்ந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டிப் பார்த்து, குருதி படிந்து சிவந்து அடையாளம் தெரியாமல் வேறு ஆள் போலக் கிடக்கும் தன் மகனின் வீழ்ந்த உடலைக் கண்டு அவனை ஈன்றெடுத்த நாளில் பெற்ற உவகையினைக் காட்டிலும் அதிக உவகை கொண்டாள் எனக் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் புலப்படுத்துகிறார். ஒரு சிறந்த வீரன் என்றால் மார்பில் புண் தைத்து இறப்பது சிறப்பு. அதனைத் தவிர்த்துப் போரில் புறமுதுகிட்டு வீழ்வது மிகவும் கேவலமாக அக்காலத்தில் கருதப்பட்டது என்பதை இதன்வழி அறியமுடிகிறது.

"களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறம் 277)

என்ற பூங்கணுத்திரையாரின் பாடல் வரிகள் தன்மகன் தனியொருவனாக நின்று களிறெறிந்து வீழ்ந்தான் என்று அறிந்த தாய் ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள் என்று விளக்குகின்றன.

அக்காலத்தில் களிறெறிந்து வீழ்தல், புறமுதுகு காட்டிடாமல் எதிர் நின்று போரிட்டு மடிதல், ஆநிரைகள்

காக்க தனியொருவனாக நின்று படைகளை எதிர்த்துப் போர் செய்து வீரமரணமடைதல் என்பன மிக உயர்வாகக் கருதப் பட்டன என்பதை உணர முடிகிறது.

"ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே என்ஐயும்
ஒ .............................. வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே" (புறம் 306)

என்ற அள்ளூர் நன்முல்லையாரின் பாடலானது நாள்தோறும் தன் வீட்டிற்கு விருந்தினர் வரவேண்டும் என்றும் அவ்விருந்தினர்களை உபசரிக்க போரும் அடிக்கடி நிகழ வேண்டும் என்றும் ஒரு பெண் விழைவது போல் அமைந்துள்ளது. அக்காலத்தில் ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும்கூட போரினை விரும்பியுள்ளனர் என இதன்வழிப் புலனாகிறது.

**விதவையர் நிலை**

போர்க்களத்தில் இறந்துபட்ட வீரர்களின் மனைவியர் கைம்மை நோன்பு நோற்றனர். விதவையர் தங்கள் தலையிலுள்ள முடியினைக் களைந்து, வளைகளைக் களைந்து வெள்ளாடையினை உடுத்தினர். மேலும் ஆம்பல் போன்ற அரிசியினைத் தவிர்த்துப் புல்லரிசியினை உணவாக உண்டனர். இதனை,

"பெருவளக் கொழுநன் மாய்ந்தென பொழுதுமறுத்து
இன்னா வைகல் உண்ணும்
அல்லி படூஉம் புல்ஆ யினவே" (புறம் 248)

என்ற ஒக்கூர் மாசாத்தியாரின் பாடல் ஆம்பல் போன்ற நிறத்தையுடைய நெல்லரிசியைத் தவிர்த்துவிட்டுப் புல்லரிசியை விதவையர் உண்ணுகின்றனர் என்று விளக்குகிறது.

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே" (புறம் 250)

என்ற தாயங்கண்ணியாரின் பாடல் தலைவன் போருக்குச் சென்று போரில் மாய்ந்ததன்பின் அவனது மனைவி தலைமுடி

நீக்கி, வளைகளைந்து பொலிவிழந்து காணப்படுகிறாள் என்று சுட்டிக்காட்டுகிறது.

**விதவையரின் உணவு**

கணவனை இழந்த மகளிர் சிறந்த உணவினை உண்ணாமல் மிக எளிய உணவு உண்டனர். தன் உணர்வுகளைச் சுருக்கிக் கொண்டனர் என்பதை,

"அணல்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைப்பிழி பிண்டம்
வெள்ளெள் சாந்தொடு புளிபெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரல்பெய் பள்ளி பாய்இன்றி வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம்" (புறம் 246)

என்று பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு விளக்குகிறார். வேந்தனின் மனைவி கணவன் இறந்தவுடன் தனியாகத் தனித்திருப்பது இயலாத ஒன்று. ஏனெனில் வாரிசு இல்லையெனின் போர் நிகழ வாய்ப்பு ஏற்படுவதுண்டு. அப்போது பகைவேந்தர்களால் மன்னனின் மனைவியர் சிறை பிடிக்கப்பட்டு துன்பத்திற்குள்ளாக நேரிடும். அதனைத் தவிர்க்கவே பெருங்கோப் பெண்டு,

"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுதில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே" (புறம் 246)

எனக் கணவன் எரியும் ஈமத்தீயானது குளிர்ச்சி பொருந்திய பொய்கையைப் போன்று விளங்குகிறது என்கிறார். ஆகவே கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்யாது விதவைக் கோலம் பூண்டு மிக எளிமையான உணவினை உண்டு வாழ வேண்டும் என்ற நிலை சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை இப்பாடல் விளக்குகின்றது என உணரமுடிகிறது.

## பெருவேந்தர்களின் வீரம், கொடைத்திறன்

மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பெண்பாற் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அம்மன்னர்களின் போர்த்திறன், கொடைத்திறன், மானம் சிறப்பாகப் புகழப்படுகிறது.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
.......................................................
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலகை மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே" (புறம் 66)

என்ற பாடல் காற்றின் திசையறிந்து மரக்கலத்தைச் செலுத்திக் கடலில் ஆட்சி செய்த சிறந்த குடியில் வந்தவனாகிய கரிகாலன் எனும் சோழ மன்னன் வெண்ணி எனுமிடத்தில் நடந்த போரில் சேரமன்னனுடன் பொருது வெற்றி பெற்றான். ஆனால் அவ்வெற்றிக்கு முன்னர் போர்க்களத்தில் புறமுதுகில் அம்பு பட்டதாக எண்ணி அதற்கு நாணி வடக்கிருந்த சேர மன்னனின் புகழ் மிகச் சிறந்தது என்று இரு வேந்தர்களின் சிறப்பையும் போற்றிப் புகழ்கிறார் வெண்ணிக் குயத்தியார்.

"....................................................... ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயஞ் சுட்டிய ஏம விற்பொறி
மான்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங்காலே" (புறம் 39)

என்ற பாடல் பொன் போன்ற தோற்றத்தையும் நெடிய சிகரங்களையும் உடைய எல்லை காணமுடியா இமயமலையின் மீது விற்கொடியைப் பொறித்தவன் சேர மன்னன். அம்மன்னன் மரபில் உதித்த சேர மன்னனின் விற்கொடியினையும், சிறந்த தேர்ப் படையினையும் அவனது தலைநகரான கருவூரையும் அழித்துப் புகழ்பெற்றவனாக விளங்குகிறான் சோழ மன்னன் குளமுற்றத் துஞ்சிய கிள்ளி வளவன் என்று விளக்குகிறது. சேரனும், சோழனும் சிறந்த குடியில் தோன்றியவர்கள். இருவரும் போர்த்திறமையிலும் செல்வ வளத்திலும் சிறப்பு மிக்கவர்கள். அத்தகைய சிறப்பு மிக்க சேர மன்னனைச் சோழன் வெற்றி

கொண்டான் என்று வாழ்த்திப்பாடுகிறார் மாறோக்கத்து நப்பசலையார்.

**கைக்கிளைக் காதல்**

ஒரு சிறந்த தலைவன் அல்லது மன்னனைக் காதலிப்பது போல் பாடுவது அகமரபு. அந்த வகையில் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கணையார் காதலிப்பதாகப் பாடல்கள் பாடியுள்ளார். சோழ மன்னனின் வீரத்தையும் ஆற்றலையும் கண்டு காதல் கொண்டது போல் பாடியுள்ளார்.

"அடிபுனை தொடுகழல் மைஅணற் காளைக்குஎன்
தொடிகழித் திடுதல்யான் யாய்அஞ் சுவலே
அடுதோள் முயங்கல் அவைநா ணுவலே" (புறம் 83)

என்ற பாடல் சோழ மன்னன் பெருநற்கிள்ளியின் அழகினைக் கண்டு காமுறுதல் போல் அமைந்துள்ளது.

"போரெதிர்ந்து என்ஐ போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்
ஏமுற்றுக் கழிந்த மன்னர்க்கு
உமணர் வெருஉந் துறையின் ஒன்னே" (புறம் 84)

என்ற பாடல் சோழ மன்னன் போர்க்களத்தில் வாளெடுத்துப் போரிட்டால் வெற்றி நிச்சயம். ஆகவே போர் நடைபெறும் போதே அவனது நகரில் வெற்றி மங்கல விழா கொண்டாட விழைவர். வீரமிக்க இளைஞர்கள் போரின் தீரத்தை மகிழ்வுடன் பகிர்ந்து கொள்வர் என்று விளக்குகிறது. பெருநற்கிள்ளி சிறந்த போர் வீரன். களம்புகுந்தால் வெற்றியோடு தான் திரும்புவான் என்று நக்கணையார் புகழ்கின்றார்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் பாடியுள்ள பெண்பாற் புலவர்கள் அக்காலச் சமுதாயத்தைத் தங்கள் பாடல்களில் படம்பிடித்துக் காட்டியுள்ளனர். சங்க காலத்தில் இரு மரபுகள் உள்ளன என்றும், குறுநில மன்னர்கள், இனக்குழுத் தலைவர்களையே அதிகப் பெண்பாற்புலவர்கள் பாடியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. இனக்குழுச் சமுதாயத்தில் ஆண் பெண் வேறுபாடு அதிகமில்லை. ஓரளவு சம அந்தஸ்தில்தான் இருந்துள்ளனர். பெண்கள் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

சுதந்திரமாக வெளியிடங்களுக்குச் சென்றுள்ளனர். அரசன் அவையின் அவைக்களப் புலவராகவும் இருந்துள்ளனர். தன் அரசனுக்காகத் தூது கூடச் சென்றுள்ளனர். அரசன் பரிசு தரக் காலம் தாழ்த்தும் போது இடித்துரைத்தும் கூறுகின்றனர். அரசன் புலவர் நட்பு மிகச் சிறந்ததாகவும், உயரிய பண்பாகவும் விளங்கியதைக் காண முடிகிறது. தமிழக மக்களின் விருந்தோம்பல் பண்பு தலைமையான முக்கியப் பண்பாக பாராட்டப்படுகிறது. பெண்கள் நேரடியாகப் போர்க்களத்தில் பங்கேற்காவிட்டாலும் தங்கள் குழந்தைகளையும், தமையர்களையும், கொழுநர்களையும் போருக்கு அனுப்பிய மறக்குல மங்கையராகத் திகழ்ந்துள்ளனர். புறமுதுகாட்டி ஓடுதல், வீழ்தல் மிக இழிவான செயலாக எண்ணப்பட்டது. இனக்குழுத் தலைவனின் போர் ஆற்றல், கொடைத்திறம் எல்லா பெண்பாற் புலவர்களாலும் பாராட்டப் பெற்றன. அக்காலத்தில் பெண்களும் போர் வர வேண்டும் என்று விரும்பியுள்ளனர். நடுகல் வழிபாட்டில் கள், மது, தேறல், பலிச்சோறு கொடுத்து வழிபாடு செய்யப்படுகிறது. வருகின்ற இரவலர்களின் தகுதியறிந்து வேண்டிய பரிசுப் பொருட்கள் மன்னர்களாலும் தலைவர்களாலும் வள்ளல்களாலும் வழங்கப்பட்டன. பெண்களும் கள், மது, நறவு, தேறல் மாந்தி மகிழ்ந்திருந்தனர். புலால் உணவே சிறந்த உணவாகப் போற்றப்பட்டது. பாம்புரியன்ன கலிங்கம், கொட்டை கரை துகில், பூவேலைப் பாடமைந்த உடை போன்றவற்றைக் குறுநில மன்னர்கள் வழங்கினர். பொன் அணிகலன்கள், வெள்ளி நாரால் பின்னப்பட்ட பொற்றாமரைப் பூக்கள் பெருவேந்தர்களால் பரிசளிக்கப்பட்டன. விதவையர் தலைமழித்து, கைவளை களைந்து வெள்ளாடை உடுத்தினர். புல்லரிசியை உணவாகச் சமைத்து எள்ளுடன் புளிவைத்து அரைத்த துவையலுடன் குப்பைக் கீரையில் உப்பில்லாமல் உண்டனர். மேலும் பரற்கற்களில் பாய் இல்லாமல் படுத்திருந்தனர். இத்தகைய கைம்மை நோன்பு மக்களால் கடைப்பிடிக்கப்பட்டது. பிற ஆண்களிடம்/பகை வேந்தர்களிடம் சிறைபட்டுத் துன்பத்திற்கு ஆளாகாமல் இருக்க அரசியர் உடன்கட்டை ஏறியுள்ளதைப் புறப்பாடல் சான்று பகருகின்றது. பெண்பாற் புலவர்கள் போர் ஆற்றலையும், கொடைத் திறத்தையும், பெண்மையின் பண்பு நலன்களையும் பாடியுள்ளனர் என்பது இதன்வழி அறிய முடிகிறது.

# பெண்பாற் புலவர்கள்

## அகம் பாடியோர்

1. வெள்ளி வீதியார்
2. கழார்க் கீரனெயிற்றியார்
3. வெண்பூதியார்
4. நக்கணையார்
5. நெடும்பல்லியத்தை
6. நன்னாகையார்
7. மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளையார்
8. நல்வெளியார்
9. அஞ்சி அத்தைமகள் நாகையார்
10. ஞமலி ஞழலார் நப்பசலையார்
11. முள்ளியூர் பூதியார்
12. பொதுவிற் புல்லாங் கண்ணியார்
13. ஆதிமந்தியார்
14. போந்தை பசலையார்
15. ஊன் பித்தை
16. குன்றியனார்
17. பொன்மணியார்
18. வருமுலையார்த்தி
19. அஞ்சில் அஞ்சியார்
20. குறமகள் குறியெயினி
21. காமக் கணிப்பசலையார்
22. கச்சிப்போட்டு நன்னாகையார்

## புறம் பாடியோர்

1. பெருங்கோழி நாய்கன் மகள் நக்கணையார்
2. மாற்பித்தியார்
3. தாயங்கண்ணியார்
4. வெண்ணிக் குயத்தியார்
5. காவற்பெண்டு
6. வெள்ளெருக்கிலையார்
7. குறமகள் இளவெயினி
8. பேய்மகள் இளவெயினி
9. பாரி மகளிர்
10. பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு
11. பொன்முடியார்

## அகம்–புறம் பாடியோர்

1. ஔவையார்
2. காக்கைப்பாடினி நச்செள்ளையார்
3. மாறோக்கத்து நப்பசலையார்
4. வெறிபாடிய காமக்கண்ணியார்
5. பூங்கணுத்திரையர்
6. அள்ளூர் நன்முல்லையார்
7. ஒக்கூர் மாசாத்தியார்

# சமுதாயம்

*சமூகம்*

சமூகம் என்பது ஒரு வாழ்நெறியையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் பங்குபெறும் தனிமனிதர் பலரின் கூட்டமைப் பாகும். சமூகம் என்பது பண்பாட்டை வளர்க்கும் களம் என்பர். சமூகம் என்பது உயிர்வாழ்வதற்காகப் போராடும் மக்களினத்தின் தனித்தன்மையுள்ள ஒரு குழுவாகும். தமக்குத்தாமே அமைத்துக் கொண்ட அக்குழுவின் தலை விதியையே அக்குழுவைச் சார்ந்த ஒவ்வொரு தனிமனிதனும் பெற்றிருக்கிறான். மனிதர்கள் மற்றவரைச் சார்ந்தும் மற்றவரின் கூட்டுறவோடும் வாழ வேண்டியவர்களாயுள்ளனர், என்கிறார் கு.வெ. பால சுப்பிரமணியம் (1994:1).

சமுதாயம் ஓர் அருவமான பண்பியலாக உள்ளது. ஏனெனில் அது சமூக உறவு, மரபு, சட்டம், முதலிய அடிப்படைக் கூறுகளால் அமைக்கப்பட்டதாகும். இன்னும் ஒரு கோணத்திலும் சமுதாயத்தை நோக்க வேண்டும். மனித இனத்தின் நடத்தை அதன் பொருட்டு எழும் உறவுத் தொடர்பான சிக்கல் பின்னர் அவற்றைச் சீர்ப்படுத்துதல் போன்ற கண்ணோட்டங்களுடன் சமுதாயத்தைக் கவனிக்க வேண்டும் என்று ஓடம் கூறுவார்.

சமுதாயம் என்பது வெறும் மக்களின் கூட்டமன்று அது ஒரு நிலை; ஓர் உறவுமுறை என்பதாகத்தான் பொருள்படும் என்பார் ரைட் எனும் அறிஞர்.

சமுதாயம் என்பது உறவு நிலைகளின் அமைப்பு முறையாகும். மனித இனத்தில் காணப்படும் உறவு நிலைகளின் அமைப்பு முறையே சமுதாயம் எனப்படும். பார்சன்ஸ் சமுதாயத்தை விளக்கும்போது அது மனித உறவுகளின் கூட்டத்

தொகுதி என்பார். இவ்வாறு பல்வேறு அறிஞர்கள் சமூகம்/ சமுதாயம் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தந்துள்ளனர்.

### சங்ககாலச் சமுதாயம்

சங்க காலச் சமூகம் நிலத்தையும் நிலம் இசைந்த தொழிலையும் மேற்கொண்டது. சங்க காலத்து மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்தனர். அவர்களிடம் சமகோட்டுப் பிரிவில் வேறுபாடிருந்தது. இவர்களுள் மேட்டுநிலப் பகுதியில் வாழ்ந்தவர்கள் மேய்த்தல் தொழிலை முக்கியமாகவும் கடற்கரையில் வாழ்ந்தவர்கள் மீன்பிடிப்பதை முக்கியமாகவும் நம்பி வாழ்ந்தனர். ஆற்றுப்படுகைகளில் நெற்பயிர் முதலிடம் பெற்றது. கூட்டத்தின் தலைவர்கள் கோ எனப்பட்டனர். அவர்கள் கூட்டத்தினரைப் பேணிக் காத்தனர். கல்வியிலும் அறிவிலும், அறத்திலும் நாட்டம் காட்டியவர்களிடம் செம்மையைக் கண்டனர். அவர்களை அந்தணர் என்றனர். ஒவ்வொரு கூட்டத்திலும் அரசர்களையும் அறிவர்களையும் உயர்வானவர்களாக வைத்திருந்தனர். ஏனையோரை உழைக்கும் சாமானியர்களாகக் கொண்டனர். இந்தப் பிரிவில் பலர் இருந்தாலும் ஒவ்வொரு பகுதியிலும் உழவர்களும் வணிகர்களும் முக்கியமானவர்களாக விளங்கினர். இதுவே சங்க காலத்தின் முற்பகுதியிலிருந்த சமூக அமைப்பு. அரசர், அந்தணர் ஏனையோர் என்ற முறையிலேயே சமூகம் அமைந்திருந்தது. இந்த முறை தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு பகுதிகளிலும் ஒரே விதமாக இருந்ததினால் இம்முறையை நால்வருக்கும் உரித்து என்றனர். மலைநாட்டுக் குறவர்களில் வேந்தனும், அறிவர்களும் உழைக்கும் சாமானியர்களும் இருந்தனர். நெய்தல் நிலத்திலும் இந்த அமைப்பிருந்தது. போர் செய்வதற்கென ஒரு வகுப்பினர் இல்லை. அனைவரும் போர்க் காலங்களில் ஆயுதமேந்திப் போரிட்டனர். சமயப்பணிக்கென ஓர் இனம் தனியாக இல்லை.

“தொல்காப்பியத்தில் வரும், அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற சொற்களை வைத்துக் கொண்டுச் சங்ககாலத் தமிழகத்தில் வைதீகர் வகுத்த நால்வகை சாதிப்பிரிவு இருந்தது எனப் பலர் கருதினர். தொல்காப்பியத்தில் வரும் அந்தணர் ஆகம முறை சமயமாக விளங்கியதால் வைதீகப் புரோகிதர் அல்லர். அறிவர்களையும் அறவோரையும் குறிக்கும் பொதுப் பெயரே அந்தணர் என்ற சொல்லாகும். எனவே செந்தண்மை யுடைய அறவோரே அந்தணர்; நீலம்படு உமணன் அந்தணன்

மாண்டான் என்பது உறையூர் பானை எழுத்து ஆதாரம். பிற்காலத்தில் தமிழகத்தில் புகுந்த வைதீகர் தங்களை அந்தணர் என்று கூறிக் கொண்டதால் பிற்காலத்தில் அந்தணர் என்ற சொல் பண்புப் பெயருக்குப் பதில் சாதிப் பெயராக மாறியது. எல்லாக் குடிமக்களும் போர்க்காலங்களில் வேற்றுமையின்றிப் போராடினர். வைதீகச் சாத்திரங்கள் வகுத்த வழியில் சங்ககாலத் தமிழ்ச் சமூக அமைப்பு ஏற்படவில்லை எனத் துணியலாம். வட பகுதியிலிருந்து கூட்டங் கூட்டமாகத் தமிழகம் வந்த வைதீகச் சமயத்தார் மன்னர்களின் ஆதரவுடன் தனிச் சேரிகளில் வாழ்ந்தனர். இதனைப் பார்ப்பனச் சேரிகள் என அழைத்தனர் என்கிறார் வே.தி. செல்லம் (1995-82).

இயற்கையின் கட்டுப்பாட்டுக்குட்பட்டு வாழ்ந்த சங்க காலத்து மக்களைத் தொழில்கள் வேறுபடுத்திக்கூறின. கடம்பன், தச்சன், கொல்லன், பாணன், பறையன், கூவலன், மீனவன், காரோடன் முதலிய தொழில் பிரிவுகள் இருந்தன. பாடல்கள் பாடியவன் பாணன். பறையடித்தவன் பறையன். கல்வேலை செய்தவன் காரோடன் எனத் தொழிற் பெயர்களால் மக்கள் அறியப்பட்டனர். சமூகத்தின் அடியில் கடைசியர் (புறம் 61) இழிபிறப்பினர் (புறம் 170) புலையர் இருந்தனர். அது புதிய திருப்பம் பெறவில்லை. கொல்லனும், அரசனும் ஒரே அவையத்து வீற்றிருந்து பாவியற்றினர். பல தொழில்களில் ஈடுபட்ட மக்கள் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்தனர் என்பது அதன்வழி அறியமுடிகிறது. இருப்பினும் சமூக வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்த நான்கு தொழில்களை மட்டும் தொல்காப்பியர் முன்னிறுத்தியுள்ளார் என உணர முடிகிறது.

### சமுதாய மாற்றம்

கி.மு. மூன்று/நான்காம் நூற்றாண்டுகளில் மௌரிய அரசர்களின் கொள்கைகளும் கொல்லா நோன்பும் வேதியர்களின் வேள்விச் சடங்குகளும் வடபுலத்தில் செல்வாக்கிழந்தன. இதனால் வேதியர்கள் கூட்டங் கூட்டமாக வடபுலத்தை விட்டு வெளியேறலாயினர். "பரசுராமர்" கதை கூறி மேற்குக்கரை வழியாகச் சென்று ஆங்காங்கே குடியேறினர். இவர்கள் சேரநாட்டு வேதியராயினர். தக்கணம் கடந்து தமிழகம் புகுந்த வேதியர் சோழ, பாண்டிய நாடுகளில் வேள்விக் குடிகளில் மன்னர்களால் விருந்தினர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் வேள்விகளைச் செழிப்பிற்கும் வெற்றிக்கும் சிறந்த வழி எனக்

காட்டினர். இவற்றில் மன்னர் வேதியர் நெருக்கம் அதிகமாகியது. வடவர் வருகை தொடர்ந்தது. வேள்விகளும் நிலமானிய குடியிருப்புகளும் விரிவடைந்தன. திணை சார்ந்த தொழிலுக்கு அப்பால் ஆரியர் எனப் பொதுவாகக் குறிக்கப்பட்ட இம்மக்கள் திணைச் சமுதாய அமைப்பில் பொருந்த வேண்டிய நிலை உருவாகியது. சமயம் சார்ந்த தொழிலும், கல்வி சார்ந்த பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுச் சாதாரண மக்களிலிருந்து அகன்று தனிச்சேரிகளில் வாழ்ந்தவர்களையும் அந்தணர், பார்ப்பர் என அழைத்து வந்தனர். பார்ப்பார் (அறிவர்) என்றழைத்து வந்த சொற்கள் தனிச் சேரிகளில் வாழ்ந்த வடவர்களுக்குத் தாவியது. இவர்கள் நிகம வழிகளில் முத்தீ ஓம்பி வேள்விகளில் ஈடுபட்டனர். தீ வழிபாட்டுத் தொடர்புடைய வேள்விக் குண்டங்களைச் சுற்றி நின்று நினைவிலிருந்த வேத மந்திரங்களை ஓசையாக ஒலித்தச் சமயச் சடங்கு முறைகள் கோவிலுக்குள் புகத் தொடங்கின. வணிக நகரங்கள் மறைந்து கோயில் நகரங்கள் உருவாக இவை வழிகாட்டின. செழிப்பான கழனிகள் கோயில்களுக்குப் பள்ளிச் சந்தமாக வழங்கப்பட்டன. வேதியர் குடியிருப்புகள் மாறுபட்டு அமையலாயின. பின்னாளில் கூறப்படும் வருணாசிரம சமுதாய வாழ்விற்கு இவை வித்திட்டன என்று கூறலாம்.

### சங்க காலத்தில் பெண்கள் நிலை

சங்க காலச் சமுதாய அமைப்பு, சொத்து சிதறாமைக்காகப் பெண் இனத்தைக் குலமகளிர், பரத்தையர் எனப் பகுத்திருந்தது, பரத்தையரையும் காமக்கிழத்தியர், காதற்பரத்தையர், சேரிப்பரத்தையர் என மூவகைப்படுத்திக் காட்டுகிறது.

இப்பகுப்பே அன்றைய சமுதாயத்தின் ஆரோக்கிய மற்ற அமைப்பை உணர்த்துகிறது.

> "அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
> வாளை நாள்இரை பெறூஉம் ஊரன்
> ..............................................................................
> வணங்கு இறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்
> துணங்கை நாளும் வந்தன; அவ்வரைக்
> கண்பொர மற்று அதன் கண்அவர்
> மணம் கொளற்கு இவரும் மள்ளர் போரே" (குறுந். 364)

என்ற இப்பாடலில் இற்பரத்தையானவள் சேரிப்பரத்தையரின் நிலையை எடுத்துக்கூறி எள்ளி நகையாடுவதாக அமைந்துள்ளது.

ஆடவர் தம் செல்வத்தை ஈந்துப் பரத்தையர் அழகை நுகர்ந்தனர். காதல் வாழ்வின் அடித்தளமான ஐந்திணை ஒழுக்கத்துள் மருத நிலத்தில் பரத்தையர் ஒழுக்கம் அங்கீகாரம் பெற்றிருந்தது. பெண்கள் கல்வியுரிமை பெற்றிருந்ததினால் எண்ணும் எழுத்தும் கற்றல், பாடல், ஆடல், இலக்கியம் முதலியவையும் கற்றனர். இவ்வசதியை அனைவரும் பெற்றிருந்தனர் என்பதற்கு இல்லை. ஒரு சிலரே அவ்வாய்ப்பு பெற்றிருந்தனர்.

**மணவுறவு**

மணமுறை-காதல் மணம் (களவு மணம்) எனப்பட்டது. இதனைச் சமூக ஒழுக்கமாகக் கொண்டதால் களவொழுக்கம் என்றனர். எனவே ஒத்த பருவத்தினர் ஒருவரையொருவர் விரும்பிக் காதலித்து வாழ்க்கைத்துணை பெறும் முறை ஏற்பட்டிருந்தது. ஆனால் சில நேரங்களில் அதற்கு மறுப்பும் ஏற்பட்டது. மறுப்பு ஏற்படும் பொழுது உடன்போக்கு ஏற்பட்டது. அல்லது காதலி இற்செறிக்கப்படும் போது காதலன் மடலேற ஊரார் தலையிட்டு மணம் முடித்தல், காதலைத் தெரிவிக்க முடியாத நிலையில் காதலியின் உடல் வாட்டத்தைக் கண்ட வீட்டினர் வேலன் வெறியாட்டத்திற்குப்பின் தோழி மூலம் வெளிப்பட்டு மணம் முடித்தல் போன்றவை நிகழ்ந்தன. இது இனக்குழு நிலையிலிருந்து வளர்ந்த பழக்கமாகியது. களவொழுக்கத்தில் காதலர்கள் கூடல் நிகழ்ச்சியில் ஈடுபட்டதுண்டு. கூடியபின் காதலியைக் கைவிட்ட நிலையுண்டு. எனவேதான் தொல்காப்பியத்தின்,

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (கற்பியல் 4)

என்ற நூற்பாவானது ஊர்த்தலைவர் முன்னிலையில் ஊராரும் உறவினரும் கூடி மன்றல் நடத்தி வைத்தனர் என்ற பொருள் தருகிறது.

பாடினியர், விறலியர் பாடல், ஆடல் திறமைகளில், சிறந்தவர்களாக விளங்கினர். பாணர் குலத்தில் பிறந்த ஔவையார் அரசியல் ஆலோசகராகவும், தூது செல்பவராகவும் இருந்திருக்கிறார்.

> "இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
> கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
> கடியுடை வியன் நகர் அவ்வே

பகைவர்க் குத்தி கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்" (புறம் 95)

என்ற பாடல் வாயிலாக அதியமானின் வீரத்தையும் தொண்டைமானின் வீரத்தையும் ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார் ஔவையார். பல போர்களில் ஈடுபட்டுச் சிறந்த பயிற்சி பெற்றவன் அதியமான். அதியமானுடன் போரிட நேரும் போது நீ தோற்று விடுவாய் என மறைமுகமாகத் தொண்டைமானுக்கு அறிவுறுத்துவது போல் இப்பாடலில் கூறியுள்ளார் ஔவையார்.

## பெண்களின் விருந்தோம்பல் பண்பு

தமிழர்களின் பண்பாடே விருந்தோம்புதல் தான். சங்க காலப் பெண்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். குடும்பத்தினர், உறவினருடன் வருகின்ற விருந்தினருக்குத் தேவையான அனைத்தும் தந்து உபசரிக்கின்றனர். இதனை,

"ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே" (புறம் 306)

என்ற பாடல் நாள்தோறும், விருந்து வருதல் வேண்டுமென நடுகல் வழிபாடு நிகழ்த்துவதைத் தெரிவிக்கிறது. இதன்வழி விருந்தோம்பல் பண்பு பெண்களுக்குரிய சிறந்த குணமாக விளங்குகிறது என உணரமுடிகிறது.

## பெண்களின் நாட்டுப்பற்று

நாட்டுப்பற்று ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டிய குணங்களில் ஒன்று. சங்க காலத்தில் தன் நாட்டின் மீது படையெடுத்து வரும் பகைவர்களை வேந்தனுடன் பிற ஆண்களும்/படைவீரர்களும் இணைந்துப் போரிட்டு நாட்டைக் காப்பாற்றினர். பெண்கள் ஆயுதமேய்ந்திப் போராடவில்லை. ஆனால் ஆண்களைப் போர்களத்திற்குச் சென்று போராட ஊக்குவித்தனர். தங்களின் வீர உணர்வினைக் குழந்தைகளுக்கும், கொழுநர்க்கும் ஊட்டினர் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இதனை,

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத் தொழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிறுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே" (புறம் 279)

என்ற பாடல் காட்டுகின்றது. நாட்டைக் காப்பாற்றவும் ஆநிரைகளைக் காப்பாற்றவும் தமையனையும், கணவனையும் போருக்கு அனுப்பிப் பறிகொடுத்தாள் ஒரு மங்கை. இன்றும் போர் முரசு கேட்டவுடன் தன் ஒரே புதல்வன் கையில் வேல் கொடுத்துப் போருக்குச் செல்வாயாக என்று அனுப்பும் வீரமங்கையினைச் சங்ககாலத்தில் காணமுடிகிறது. போர்க் களத்தில் போரிடும் உரிமை பெண்களிடத்தில் இல்லை. ஆனால் போருக்குச் செல்வதை ஊக்கப்படுத்தும் நிலை இருந்ததை அறிய முடிகிறது.

அக்காலத்தில் அவரவருக்குரிய வேலையைச் சரிவரச் செய்தனர். யார் குறிக்கீடும் இல்லாமல், ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருந்ததையும் அறிய முடிகிறது. இதனை,

"ஈன்றுப் புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருசமம் முருக்கி
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"
(புறம். 312)

| | | |
|---|---|---|
| தாய் | - | ஈன்று புறந்தருதல் |
| தந்தை | - | சான்றோன் ஆக்குதல் |
| கொல்லன் | - | வேல்வடித்துக் கொடுத்தல் |
| வேந்தன் | - | நன்னடை நல்கல் |
| காளை/வீரன் | - | களிறெறிந்து பெயர்தல் |

என்ற பாடல் மக்களின் வேலைப் பகிர்வை விளக்குகிறது. தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

## சிறு பெண்கள் விளையாட்டு

சிறுபெண்கள் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியோடும் விளையாடினர். பாவை செய்து விளையாடுதல், பூக்கொய்தல், நீராடுதல், கழங்காடுதல், பந்தடித்தல் போன்ற விளையாட்டுக் களை விளையாடினர்.

"அரிமயிர்த் திரள் முன்கை
வாலிழை மட மங்கையர்
வரிமணல் புனைபாவைக்குக்
குலவுச்சினை பூக் கொய்து" (புறம் 11)

என்ற பாடல் மகளிரின் விளையாட்டைப் புலப்படுத்துகிறது.

## விதவை மகளிர் நிலை

சங்க காலத்தில் விதவைகளின் நிலை மிகவும் மோசமானதாகவும்/கொடுமையானதாகவும் இருந்திருக்கின்றது. வெள்ளாடை உடுத்துதல், பரல்கற்களில் படுத்தல், புல்லரிசி உணவு உண்டல், எள், துவையல் மற்றும் குப்பைக் கீரையைக் கறியாகப் பயன்படுத்துதல், மங்கல நிகழ்ச்சிகளில் பங்கேற்காமை போன்ற சட்டத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதை உணர முடிகிறது.

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி" (புறம் 317)

என்ற வரியானது கணவனை இழந்த பெண் கூந்தல் களைந்து வளையல் நீக்கி இருக்கும் தன்மையினைப் புலப்படுத்துகிறது.

"அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரல்பெய் பள்ளிப் பாய்இன்றி வதியும்
உயவல் பெண்டீர்" (புறம் 246)

என்ற பாடல் விதவையரின் உணவு அவர்களின் படுக்கைமுறை ஆகியவற்றை விவரிக்கிறது. ஆகவே சங்ககாலத்தில்

விதவையரின் நிலை மிகக் கேவலமானதாக இருந்திருக்கிறது என்பதை இப்பாடல்கள் வழி உணரமுடிகிறது. அடையிடை கிடந்த கைப்பிழிபிண்டம் என்ற வரியானது நாள்பட்ட பழைய சோறு என்பதைப் புலப்படுத்துகிறது. பழைய சோறும், குப்பைக்கீரையும், எள் துவையலுமே அவர்களின் உணவு முறை என்பது விளக்கப்படுகிறது. சங்க காலத்தில் விதவைப் பெண்களின் நிலை மேம்பட்டதாக இருக்கவில்லை என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

### போரிடல்

பகைவரிடமிருந்து நாட்டைக் காக்கவும், தன் நாட்டை விரிவுபடுத்தவும், மன்னர்கள் அடிக்கடிப் போரில் ஈடுபட்டனர். வீரனுக்கு அழகு போரிடுதல் என்று நம்பினர். அக்கால மக்கள் உடலில் வாளால் வெட்டப்பட்ட விழுப்புண் இருப்பது பெருமையாக எண்ணப்பட்டது. இதனால் அக்காலத்தில் சதைப் பிண்டத்தையும் சிறுவர்களையும் புதைக்கும் போது வாளால் அரிந்து புதைத்தனர் எனச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
வாளில் தப்பார்" (புறம். 74)

"நீள்கழல் மறவர் செல்வழிச் செல்கென
வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ"
(புறம். 93)

என்பன போரில் விழுப்புண்பட்டு இறத்தல் மிகச் சிறப்புடையது என்றும், வாளால் பிளந்து அடக்கம் செய்வது இழிவுடையது என்றும் அக்கால மக்கள் நம்பியதைத் தருகின்றன. ஆகவே, போரிடுதல்/போர் செய்தல் மிக்க மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தது என்பதைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

"கோடுகைத்து எழுதருஉ துரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கு
இடைப்படை அழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடையாளன் மாண்புகண் டருளி
வாடு முலை ஊறிச் சுரந்தன" (புறம் 295)

என்ற பாடல் தன் மகன் களிற்றுப் படையினை எதிர்த்து நின்று மார்பில் விழுப்புண் பெற்று மாண்டான் என்ற செய்தியினை அறிந்த முதிய பெண்ணின் மார்பில் பால்சுரந்தது என்று

விளக்குகிறது. போரில் விழுப்புண் பெறுதல் சிறப்பாகக் கருதப்பட்டது.

"அண்ணல் யானை அடுகளத்து ஒழிய
அருஞ்சமம் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண்பட்ட மாறே" (புறம் 93)

என்ற பாடல் களிற்றினைத் தனியொருவனாக நின்று எதிர்த்து மார்பில் விழுப்புண் பெறுவது போற்றுதற்குரியது என விளக்குகிறது.

உயர்நிலை உலகம் எய்தினர் பலர்பட
நல்அமர் கடந்தநின் செல்லுறழ் தடக்கை"
(பதி. பத்து. பா. 52)

என்ற வரிகள் வீரர்கள் வாளால் வெட்டுப்பட்டு வீரர்கள் புகும் சொர்க்கத்தை அடைந்தனர் என்று விளக்குகிறது.

## கோட்டை மதில்கள்

பகைவர்கள் எளிதில் தாக்காதவாறு நீண்ட நெடிய மதில்களையும் அகழிகளையும், படைக்கலன்களையும் கொண்டு பெரும் வேந்தர்களின் கோட்டை மதில்கள் விளங்கின. இதனை,

"செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள்வல் முதலைய குண்டு கண்ணகழி
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை
ஒன்னாத் தெவ்வர் முனைகெட விலங்கி
நின்னின் தந்த மன்னெயில்" (பதி. பத்து. பா. 53)

என்ற பாடல் எந்திரப் பொறிகளால் எய்யப்படும் அம்புகள் அமைக்கப்பட்ட கோட்டை வாயில், கொலையில் வல்ல முதலைகளையுடைய ஆழமான அகழி, வளைவுகளால் கட்டப்பட்ட வானுயர்ந்த மதில்கள் இவற்றை உடைய கோட்டையினை உடையது சேர மன்னனின் நகரம் என்று சிறப்பிக்கிறது. ஆகவே அக்காலத்தில் பெருவேந்தர்களின் நகரம் உயர்ந்த மதில்களையுள்ளடக்கிய செயற்கை அரண்களையும் மலைகளையும் காடுகளையும் பெற்று விளங்கின என்பதை இதன் வழி உணர முடிகிறது.

**பகைவர் நாடு**

போரில் தோற்ற மன்னனின் நாடு சீரழிக்கப்பட்டது. நெல் வயல்கள் அழிக்கப்பட்டன; தீயால் சுடப்பட்டன. வயலில் கழுதைகள் பூட்டி உழப்பட்டன. எள்ளும் வரகும் விதைக்கப் பட்டன. செழுமையான, வளம் பொருந்திய பகுதிகள் பாழாக்கப் பட்டன எனப் பாடல்கள் பகருகின்றன.

"அணங்குடை மரபின் இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதை புல்இனம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ வாழி" (புறம் 392)

என்ற பாடல் பகைவரின் வளம் செறிந்த இடத்தை அழித்துக் கழுதையினை ஏராகப் பூட்டி எள்ளும், வரகும், கொள்ளும் வித்திடப்பட்டன என விளக்குகிறது. எள், வரகு, கொள் போன்ற தானிய வகைகள் சிறப்பில்லாதனவாகக் கருதப்பட்டன என இதன்வழி அறியமுடிகிறது.

**உணவுமுறை**

சங்ககாலத்தில் பெரும்பான்மையான மக்கள் புலால் உணவும், மதுவும் உட்கொண்டனர். அரசர்கள், பெரு வேந்தர்களின் அரண்மனையில்கூட புலால் உணவும் மதுவும் வருகின்ற இரவலர்க்கு வழங்கப்பட்டன. இதனை,

"தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்
கோன்மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ
ஊன்முறை ஈத்தல்" (புறம் 392)

என்றும்,

"பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் அடையிற் கொழுநிணம் பெருப்ப
அலத்தற் காலை யாயினும்" (புறம் 103)

என்றும்,

"மையூன் மொசித்த ஒக்கல்" (புறம் 96)

என்றும்,

"மகிழ்தரன் மரபின் மட்டே அன்றியும்
அமிழ்தன மரபின் ஊன்றுவை அடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி" (புறம் 95)

என்றும் அமையும் பாடல்கள் புலால் உணவையும் மதுவையும் சிறந்த உணவாகச் சித்திரிக்கின்றன. இன்றும் கூட புலால்

உணவே / அசைவ உணவே சிறந்த உணவாக எண்ணப்படுகிறது. தமிழர்களின் உணவு வகையில் அசைவ உணவு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது எனலாம்.

**கொடைத் திறன்**

பெரும் வேந்தர்களும், குறுநில மன்னர்களும் இனக்குழுத் தலைவர்களும் தம்மை நாடி வரும் இரவலர்களுக்குத் தேவையான பொருட்களையும் பரிசுகளையும் வழங்கினர். புறப்பாடல்கள் அவர்களின் கொடைத் திறனைப் பறை சாற்றுகின்றன.

"முன்னூர்ப் பொதியிற் சேர்ந்த மென்னடை
இரும்பேர் ஒக்கல் பெரும்புலம் பகற்ற
அகடுநனை வேங்கைவீகண் டன்ன
பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகென் றோனே" (புறம் 95)

என்பது சான்று.

"யாம் சில
அரிசி வேண்டினெ மாகத் தான்பிறர்
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங் கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கியோனே" (புறம் 140)

என்ற பாடல் நாஞ்சில் வள்ளுவனின் கொடைச் சிறப்பைப் புகழ்கின்றது.

"ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்கம் உடீஇ" (புறம் 392)

என்ற பாடல் கிழிந்த ஆடையினை மாற்றிப் பல்வேறு பூக்கள் நெய்யப்பட்ட சிறந்த பட்டாடையினை நல்கியதை வெளிப்படுத்துகிறது.

"மறம் பாடிய பாடினியும்மே
ஒருடை விழுக் கழஞ்சில்
சீருடை இழை பெற்றிசினே
இழை பெற்ற பாடினிக்குக்
குரல்புணர்ச்சீர்க் கொளைவல் பாண் மகனும்மே
எனவாங்கு

ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே" (புறம் 11)

என்ற பாடல் அரசனின் வீரத்தைப் புகழ்ந்து பாடிய பாடினி சிறந்த பொலிவு பெற்ற பொற்கழஞ்சால் செய்யப்பட்ட அணிகலன் (காசு மாலை) பெற்றாள். பாணன் பொற்றாமரையாகிய பூவை வெள்ளிய நாரில் தொடுக்கப்பட்ட அணிகலன் பெற்றான் என்று விளக்குகிறது.

"பூந்துகில் அல்குல் தேம்பாய் கூந்தல்
மின்னிழை விறலியர் நின்மறம்பாட
இரவலர்புன்கண் தீர நாடொறும்
உரைசால் நன்கலம் வரைவில வீசி"
(பதி. பத்து. பா. 54, வரி 58)

என்ற பாடலில் சேர மன்னனின் புகழை விறலியர் பாடுகின்றனர்; இரவலர்களின் தகுதியறிந்து சேரமன்னன் பரிசுகள் வழங்குகிறான் என வெளிப்படுத்துகிறது. ஆகவே மன்னர்கள் தங்களிடம் வரும் இரவலர்களின் தகுதியறிந்து முதலில் அவர்களின் பசிப்பிணிப்போக்கி, மகிழ்வுடன் பருக மதுவையும், உடுக்க சிறந்த உடையும் தந்து, பின் வேண்டிய பரிசுப் பொருட்களையும் தருகின்றனர் என்பதை விளக்குகின்றன. ஆகவே சங்ககாலத்தில் விருந்தோம்புதலும், கொடைத்திறனும் உயரிய பண்பாகப் போற்றப்படுவதை உணரமுடிகிறது.

**பொருள் வயின் பிரிதல்**

"பொருள் தேடுதல் புருஷலட்சணம்" என்பதும் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதும் முதுமொழிகளாகும். தன் குடும்பத்தினையும், உற்றார் உறவினர்களையும் காக்க வேண்டிப் பொருள் தேடிப் பிரிந்து செல்வது அன்றுமுதல் இன்றுவரை நடைபெற்று வரும் வழக்காகும். திருமணம் முடிக்க வேண்டுமெனில் பொருள் வேண்டும்.




எனப் பிரிவுகள் வகுக்கப்படுகின்றன. பெண்பாற் புலவர்கள் அக இலக்கியத்தில் பொருள் வயின் பிரிவினையே அதிகம் சுட்டிக் காட்டுகின்றனர்.

"இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை
வெருகு சிரித்தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசின் தோழி பொருட் பிரிந்தோரே" (குறுந். 220)

என்ற பாடல், பொருள் ஈட்டச் சென்ற தலைவன் கார்காலத்தில் வருவேன் என்று சொல்லிப் பிரிகிறான். கார் காலம் வந்தது கண்டு தலைவி வருந்துகிறாள் என்ற கருத்தினை விளக்குகிறது. ஆகவே பொருள் வயின் பிரிவு அதிகம் காணப்படுகிறது என்பதை உணரமுடிகிறது.

**பழக்க வழக்கமும் நம்பிக்கைகளும்**

சங்க கால மக்களின் பழக்கவழக்கம், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

"முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது என்தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந். 210)

என்ற பாடல், முற்றிய வெண்ணெல் அரிசியால் ஆக்கிய வெண்மையான சோற்றை ஏழுகலங்களில் இட்டு வைத்து அவற்றைக் காக்கைக்குப் படைத்தனர் என்று விளக்குகிறது. ஆகவே அக்காலத்தில் காக்கைக்குச் சோறிடுதல் பழக்கம் இருந்தது என்பதை இதன்வழி அறிய முடிகிறது. அன்றுமுதல் இன்றுவரை அப்பழக்கம் பின்பற்றப்பட்டு வருவதைக் காணலாம்.

"நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா" (புறம் 280)

என்ற வரிகள் நெல்லும் மலரும் தூவி முது பெண்டிர் விரிச்சிக் கேட்டனர் என விளக்குகின்றன. ஆகவே விரிச்சிக் கேட்டல் என்ற நம்பிக்கை சங்க கால மகளிரிடத்து காணப்படக்கூடிய பண்பாக விளங்குவதை உணரமுடிகிறது.

"நடுகற் பீலிசூட்டி நாரரி
சிறுகலத்து உகப்பவும் கொள்வன் கொல்லோ" (புறம் 232)

என்ற வரியானது நடுகல் வழிபாடு பற்றியும் பலி உணவு பற்றியும் விளக்குகிறது. போரில் வீரமரணம் அடைபவர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு நிகழ்த்துவது சங்க கால மரபு. அவ்வழிபாடே பின்னர் வளர்ச்சியடைந்து சிறு தெய்வ வழிபாடாக மாறியது எனலாம்.

"வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே" (புறம் 250)

என்ற பாடல் இறந்தவர்களுக்குப் பலிபிண்டம் அளிப்பது வழக்கம் என விளக்குகிறது. இன்றும் கூட இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

"பிடியடி அன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்" (புறம் 234)

என்ற பாடல் பலி பிண்டச் சோறு பற்றி விளக்குகிறது. இறந்தவர் வைத்திருந்த இடத்தினை நன்கு மெழுகி விளக்கிட்டு இலையில் விருப்பமான உணவுப் பொருட்களைப் படைத்து வணங்குதல் ஒரு மரபு. அது சங்க காலத்திலிருந்து இன்று வரை பின்பற்றப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

### பெருவேந்தர்கள்

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் தங்களின் காலத்திலிருந்த பெருவேந்தர்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர். சோழ மன்னனான போர்வைக் கோப் பெருங்கிள்ளியைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கணையார் பாடியுள்ளார். மாறோக்கத்து நப்பசலையார் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியுள்ளார். வெண்ணிக்குயத்தியார் சோழன் கரிகாலனைப் புகழ்ந்து பாடியுள்ளார். பேய் மகள் இளவெயினி பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற சேர மன்னனையும், காக்கைப்பாடினி நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனும் சேர மன்னனையும் பாடியுள்ளார். சோழ மன்னனையும், சேர மன்னனையுமே இப்பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர். அம்மன்னர்களின் வீரம், போர்த்திறமை, கொடைச் சிறப்பு ஆகியவை பாடல்களின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### குறுநில மன்னர்கள் / இனக்குழுத் தலைவர்கள்

பெருவேந்தர்களைப் பாடுவதைக் காட்டிலும் குறுநில மன்னர்களையும், இனக்குழுத் தலைவர்களையும் அதிகமாகப் பாடியுள்ளனர் பெண்பாற் புலவர்கள். காட்சிக்கு எளியவனாகவும், மக்களில் ஒருவனாகவும் இவ்வீரர்கள் திகழ்ந்துள்ளனர். இதனால் அவர்களை மதித்துப் போற்றி புகழ்ந்திருக்கின்றனர் என எண்ணத் தோன்றுகிறது. இதனை,

"உடைய னாயின் உண்ணவும் வல்லன்"

எனவும்,

"உண்டாயின் பதம்கொடுத்து
இல்லாயின் உடன்உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்" (புறம் 95)

என்றும்,

"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே"
(புறம் 235)

என்றும் பாடல்கள் குறுநில மன்னர்களின் எளிய தன்மையினை எடுத்துரைக்கின்றன. அவனது வசிப்பிடம் மிகச் சாதாரணமானது.

"பருத்தி வேலி சீறூர் மன்னன்" (புறம் 89)

எல்லா மக்களும் குடியிருப்பது போன்றே இம்மன்னனது இல்லமும் விளங்குகிறது. ஆகவேதான் பெரும்பாலான பெண்பாற்புலவர்கள் இவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளனர். ஔவையார், மாறோக்கத்து நப்பசலையார், குறமகள் இளவெயினி, வெறி பாடிய காமக்கண்ணியார், பொன் முடியார், மாற்பித்தியார், அள்ளூர் நன்முல்லையார், வெள்ளெருக்கிலையார், பாரிமகளிர் போன்றோர் புகழ்ந்து பாடியுள்ளனர்.

வேள்பாரி, அதிகமான் நெடுமான் அஞ்சி, வேள் எவ்வி, ஏறைக்கோன் அவியன், மலையமான் சோழிய வேணாதி திருக்கண்ணன் போன்ற குறுநிலமன்னர்களையும், பெயர் தெரியாத குறுமன்னர்களையும் பொதுவாக வீரர்களின் வீரத்தினையும் புகழ்ந்து பாடியுள்ளனர். இனக்குழு மன்னர்களின் வீரம், கொடைச் சிறப்பு, எளிமை, விருந்தோம்பல் பண்பு சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது.

## பொருளாதாரம்

சங்க காலச் சமுதாயத்தின் பொருளாதாரம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டது. உழவுத் தொழிலே முக்கியத் தொழிலாக விளங்கியது. திணைக்கு ஏற்றவாறு தொழில்கள் அமைந்தன. எல்லா மக்களும் உழைத்தனர்.

### உழவு

உழவு மக்களின் தலையாயத் தொழிலாக விளங்கியது. மக்களுடைய வளத்துக்கும் மன்னனின் வளத்துக்கும் அடிப்படையாக விளங்கியது. நெல், கரும்பு, வரகு, தினை, எள், அவரை, பயறு போன்ற பல பயிர்கள் பயிரிடப்பட்டன. நெல்லும், கரும்பும் மருத நிலத்தின் முக்கிய பயிர்களாகும். வரகும் எள்ளும் முல்லை நிலத்தின் பயிர்களாகும். தினை, பழங்கள், கிழங்குகள் குறிஞ்சி நிலத்தில் உற்பத்தியாயின.

### ஆநிரை வளர்த்தல்

ஆயர்கள் ஆநிரைகளை மேய்த்தனர். மோர், பால், வெண்ணெய், தயிர், நெய் போன்ற பொருட்களைக் கொண்டு சென்று ஆய்ச்சியர்விற்று வந்தனர். அதன் வருவாயைக் கொண்டு மேலும் ஆநிரைகளை வாங்கினர். தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் பண்டமாற்று முறையில் வாங்கினர்.

### மீன் பிடித்தல்

நெய்தல் நிலத்தில் மீன் பிடித்தல் தொழில் சிறப்பாக நடைபெற்றது. கட்டுமரங்களையும் வலைகளையும் பயன்படுத்தி மீன் பிடித்தனர். மீன்களைத் தலையில் சுமந்து சென்று விற்று தங்களுக்கு வேண்டிய பொருட்களைப் பெற்றனர். உப்பு உற்பத்தி செய்தனர். உமணர்கள் உப்பினைப் பல்வேறு இடங்களுக்கு வண்டிகளில் ஏற்றிச் சென்று வாணிபம் செய்தனர்.

### வாணிபம்

உற்பத்தித் தேவைக்கு மிஞ்சும் போது பண்டத்தை மாற்றும் நிலை உருவாகிறது. பண்டமாற்று வாணிபம் அவ்வாறுதான் துவங்கியது. உள் நாட்டில் பொருட்களைத் தலையில் சுமந்து வீதிகள் தோறும் சென்று விற்றனர். வெளியிடங்களுக்கு வண்டிகள் மூலம் பொருட்களை ஏற்றிச் சென்று விற்றனர்.

இவ்வாறு சங்ககாலச் சமுதாயம் சிறந்த பண்பாட்டுச் சிறப்புடன் விளங்கியது என்பதைப் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

# முடிவுரை

சங்க காலப் பெண்பாற் புலவர்களின் படைப்புகள் வாயிலாக வெளிப்படும் கருத்துகள் இப்பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதில் 42 பெண்பாற் புலவர்கள் அகப் பொருள் மற்றும் புறப்பொருள் பற்றிப் பாடியுள்ளனர். அகப் பொருளை மையப் பொருண்மையாக வைத்துப் பல பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர்.

களவொழுக்கம், கற்பொழுக்கம் என்ற இரு நிலைகளில் காணப்படும் கருத்துகள் அப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

## களவொழுக்கம்

இடந்தலைப்பாடு, பாங்கன் கூட்டம், பாங்கியர் கூட்டம், வரைவு கடாவுதல், பொருள் வயின் பிரிதல், இற்செறிக்கப்படுதல், தலைவன் வரவு நோக்கி ஆற்றியிருத்தல், உடன்போக்கு போன்ற கருத்துகள் அதிகமாக விளக்கப் படுகின்றன.

## கற்பொழுக்கம்

- கார் காலத்தில் வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் வராமல் இருக்க தலைவி புலம்புதல்.
- பாலை நிலத்தில் செல்லும்போது பாலை நில வருணனை, சுரம் பற்றிய செய்திகள், வறட்சி, விலங்குகளின் நிலை.
- பொருள்வயின் பிரிந்து சென்ற தலைவனை நினைத்துத் தலைவி புலம்புதல்
- தலைவன் பிரிவினை எண்ணித் துன்பப்படும் தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.
- பரத்தையர் பிரிவு.
- வாயில் மறுத்தல் போன்ற கருத்துகள் விளக்கப் படுகின்றன.

அகச் செய்திகளுக்குப் பின்புலமாக இயற்கை வருணனை இடம்பெறுகிறது. இவ்வருணனை மிகச் சாதாரணமாக வெளியிடப்படுகின்றன. வெறும் சொல்லலங்காரம் ஏதும் இடம்பெறுவதில்லை. கருத்துகளை விளக்கப் போதுமான சொல்லாட்சிகள் தேர்ந்தெடுத்துக் கையாளப் பட்டுள்ளன. உள்ளுறை உவமையும், இறைச்சியும் தேவையான இடங்களில் கையாளப்பட்டுள்ளன.

உவமைகள் மிக எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. உவமைகள் மிகச் சாதாரணமாகக் கருத்துகளைப் பெற்று விளங்குகின்றன.

ஆங்காங்கே அக்கால மன்னர்கள் பற்றிய செய்திகளும் அவர்களின் நகரங்கள் பற்றிய செய்திகளும் அகப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

சங்க காலத்தில் இரு மரபுகள் இருப்பதை அறிய முடிகிறது. குறுநில மன்னர்கள்/இனக்குழுத் தலைவர்களின் ஆட்சி/அரசியல் முறையும், பெருவேந்தர்களின் அரசியல்/ஆட்சி முறையும் இருந்தன.

இனக்குழுத் தலைவர்கள்/குறுநில மன்னர்கள் மிக எளிமையானவர்களாக இருந்தனர். மக்களோடு மக்களாக இணைந்து வாழ்ந்தனர். அவர்களின் இல்லங்களில் ஆடம்பரம் இல்லை; பெரும் வசதியும் இல்லை. மிகச் சாதாரண இல்லங்களில் வசித்தனர். காட்சிக்கு எளிமையானவனாகவும் இருக்கும் உணவினைப் பகிர்ந்து உண்ணும் தன்மையுடையவனாகவும் இருந்தான்.

பகைவரிடமிருந்துத் தன் நாட்டை மீட்பதற்காக/காப்பதற்காக இனக்குழுத் தலைவன் போரிட்டான். போர் வீரர்களோடு கலந்து படைக்குத் தலைமை ஏற்றான். களிற்றினைத் தனியொருவனாக நின்று எதிர்த்துப் போர் செய்து மரணம் அடைவதைப் பெருமையாக எண்ணினர். மார்பில் விழுப்புண்பட்டு இறப்பதைப் பெரும் பேறாக எண்ணினர். புறப்புண் பட்டால் அதற்கு நாணி வடக்கிருந்து உயிர் நீத்தனர்.

போர்த் தொழில் ஈடுபடுவது போன்றே கொடைத் திறனிலும் மிகச் சிறந்தவர்களாக விளங்கினர். தன்னை நாடி வரும் இரவலர்களின் தகுதியறிந்து தேவையான பரிசுப் பொருட்களைத் தந்தனர்.

இரவலர்களுக்குப் பரிசுப் பொருட்கள் தருவதற்காகவும் போரிட்டனர். போர்க்களத்தில் கூட இரவலர்கள் விரும்பிய பொருட்களைத் தந்தனர். அவர்களின் நாடு சிறியதாக இருந்தாலும் மனது பரந்துபட்டதாக இருந்தது.

அக்காலத்தில் புலால் உணவும் மதுவும் சிறந்த உணவாக மதிக்கப்பட்டன. இதனால் தன்னை நாடி வரும் இரவலருக்கு முதலில் உண்ணப் **புலால் உணவும்** அருந்த **மதுவும்** உடுக்க **நல்ல உடையும்** கொடுத்தனர். (பட்டுடை, கலிங்கம், பாம்புரையன்ன கலிங்கம், அன்னத் தூவியன்ன கலிங்கம்) பெருவேந்தர்களின் நகரங்கள் பெரிய மதிற்சுவர்களையும், ஆழ்ந்த, அகன்ற அகழிகளையுடைய செயற்கை அரண்களையும் பெற்றுத் திகழ்ந்தன. இயற்கை அரண்களாக மலைகளையும் காடுகளையும் பெற்று விளங்கின. போரில் தோற்ற மன்னனிடம் திறை வாங்கப்பட்டது. போரில் தோற்ற மன்னனின் நாடு பாழாக்கப்பட்டது; நெல் வயல்கள் தீக்கிரையாயின. கழுதை பூட்டப்பட்டு எள்ளும், வரகும் கொள்ளும் விதைக்கப்பட்டன.

பெரும்வேந்தர்கள் மண்ணாசை காரணமாகவும், மானத்திற்கு இழுக்கு ஏற்பட்ட போதும் போர்களில் ஈடுபட்டனர். உடன்கட்டை ஏறும் பழக்கம் அரச குடும்பத்தினரிடம் மட்டுமே இருந்தது என அறிய முடிகிறது. சான்றாகப் பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டுவின் பாடல் அமைகிறது.

"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே" (புறம் 246)

என்ற பாடல் அரசியான பெருங்கோப்பெண்டு தன் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள் என விளக்குகிறது. சாதாரண மக்களிடம் இப்பழக்கம் இல்லை.

பெண்களிடத்தில் விருந்தோம்பல் பண்பு சிறப்பாகக் காணப்படுகிறது. சங்ககாலத்தில் விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் பண்பு மிகுந்திருப்பதைப் பாடல்கள்வழி அறிய முடிகிறது.

பெண்கள் போர்களத்திற்கு நேரடியாகச் சென்று போரிட அனுமதியில்லை. ஆனால் தமையன்களையும்

கொழுநரையும், குழந்தைகளையும் போருக்குச் செல்ல ஊக்குவிக்கும் வீரமங்கையர் இருந்தனர். தன் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நாட்டுப்பற்றுணர்வு அம்மகனிடத்து இருந்தது. வீரப் புதல்வர்களைப் பெற்றுத் தருவதில் பெருமை கொண்டனர்.

தனியொருவனாகக் களிறை எதிர்த்துப் போரில் வீரமரணம் அடைவதைப் பெருமையாகக் கருதினர். மார்பில் விழுப்புண் பெற்று மடிவதே வீரனின் தகுதி என எண்ணினர். நடுகல் வழிபாடு செய்யப்பட்டது. நடுகல் வழிபாட்டின்போது விரும்பிய பொருட்களும் மதுவும் படையலாகப் படைக்கப்பட்டன.

விதவையரின் தலைமுடி மழிக்கப்பட்டது. கைகளில் வளையல்கள் கழற்றப்பட்டன. வெள்ளாடையே அவர்களின் உடையாக விளங்கியது. நாட்பட்ட பழைய சோறும், குப்பைக் கீரையும், எள்ளுத் துவையலுமே அவர்களின் உணவாக இருந்தன. மேலும் பரல்கற்களில் பாய் இல்லாமல் படுக்க வேண்டும் என்ற கடுமையான விதிமுறைகள் சங்க காலத்தில் இருந்தன என அறியமுடிகிறது.

காக்கைக்குச் சோறிடுதல், விரிச்சிக் கேட்டல் போன்ற நம்பிக்கைகள் சங்ககால மக்களிடத்தில் இருந்தன. உழவுத் தொழிலே முக்கியத் தொழிலாக இருந்தது. பிற தொழில்களான ஆநிரை மேய்த்தல், மீன் பிடித்தல், தச்சு வேலை, நெசவுத் தொழில், மட்பாண்டத்தொழில், நுண்கலைகள், போன்ற தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன.

பண்டமாற்றம் முறையில் வாணிபம் முதலில் தொடங்கப்பட்டது. அயல் நாட்டிற்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யப் பழகிய பின் நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. இதனால் நாணயத் தொழிற் சாலைகள் ஏற்படலாயின.

சங்க காலத்தில் எழுத்து வழக்கே உயர் வழக்காகக் கருதப்பட்டது. ஆகவே பெரும் பான்மையான எழுத்து வழக்குச் சொற்களே படைப்புகளில் கையாளப்பட்டன. ஆங்காங்கே வடமொழிச் சொற்கள் தன்னினமாக்கப்பட்டு மொழியில் பயன்படுத்தப்பட்டன.

அடைச்சொற்கள் மிகவும் இயல்பாக யாவருக்கும் எளிதில் புரியகூடிய வகையில் கையாளப்பட்டுள்ளன. உவமைகள் மிக எளிமையான முறையில் பயன்படுத்தப் பட்டுள்ளன. சொல்லங்காரங்களோ, படிமங்களோ, அதிகம்

கையாளப்படவில்லை. முதல், கரு, உரிப்பொருட்கள் மூலம் கருத்துகள் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

தாம் எடுத்துக் கொண்ட பொருண்மைக்கு ஏற்ப சொற்களும் அணிகளும் கையாளப்பட்டுள்ளன. ஒரே புலவர் மருதத் திணையில் பல பாடல்களை இயற்றியிருந்தாலும் அவை ஒரே மாதிரியான கருத்துகளையோ, சொல்லாட்சியோ பெற்றிருப்பதில்லை. ஆகவே பொருண்மைக்கு ஏற்ப சொல்லாட்சித் திறன் வேறுபடுகிறது என்பதை உணர முடிகிறது.

அகப்பாடல்கள் அனைத்தும் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தருகின்றன. அந்தந்த உணர்வுகளுக்கு ஏற்ற கருத்துகளும் சொல்தேர்வும் அமைகின்றன.

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் தங்கள் காலத்தில் வழக்கில் இருந்த சொற்களையும், தங்கள் கல்வி, சுற்றப்புறச் சூழல், ஆளுமைத் திறன், புலமைத்திறன் ஆகியவற்றிற்கேற்ப படைப்புகளைப் படைத்துள்ளனர். பெண்களின் நிலை மிக உயர்வாக இருந்தது எனக் கூற முடியாது. ஒரளவு சுதந்திர உணர்வுடையோராக இருந்துள்ளனர். தங்கள் வாழ்க்கைத் துணையைத் தானே தேடிக் கொள்ளும் உரிமை அப்பெண் களிடத்து இருந்தது. மேலும் காதலை நேரடியாகப் பெண் பெற்றோரிடத்தில் தெரிவிப்பதில்லை. அதற்கெனச் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. விதவையர்கள் நிலை மிக மோசமானதாக இருப்பதைப் பாடல்கள் வாயிலாக உணர முடிகிறது. வீரவுணர்வைப் பெருமையாகப் போற்றியுள்ளனர் என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

பாடினிகளும், விறலியர்களும் நாடுதோறும் சென்று வள்ளல்களிடம் யாசித்தமை தெரியவருகிறது. விருந்தோம்பல் பண்பும் கொடைத்திறனும் தமிழக மக்களின் சிறந்த பண்புகளாகப் போற்றப்பட்டுள்ளன. முதலில் இனக்குழுச் சமுதாயத்தின் கருத்துகள் அதன் அமைப்பு, செயல்பாடுகள், ஆட்சி, அரசியல், விருந்தோம்பல், கொடைத்திறன், போர் நிகழ்ச்சிகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. அதன்பின் நன்கு வளர்ச்சியடைந்த நிலவுடைமைச் சமுதாயம் உருவாகிப் பேரரசுகள் எழுந்தன. வடநாட்டிலிருந்து ஆரியர்கள் தமிழகம் நோக்கி வர ஆரம்பித்தனர். இதனால் வருணாசிரமக் கோட்பாடுகளும் சமண, பௌத்தக் கோட்பாடுகளும் இலக்கியத்திலும் தமிழக மக்களின் வாழ்க்கையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. இதனால் மாற்றங்கள் நிகழலாயின. இவற்றையெல்லாம் சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன எனலாம்.

# துணை நூற்பட்டியல்


அறவாணன், க.ப., 1992 — தமிழ்ச் சமுதாய வரலாறு(1) தமிழ்க்கோட்டம்: பாண்டிச்சேரி.

அறவாணன், க.ப., 1995 — தமிழ்ச் சமுதாய வரலாறு (சமஸ்கிருத காலம்) பச்சைப் பசேல் : புதுச்சேரி.

இராசா, கி. (பதிப்பா.) 1996 — புறநானூறு (திணைதுறை பதிப்பு) பார்த்திபன் பதிப்பகம் திருச்சிராப்பள்ளி.

இராமச்சந்திரன், சி.ஈ, 1997 — சங்க கால வரலாறு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை.

கருணாகரன், கி., ஜெயா, வ., 1993 — குறள்மொழியும் நெறியும் மணியம் பதிப்பகம் : குறிஞ்சிப் பாடி.

சண்முகம், செ.வை., 1998 — இலக்கியமும் மொழியமைப்பும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் : சென்னை.

சுப்பிரமணியம், ச.வே., 1984 — இளங்கோவின் இலக்கிய உத்திகள், சென்னை.

சுப்பிரமணியம், ச.வே., 1984 — "சங்க இலக்கியத்தில் இயற்கை" சங்க இலக்கியக் கட்டுரைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

செல்லப்பன், சு. சிலம்பொலி 1987 — வளரும் தமிழ் அருணோதயம் : சென்னை.

செல்லம், வேதி, 1995 — தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம் சென்னை.

ஞானமூர்த்தி, தா.ஏ., 1980 — இலக்கியத் திறனாய்வியல், சிந்தாமணி அச்சகம் : கோவை.

தட்சிணாமூர்த்தி, அ. 1987 — தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம் : சென்னை.

தொல்காப்பியர், 2000 — தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை) கழக வெளியீடு : சென்னை.

பாலசுப்பிரமணியம், கு.வெ., 1994 — சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் : தஞ்சாவூர்.

பாஸ்கரன், க., 1994 — சமுதாயத் தத்துவம்

எட்டாம் உலகத்தமிழ் மாநாடு, பதிப்புச் சுழல்நிதி வெளியீடு, தமிழ்ப் பல்கலைக் கழகம் : தஞ்சாவூர்.

பிச்சமுத்து, ந., 1982 — திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைளும்

பிள்ளை, கே.கே., 1994 — தென்னிந்திய வரலாறு (முதல் பகுதி) பழனியப்பா பிரதர்ஸ்: சென்னை (6ஆம் பதிப்பு).

மாணிக்கனார், அ. (உரை ஆ.) 1999 — அகநானூறு, வர்த்தமானன் பதிப்பகம் : சென்னை.

மாணிக்கனார், அ., 1999அ — பதிற்றுப்பத்து, வர்த்தமானன் பதிப்பகம் : சென்னை.

மாணிக்கனார், அ., 1999ஆ — குறுந்தொகை, வர்த்தமானன் பதிப்பகம் : சென்னை.

மாணிக்கனார், அ., 1999இ — நற்றிணை, வர்த்தமானன் பதிப்பகம் : சென்னை.

ஜெயா, வ., 1989 — பாரதி மொழிநடை, ஜெயா பதிப்பகம் : மதுரை.

ஜெயா, வ., 1994 — பக்தி இலக்கிய உருவாக்கம், முத்து பதிப்பகம் : விழுப்புரம்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| தமிழக நாட்டுப்புறக் கலைகள் | 55.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| சங்ககாலக் காசு இயல் | 30.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | 50.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| Social Heritage of Tamils | 75.00 |

Pub.No. 473 **சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்** 30.00